Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

திருமண மண்டபம்
திருமண மண்டப அலங்காரம்
மணப்பெண் அலங்காரம்
திருமண கார் சேவை
Honey moon room
Tilko Jaffna City Hotel
021 222 5969
(C/1615)

முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 30 செவ்வாய்க்கிழமை (12.06.2012) பக்கங்கள் 20 ஓசை - 255


அழகிய நகரம்! 03


பொறுப்புக்கூறத் தேவையில்லை 06


வரப்பிரசாதம் 13


பச்சிலைகளின் பயன்பாடு 12


மனிதனா? மிருகமா? 11

# சாட்சியமளித்த மக்களை சந்திக்கவுள்ள ஐ.நா. குழு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியம் அளித்த மக்களுடன் கலந்துரையாட ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணையாளரின் பணியகம் திட்டமிட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது சரணடைந்த விடுதலைப் புலிகளின் போராளிகள் காணாமற் போயிருப்பதாக உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில், நல்லிணக்க ஆணைக் குழுவின் முன்னிலையில் சாட்சியம் அளித்த காணாமற் போனவர்களின் உறவினர்களிடம் கலந்துரையாட ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உண்மைகளைக் கண்டறியும் குழு திட்டமிட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் பணியகத்தினால் விடுக்கப்பட்ட இந்த வேண்டுகோளை அரசாங்கம் நிராகரிக்குமாயின், இக்கலந்துரையாடல்கள் மூன்றாவது தரப்பின் ஊடாக இடம்பெறலாம் எனவும் இவ்வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இலங்கை விஜயத்துக்கு முன்னதாக உண்மைகளைக் கண்டறியும் குழு ஒன்றை அனுப்புவதற்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் பணியகம் அரசாங்கத்துக்கு விடுத்த வேண்டுகோளின் அடிப்படையிலேயே இக்கலந்துரையாடலுக்கு

19 ஆம் பக்கம் பார்க்க

## மருத்துவர்கள் போராட்ட முஸ்தீபு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனை நிர்வாகத்திற்கு எதிராக யாழ். மருத்துவர்கள் சங்கம் கண்டனப் போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வைத்தியசாலை நிர்வாகம் மருத்துவர்களின் நியமனம் மற்றும் இடமாற்றம் தொடாப்பாக கடைப்பிடித்து வரும் கொள்கையை கண்டித்தே இப்போராட்டம் நடத்த முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக யாழ். மருதுவர்கள் சங்கம் இன்று மிக முக்கிய ஆலோசனைக்

19 ஆம் பக்கம் பார்க்க

## தமிழ் மக்களின் பாதுகாப்பில் ஆக்கபூர்வமான செயற்பாடு

### அரசை கோருகிறது இந்தியா



(சென்னை)

இலங்கைத் தமிழர்களின் அரசியல் தீர்வு விடயத்தில் இந்தியா தெளிவான நிலைப்பாட்டில் உள்ளது. குறிப்பாக வடக்கு, கிழக்கு மீள் குடியேற்றம் தொடர்பில் இந்தியா மிகுந்த அவதானம் செலுத்தி வருவதாக காங்கிரஸ் கட்சியின் தமிழக எம்.பி. சுதர்சன நாச்சியப்பன் தெரிவித்தார். ஆகவே இலங்கை அரசாங்கம் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின்

19 ஆம் பக்கம் பார்க்க

## அமெரிக்க கொள்கையையே தூதுவர் சிஸன் வலியுறுத்தினார்

### தெளிவுபடுத்தியது தூதரகம்

(கொழும்பு)

இலங்கை தொடர்பான அமெரிக்காவின் நீண்டகால கொள்கையை தூதுவர் மிச்சேல் ஜே.சிஸன் மீளவும் வலியுறுத்தியுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக நியமனம் பெறவுள்ள மிச்சேல் ஜே.சிஸன் அண்மையில் அமெரிக்க காங்கிரஸ் முன்னிலையில் இலங்கை பற்றி விளக்கமளித்தமை தொடர்பில் கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் நேற்றைய தினம் மேற்கண்டவாறு தெளிவுபடுத்தியுள்ளது.

இது தொடர்பாக தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் புதிய தூதுவராக பிரேரிக்கப்பட்டுள்ள மிச்சேல் ஜே.சிஸன், அவரது நியமனத்தை உறுதி செய்வதன் ஒரு பகுதியாக கடந்த 6 ஆம் திகதி அமெரிக்க செனட்டின் வெளியுறவுக் குழு முன்னிலையில் சாட்சியமளித்தார்.

வடக்கில் இராணுவக் குறைப்பு, மாகாண சபை தேர்தல், மனித உரிமை

19 ஆம் பக்கம் பார்க்க

## இருளில் தள்ளிவிட்டுள்ள வெளிவிவகார அமைச்சு

### கவலை கொள்ளும் தமரா

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 20 ஆவது அமர்வு அடுத்தவாரம் ஆரம்பமாகவுள்ள நிலையில், இந்தக் கூட்டத்தொடருக்கான தயாரிப்பு ஏற்பாடுகள் தொடர்பாக தமக்குத் தகவல் எதுவும் தெரிவிக்காமல் வெளிவிவகார அமைச்சு இருளில் விட்டுள்ளதாக ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி தமரா குணநாயகம் குற்றம்சாட்டியுள்ளார்.

இந்தக் கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பாக பொறுப்புக்கூறல் மற்றும் ஊடக உரிமைகள் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து அரசசார்பற்ற நிறுவனங்கள் பரப்புரை செய்யக்கூடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜெனிவாக் கூட்டத்தொடர் ஆரம்பமாக இன்னும் ஒரு வாரமே உள்ள நிலையில், இவற்றை எதிர்கொள்வது குறித்த

19 ஆம் பக்கம் பார்க்க

## சம்பள உயர்வு வழங்கக்கோரி யாழ். பல்கலையில் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

தமது உயர்கல்வி அமைச்சின் செயலாளருடன் செய்துகொள்ளப்பட்ட கூட்டு உடன்படிக்கையை அமுல்ப்படுத்துமாறும் 25 வீத சம்பள அதிகரிப்பு வழங்கப்படவேண்டுமெனவும் கோரி நாடளாவிய. ரீதியில் பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் மேற்கொண்டுவரும் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தின் தொடர்ச்சியாக நேற்றைய தினம் யாழ். பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுத் தலைவரின் கொடும்பாவியை எரித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற

19 ஆம் பக்கம் பார்க்க



## கட்டுத்துவக்கு வெடித்து இளைஞர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

வேட்டைக்கு வைக்கப்பட்டிருந்த கட்டுத்துவக்கு வெடித்ததன் காரணமாக படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இளைஞர் ஒருவர் சிகிச்சை பயனின்றி நேற்றுக்காலை மரணமடைந்தார்.

கடந்த் முதலாம் திகதி வடமராட்சி கிழக்கு முள்ளியான் கோவில் பகுதியில்

19 ஆம் பக்கம் பார்க்க

## ‘உதயன்’ பத்திரிகைக்கு எதிரான அவதூறு வழக்கு விசாரணை இன்று

(யாழ்ப்பாணம்)

‘உதயன்’ உரிமையாளர் மற்றும் அதன் ஆசிரியருக்கு எதிராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆயிரம் கோடி ரூபா அவதூறு வழக்கு இன்று யாழ் மாவட்ட நீதிபதி ஆனந்தராஜா முன்னிலையில் விசாரணைக்கு வருகிறது.

இவ் வழக்கில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சட்டத்தரணி தேவராஜன் ரெங்கன் பிரதிநிதித்துவப்படுத்தும் அதே வேளை ‘உதயன்’ உரிமையாளர் சரவணபவன் மற்றும் அதன் ஆசிரியர் கானமயில்நாதன்

19 ஆம் பக்கம் பார்க்க

## மரண தண்டனை இரத்து; புதிய விசாரணைக்கு உத்தரவு

### புத்தூர் கொலை வழக்கில் திருப்பம்

(திருநெல்வேலி)

புத்தூர் கொலை வழக்கில் யாழ். மேல் நீதிமன்றினால் விதிக்கப்பட்ட மரண தண்டனையை கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் இரத்துச் செய்து தீர்ப்பளித்துள்ளது.

இவ்வழக்கில் 2001 ஆம் ஆண்டு ஆனி மாதம் 27 ஆம் திகதி இராசரத்தினம் உதயகுமார் என்பவரை கொலை

19 ஆம் பக்கம் பார்க்க

# யாழ். சிறுவர் நீதிமன்றுக்கு புதிய நீதவான் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட நீதிபதி மாணிககவாசகர் கணேசராஜாவின் வேண்டுகோளின் பிரகாரம் யாழ். சிறுவர் நீதிமன்றின் எல்லைகள் வரையறுக்கப்பட்டுள்ளதுடன் வருகின்ற 18.06.2012 ஆம் திகதி அமுலுக்கு வரும் வகையில் சிறுவர் நீதிமன்ற நீதவான் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

சிறுவர் நீதிமன்றம் தொடர்ச்சியாக ஐந்து நாட்களும் நடைபெற வேண்டுமெனவும், அதற்குப பெண் நீதிபதியொருவரே பொருத்தமானவர் என நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கு தெரிவித்ததை அடுத்து மல்லாகம் மேலதிக நீதவானாகவும், மேலதிக மாவட்ட நீதிபதியாகவும் பணியாறறும் திருமதி க.ஜீவராணியை நீதிச்சேவை ஆணைக்குழு நியமித்துள்ளது.

சமுதாய சீர்திருத்தப் பிரிவும் யாழ். நீதிமன்றில் ஆரம்பித்ததைத தொடர்ந்து நீண்டகாலமாகத் தண்டப்பணம் செலுத்த முடியாமல் சிறையில் வாடும் கைதிகளை சமுதாய சீர்திருத்தத்திற்கு முற்படுத்துவதற்கு நீதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார். இதன் மூலம் கைதிகள் திருந்தி வாழவும், சிறைச்சாலைகளில் இடநெருக்கடி குறையும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.


யாழ். குடாநாட்டில் அதிகரித்துவரும் போதைவஸ்துப் பாவனையைக் கட்டுப்படுத்தி அதற்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் வகையில் புனரவாழ்வு நிலையம் உருவாக்கப்பட வேண்டுமென நீதி அமைச்சின் செயலாளர் திருமதி கமலினி டீ சில்வா ஏற்கனவே உறுதியளித்திருந்தார்.

சிறுவர் நீதிமன்ற செயற்பாடுகளும் சமுதாய சீர்திருத்தப் பிரிவும் தமது கோரிக்கைகளை ஆரம்பித்ததையடுத்து சமூக ஆர்வலர்கள், கல்விமான்களின் கோரிக்கைக்கு அமைவாக இவ்வாறான புனர்வாழ்வு நிலையம் ஒன்றையும் ஆரம்பிப்பதற்கு நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா நடவடிக்கை எடுத்துள்ளார்.

மேலும் யாழ். முஸ்லிம்களின் விவகாரத்து சம்பந்தமான பிரச்சினைகளை யாழிலேயே தீர்வு காணும் பொருட்டு யாழில் காதி நீதிமன்றம் ஒன்றை உருவாக்கவும் நீதியமைச்சுக்கு யாழ். நீதவான் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். யாழ். முஸ்லிம்களும், கல்விமான்களதும் வேண்டுகோளை அடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே முஸ்லிம் பகுதிகளில் முஸ்லிம் சிவில் பாதுகாப்புக்குழு யாழ். நீதவான் மாணிக்கவாசகர் கணேசராஜாவினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எஸ்)

# தீயில் கருகிய குடும்பஸ்தர்



(யாழ்ப்பாணம்)

மது மயக்கத்தில் குடும்பஸ்தர் பெற்றோல் ஊற்றி தனக்குத்தானே தீ மூட்டியுள்ளார். இவ்விபரீத சம்பவம் கிளிநொச்சி புளியம்பொக்கணைப் பகுதியில் நேற்று முன்தினம நள்ளிரவு 12.00 மணிக்கு இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த பா.சநதிரகுமார் (வயது-35)என்ற குடும்பஸ்தரே இவ்வாறு தீயில் எரிந்து உடல் கருகிய நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பாகத் தெரிய வருவதாவது, கூலி வேலை செய்யும் குறித்த குடும்பஸ்தர் வேலை முடிந்த பின்னர் கசிப்பு குடித்துவிட்டு வீட்டிற்குச் சென்று மனைவியுடன் தகராறில் ஈடுபட்டுள்ளார். பின்னர் தனக்குத்தானே பெற்றோல் ஊற்றி தீ மூட்டியுள்ளார். இதனால் கடுமையான தீக் காயங்களுக்குள்ளாகியுள்ளார். (எஸ்)




வட்டுமேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் அண்மையில் கோலாகலமாக நடாத்திய மகளிர்தின விழாவில் அதிதிகளாகக் கலந்துகொண்டவர்களை இங்கே காணலாம்.

# நல்லூர் வரலாற்றுக் கழகம் ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூரில் சரித்திரப் பிரசித்திபெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல இடங்கள் காணப்படுகின்றன. அவை தற்போது தனியார் பாவனைக்குட்பட்டிருப்பதால் அவற்றைப் பேணிப் பாதுகாக்க முடியாத நிலை காணப்படுகிறது. எனவே அதனைப் பேணிப் பாதுகாப்பதற்கு நல்லூர் வரலாற்றுக் கழகம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்வதற்கான ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் 19.06.2012 ஆம திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 4.00 மணிக்கு முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# தங்கநகை கொள்ளை பஸ்ரியன் சந்தியருகில் சம்பவம்

யாழ். பஸ்ரியன் சந்தி அச்சுக்கூட வீதியில் பட்டப்பகலில் துவிச்சக்கர வண்டியில் தனது பிள்ளையை ஏற்றிக்கொண்டு பிரதான வீதியை நோக்கி வந்துகொண்டிருந்த பெண்ணைப் பின்தொடர்ந்த மோட்டார் சைக்கிள் திருடன் அப்பெண் அணிந்திருந்த ஒன்பதரைப் பவுண் தங்க நகையை அபகரித்துக்கொண்டு தப்பியோடியுள்ளான்.

நேற்று நண்பகல் 12.30 மணியளவில் நடைபெற்ற இச் சம்பவத்தில் குறித்த பெண் பிள்ளையைப் பாடசாலையில் இருந்து அழைத்துக்கொண்டு வரும் வழியிலேயே இச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

சம்பவத்தில் குறித்த திருடன் பிரதான வீதியின் வழியாக எங்கு சென்றான் என்பதை அறியாத குறித்த பெண் பஸ்ரியான் சந்தியிலும் சார்ள்ஸ் சந்தியிலும் நின்றவாறு தமக்கு நிகழ்ந்த துயரத்தை அங்கு நின்றவர்களிடம் கூறியுள்ளார். குறித்த பெண் குருநகரைச் சேர்ந்தவர் எனவும் தெரிய வருகின்றது. (பா)

# கேள்வி அறிவித்தல்

## நெடுந்தீவுப் பிரதேச சபை

**யாகப்பர் கோவில் காளாமுனை (NELSIP/NP/J/DEL PS/W/30)**
**முருகன் கோவில் கோபால்பிட்டி (NELSIP/NP/J/DEL PS/W/31)**
**வீதிகள் புனரமைத்தல்**

01) தலைவர், பெறுகைக்குழு, நெடுந்தீவுப் பிரதேசசபை, நெடுந்தீவு தகுதிவாய்ந்த ஒப்பந்த காரரிடமிருந்தும், அனுமதிக்கப்பட்ட உள்ளூர் நிறுவனங்களிடமிருந்தும் அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.

02) கேள்விபெற தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படாதவரும் அட்டவணை முறையில் காட்டியபடி பொருத்தமான தரத்தின் வீதி அமைப்புக்கான இக்ராட் பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தலும் உள்ளூரில் அனுமதிக்கப்பட்ட நிறுவனங்களாயிருத்தல் வேண்டும்.

03) தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகிறது.

04) தேவையான தகமைகள் கேள்வி ஆவணம் மேலதிக தகவல்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

05) ஆர்வமுள்ள கேள்விக்காரர்கள் தலைவர், நெடுந்தீவுப் பிரதேச சபை, நெடுந்தீவு (தொலைபேசி 0213216476) இல் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

06) ஆர்வமுள்ள கேள்விக்காரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், நெடுந்தீவுப் பிரதேச சபை எனும் இடத்திலிருந்து 12-06-2012 ஆம் திகதியிலிருந்து 22-06-2012 வரை காலை 9.00 மணிக்கும் மாலை 3.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 1000 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

07) கேள்வி இருபிரதிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் அல்லது பதிவுத்தபால் மூலம் "தலைவர், நெடுந்தீவுப் பிரதேச சபை, நெடுந்தீவு" எனும் முகவரிக்கு 25.06.2012 ஆம் திகத நண்பகல் 10.30 மணிக்கு, முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும் பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரியின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08) கேள்விப்பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

09) கேள்விகள் திறப்பதற்கு முன்னரான கேள்விச் சபைக்கூட்டம் பிரதேச சபை, நெடுந்தீவு எனும் முகவரியில் பிரதேச சபைக் கட்டடத்தில் 18.06.2012 அன்று மாலை 2.30 மணியளவில் நடைபெறும். இக்கூட்டத்திற்கு கேள்விதாரர்கள் தங்கள் சொந்தச் செலவில் கலந்து கொள்ளமுடியும்.

| கேள்வி எண் | கேள்வி விபரம் | மதிப்பீட்டு தொகை | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் • கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| NELSIP/NP /J/Del P.S/W/30 | யாகப்பர் கோயில் காளாமுனை வீதி | 3203050.00 | 03 மாதங்கள் | M7/C8 அல்லது அதற்குமேல் | 35,500.00 | 02.10.12 வரை |
| NELSIP/NP /J/Del P.S/W/31 | முருகன் கோயில் கோபாலப்பிட்டி வீதி | 688994.00 | 03 மாதங்கள் | M7/C8 அல்லது அதற்கு மேல் | 6500.00 | 02.10.12 வரை |


நெடுந்தீவுப் பிரதேச சபை,
நெடுந்தீவு,
12.06.2012

(C/1576)

தா.றெக்சியன்,
தலைவர், உள்ளூர் அதிகாரசபை,
பெறுகைச்சபை.







வவுனியா மறவன்குளம் கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சனசமூக நிலையத்தினை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி திறந்து வைப்பதையும், கலந்து கொண்ட கிராம மக்களையும் கிராமத்திலுள்ள ஒருவருக்கு உதவிப் பொருட்களை வழங்குவதையும் காணலாம்.

# குடிநீர் வழங்கும் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும்



(வவுனியா)

ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஏனைய திட்டங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டுவரும் குடிநீர் வழங்கும் வேலைத்திட்டங்களை மேலும் விரிவுபடுத்தி மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதற்கு வழிவகுக்க வேண்டும் என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வவுனியா அரச செயலகத்தில் வவுனியா மாவட்ட நீர் வழங்கல் வடிகாலமைப்பு தொடர்பில் நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் குனவர்த்தனவுடன் இடம்பெற்ற உயர்மட்ட கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எல்லா மக்களுக்கும் தரமான குடிநீர் கிடைக்கவேண்டும் எனவேதான் குடிநீர் வழங்கும் வேலைத்திட்டங்களில் உள்ளடக்கப்படாத பிரதேசங்களையும் உள்ளடக்கி அதனை மேலும் விரிவுபடுத்தி மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதற்கு வழி சமைக்க வேண்டும்.

இலங்கையிலேயே அதிகளவு கல்சியம் கொண்ட நீர் வவுனியா மாவட்ட நிலத்தடி நீர் காணப்படுவதால் இங்கு மக்களுக்கான பாதுகாப்பான குடிநீர் மிகமிக அவசியமாக காணப்படுகிறது எனவும் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிஸ்சந்திர தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஸ் குனவர்த்தன, கைத்தொழில் வணிகத்துறை அமைச்சர் றிசாட் பதியுதீன், வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உனைஸ் பாரூக், நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சின் செயலாளர், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உயரதிகாரிகள், பிரதேச செயலர்கள், சுகாதார அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# கரம்பைக் குறிச்சி கிழக்கு வீதி 60 வருடங்களின் பின் புனரமைப்பு


(வரணி)

வரணி - கரம்பைக்குறிச்சி கிழக்கு அ.த.க பாடசாலை வீதி வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன.

இவ்வீதி 60 வருடங்களாக எவ்வித புனரமைப்பு வேலைகளும் இன்றி மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்திருந்தது. எனினும் தற்போது மேற்படி திட்டத்தின் கீழ் குறித்த பாடசாலை வரை புனரமைப்பு வேலைகள் இடம்பெற்றுள்ளன.

இவ்வீதி சேதமடைந்திருந்த போது பாடசாலை மாணவர்கள் பொதுமக்கள் பல இன்னல்களை எதிர்நோக்கியிருந்த நிலையில், தற்போது புனரமைப்பு செய்யப்பட்டுள்ளதால் தாம் பெரும் நன்மையடைந்துள்ளதாக தெரிவிக்கின்றனர். (150)

# மணிமண்டபம் அமைப்பு



(யாழ் நிருபர்)

காரைநகர் களபூமி திக்கரை முருகமூர்த்தி கோவிலுக்குப் புதிதாக மணிமண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பல இலட்சம் ரூபாசெலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த மணிமண்டபத்துக்கான கும்பாபிஷேகம் கடந்த வியாழக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

இவ்வாலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வருடாந்த மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழா பத்து நாட்கள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை இரதோற்சவம் மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (101,50)

# இலங்கையில் யாழ்ப்பாணம் மிக அழகிய நகரமாகும்

## இந்திய இளம் பாடகர் ஶ்ரீகாந்த்

(வடமராட்சி)

இலங்கையில் யாழ்ப்பாணம் ஒரு சிறந்த அழகிய நகரமாகும் என தென்னிந்திய பாடகரான ஶ்ரீகாந் தெரவித்துள்ளார்.

வல்வெட்டி வேரலில் பிள்ளையார் ஆலய தீர்த்த உற்சவத்தை முன்னிட்டு வல்வெட்டி இளைஞர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட ராஜன்ஸ் இசை நிகழ்ச்சியில் இந்தியாவிலிருந்து வருகை தந்த ஶ்ரீகாந்த் இதனைத் தெரிவித்தார். இவருடன் பல தென்னிந்திய பாடகர்களும் வருகை தந்திருந்தனர்.



தமிழகத்திலுள்ள பிரபல தொலைக்காட்சியான விஜய் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் ஏயாற்றல் சுப்பர்சிங்கர் நிகழ்ச்சியில் பல விருதுகளைப் பெற்ற 8 வயது நிரம்பிய பாடல் நாயகன் ஶ்ரீகாந்த் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு 6 மணித்தியாலயங்களில் 126 திரைப்படப் பாடல்களைப் பாடி சாதனையைப் படைத்துள்ளதுடன் வடமராட்சி மக்களின் ஏகோபித்த ஆதரவையும் அன்பையும் பெற்றுள்ளார்.

மேலும் ஶ்ரீகாந்தை வடமராட்சியிலுள்ள கலைஞர்களும் பாராட்டி கௌரவித்தனர். இவா தொடர்ந்து மேலைத்தேய வாத்திய கருவிகளை சிறப்பாக இசையமைத்து மக்களைப் பரவசமூட்டினார். (116)

# வடமராட்சி மாணவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி

(வடமராட்சி)

வடமாகாண கல்வி வலய தமிழ் மாணவர்களுக்கு ஆளுமையை வளர்க்கும் நோக்கில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் ஏற்பாட்டில் மக்ரோசொப் நிறுவனத்தின் அனுசரணையில் தலைமைத்துவப் பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சி கொழும்பு - மகரகம தேசிய இளைஞர் சேவை மன்றததில் கடந்த 6, 7, 8 ஆம் திகதி காலை 7.30 இரவு 8.00 மணிவரை நடைபெற்றதுடன், சுற்றுலா நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளன.

மேற்படி தலைமைத்துவ பயிற்சியில் கணினியினால் ஏற்படும் பயன்கள், தலைமைத்துவப் பண்புகள், கல்வியியல் போன்றவை கற்பக்கப்பட்டதுடன், நாடாளுமன்றம், ஜனாதிபதி அலரிமாளிகை, மிருகக் காட்சிசாலை, சுற்றுலா கடற்கரை ஆகியன அம் மாணவர்களுக்கு காணபிக்கப்பட்டது. க.பொ.த.சாதாரண பரீட்சைக்கு தோற்றி க.பொ.த. உயர்தரத்திற்கு செல்லுகின்ற மாணவர்களுக்கு வழங்கப்படும் தலைமைத்துவப் பயிற்சியில் வடமராட்சி மாணவர்களுடன் முல் லைத்தீவு கல்வி வலயத்துக்குட்பட்ட 50 மாணவர்களும், கிளிநொச்சி கலவி வலயத்திற்குட்பட்ட 100 மாணவர்களும், துணுக்காய் கல்வி வலயத்தற்குடபட்ட 50 மாணவர்களும் கலந்து பயன்பெற்றனர். (116)

# துப்புரவாக்கும் பணி

(அரியாலை)

மண்டைதீவு முத்துமாரியம்மன் ஆலய கும்பாபிஷேகத்தை முன்னிட்டு ஆலயசூழலை துப்புரவாக்கும் பணிகளில் ஊர்மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

வெளிநாடுகளிலும் இங்கும் வசிக்கும் மண்டைதீவு மக்களினால் இவ்ஆலயம் நவீன முறையில் புனரமைக்கப்பட்டு வருவதுடன் எதிர்வரும் ஆடிமாதம் 5 ஆம் திகதி இவ்வாலய கும்பாபிஷேகம் இடம்பெற தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சிரமதானப் பணிகளை பிரதிஞாயிறு தோறும் மேற்கொள்வதென ஊர்மக்கள் முடிவு செய்துள்ளனர். இதனை அடுத்து ஆலய நிர்வாகத்தினர் அன்னதானம் இவர்களுக்கு வழங்கினர்

மேலும் ஆலய நிர்வாக சபைக்கூட்டத்தையும் பிரதி ஞாயிறு தோறும் பிற்பகல் 12.30 மணியளவில் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சபை செயலாளர் தெரிவித்தார். (23)

# வடமராட்சி கிழக்கிற்கு முதன்முறையாக மின்சாரம்

## – மகிழ்ச்சியில் மக்கள் –

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திற்கு மின்சாரம் கிடைத்ததைத் தொடர்ந்து இப்பிரதேசத்தில் உள்ள மருதங்கேணி மற்றும் தாளையடி பிரதான வீதிக்கு வீதிமின்விளக்குகள் பொருத்தப்பட்டதையிட்டு பிரதேச வாசிகள் மகிழ்ச்சியடைகின்றனர்.

இப்பிரதேசத்திற்கு லக்சபான மின்சாரம் நேரடியாகக் கிடைத்ததைத் தொடந்து இப்பிரதேசத்தில் உள்ள பிரதான வீதிகளான மருதங்கேணி - தாளையடி வீதி மற்றும் மக்கள் செறிந்து வாழும் கிராமப் பகுதிகளிலும் மின் விளக்குகள் பொருத்தி ஒளிரப்படவேண்டும். அதற்காக பருத்தித்துறை பிரதேச சபையில் ஒதுக்கப்படும் நிதியில் ஒரு பகுதி இப்பிரதேசத்திற்கும் வழங்க வேண்டும். அதுவும் பயனுள்ளதாக அமைய வேண்டும் என சபையின் எதிர்க்கட்சித் தலைவர் ஐ.ஶ்ரீரங்கேஸ்வனால் தெரிவிக்கப்பட்டது.

சபையின் மாதாந்த கூட்டத் தொடரின் போதே ஆளும் கூட்டமைப்புத் தலைவர் பூ.சஞ்சீவனிடம் கோரிக்கை விடுத்திருந்தார். இக் கோரிக்கையை ஏனைய ஆளும் கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டதையடுத்து இதற் கான முதற்கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்நிதியின் ஒதுக்கீட்டிலிருந்து 30 வீதி மின் விளக்குகள் கொள்வனவு செய்யப்பட்டு அவற்றில் வீதி மின்விளக்குகள் மருதங்கேணி - தாளையடி பிரதான வீதிகளிலும், எஞ்சிய மின் குமிழ்களை தாளையடி மீள் குடியேற்ற கிராமத்திலும் பொருத்தப்பட்டுள்ளன.

சுமார் இரண்டு மைல்களுக்கு மேல் நீளமான மருதங்கேணி - தாளையடி வீதி மற்றும் இருளில் சூழ்ந்திருந்த தாளையடி கிராமத்திற்கும் வீதி மின்விளக்குகளை சம்பிரதாய பூர்வமாக எதிர்க்கட்சித் தலைவர் ஐ.ஶ்ரீரங்கேஸ்வரன் கிராம மக்கள முன்னிலையில் ஆரம்பித்து வைத்தார்.

மிகவும் பின்தங்கிய கிராமமாக இருக்கும் மேற்படி பிரதேசங்களுக்கு வீதி மின்விளக்குகளை பொருத்தி மின்சாரம் வழங்கியமையால் இக்கிராமங்கள் ஓரளவு புத்தொளி பெற்றுள்ளதாக அப்பிரதேச வாழ் மக்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். (116)

**உழைப்பவனின் காலம் பொன் ஆகுகிறது.**
**உழைக்காதவனின் பொன் காலமாகுகிறது.**
-பொன்மொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
விளம்பரப் பணிமனை இல: 0212220188
thinamurasu@live.com

## நல்லது செய்ய ஆற்றீராயினும்...

தேசியக் கொடியை ஏற்ற மறுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினருக்கு எதிராக விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கேட்டுள்ளது. இந்தவிதமான எதிர் இனவாதப் பேச்சுகளைத தூண்டி விடுவதுதான் அந்தக் கொடியேற்ற மறுப்பின் பிரதான நோக்கம் என்பதை விளங்கிக் கொள்வதில் யாருக்கும் சிரமமிருக்காது.

ஏனெனில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேசத்தின் இறைமைக்கு விசுவாசமாக சத்தியப்பிரமாணம் செய்ய மறுத்தவர்களில்லை. தேசத்தின் சிங்க இலச்சினையுடன் கூடிய சிறப்புச் சலுகைகளுடனான இராஜதந்திரிகளுக்குரிய பாஸ்போர்ட்டை மறுத்தவர்களில்லை. நாட்டின் சிறப்புக் குடிமக்களாகத் தங்களைப் பிரகடனப்படுத்தும் எந்த பாராளுமன்ற சலுகைகளையும் மறுத்தவர்களில்லை. வரிவிலக்குடனான ஆடம்பரக் கார்கள் தொடக்கம் தேசிய பொலிசாரின் பாதுகாப்பு வரை எல்லாவற்றையுமே ஏற்றுக் கொண்டவர்கள்தான்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அரச நிகழ்வில் கலந்து கொண்ட அந்த உறுப்பினர், சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா மூன்று முறை கேட்டுக் கொண்ட போதும் தேசியக் கொடியை ஏற்ற மறுத்த வீரமானது, முன்னர் கொழும்பில் குமார் பொன்னம்பலம் அவர்கள் சோதனைச் சாவடியில் அடையாள அட்டை காட்ட மாட்டேன் என மறுத்து பத்திரிகைகளுக்குப் பரபரப்புச் செய்தியாக்கியது போன்ற வீரம்தான். அப்போது பிரதமராக இருந்த சிறீமாவோ பண்டாரநாயக்க, அவரை விடும்படி காவலருக்குச் சொன்ன பிறகுதான் செல்ல மகனுக்கேயுரிய கோபத்துடன் வெளியே வந்த தமிழ்வீரம் அவருடையது.

இப்போது விநாயகமூர்த்தி அவர்களுடைய இந்த வீரமும் தமிழ் மக்களை வெறுமனே உசுப்பேற்றிப் பரபரப்பு லாபம் தேடும குசும்பே தவிர, நமது மக்களுக்கு நல்லது நடப்பதற்கான பொறுபபுணர்ச்சியைக் காட்டும் செயல் அல்ல. த.தே.கூட்டமைப்பின் தலைவரே, நல்லிணக்கத்தை விரும்பும் இந்த நாட்டுப் பிரஜை என்ற வகையில் தேசியக் கொடி ஏந்தினேன், ஏந்துகிறேன், ஏந்துவேன் என்று இவர்கள் எல்லார் முன்னாலும் வாதிட்டு நிறுவிய பிறகு, இவரது இந்தச் செயல் தனக்குத் தனிப்பட உணர்ச்சிகர வாக்குகளைச் சுருட்ட நினைக்கும் 'ஸ்டண்ட்'தான்!

அல்லது, யூ.என்.பி. தலைவருடனென்றால் தேசியக் கொடிக்கு மரியாதை தரலாம்; சுதந்திரக் கட்சி அமைச்சருடன் அது இயலாது என்ற தேசியக் கொள்கை ஏதும் கூட்டமைப்புக்கு இருக்கிறதோ என்னவோ!

இந்தப் பயனற்ற சவடால்தனமான எதிர்ப்புக்களால் மக்களின் ஆவேச உணர்வுகளைத் தூண்டி தேர்தல்களில் வாக்கு வேட்டையாடிக் கொண்டிருக்கலாமே தவிர நல்லிணக்கத்திற்கோ நமது பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வுக்கோ மக்களின் சுபீட்சமான வாழ்வுக்கோ எந்தவொரு பயனுள்ள நகர்வையும் ஏற்படுத்த முடியாது.

புலம்பெயர் தமிழர்கள் தங்களது புலிக்கொடி தூக்கிய எதிர்புக்களால், வெளிநாடுகளிடம் ஒவ்வொன்றாக அதிருப்தியையும் சலிப்பையும் உருவாக்கிக் கொண்டிருப்பதுடன், இங்கே சிங்களப் பெரும்பான்மை மக்களிடமும் எதிர்ப்புணர்ச்சியை அதிகரித்த வண்ணமிருக்கிறார்கள். அவர்கள் அங்கே செய்து கொண்டிருப்பதையெல்லாம் நமது பலம் என்று கருதிக் கொள்ளும் மாயையினால்தான் இங்கே விநாயகமூர்த்தி போன்றவர்களும் அசட்டு 'வீரம்' காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

நமது மக்களின் அவலங்கள் நீங்குவதை விரைவுபடுத்தவும், வாழ்வை மேம்படுத்தவும் உதவக்கூடிய சாத்தியபூர்வ வழிமுறைகளை எண்ணாமல் இத்தகைய ஒரு ஆதாரமுமற்ற உசார்மடத்தனங்களையே தொடர்ந்து செய்துகொண்டிருப்பதை இவர்கள் நிறுத்த வேண்டும். அன்றேல், இவர்களைவிடத் தீங்கு நமக்கு வேறெங்குமில்லை, வேறெதுவுமில்லை.

- ஆசிரியர் -

# மன்னாரில் 3592 மில்லியனில் கிராமிய குடிநீர்த் திட்டங்கள்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் 3592.5 மில்லியன் ரூபா செலவில் கிராமிய குடிநீர் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை அமைச்சர் தினேஷ் குனவர்தன தெரிவித்தார்.

அடம்பன், விடத்தல்தீவு, நானாட்டான், சிலாபத்துறை, முசலி ஆகிய கிராமங்கள் கிராமிய குடிநீர்த் திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன. மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் மன்னார் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள குடிநீர் திட்டம் தொடர்பாக ஆராயும் வகையிலான கலந்துரையாடல் நடைபெற்றது. இதன்போதே மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கான குடிநீர் வசதியை ஏற்படுத்திக்கொடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு அமைச்சர் பணித்தார்.

இதன்போது மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் நிலவிவந்த குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளுக்கு தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை அமைச்சர் தினேஷ் குணவர்தன பணித்துள்ளார்.

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு தினந்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து செல்கின்ற நிலையில் இந்த ஆலயத்தில் குடிநீருக்கு பாரிய தட்டுப்பாடு நிலவிவருகின்றது. இந்த ஆலயத்திற்கு தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் ஊடாக குடிநீர் வசதியை உடனடியாக ஏற்படுத்திக் கொடுக்குமாறு அமைசசர் றிசாட் பதியுதீன் அமைச்சர் தினேஷ் குணவர்தனவின் கவனத்திற்கு கொண்டுவந்தார். இதனைத் தொடர்ந்து இந்த ஆலயத்திற்கு தேவையான குடிநீர் வசதியை ஏற்படுத்திக் கொடுக்குமாறு அமைச்சர் உரிய அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.

இதேவேளை, மன்னாரில் நிலக்கீழ் குடிநீர்த் திட்டம நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மேற்படி வேலைத்திட்டங்களுக்கான நிதி உதவியை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கியுள்ளது.

## இரகசிய பொலிஸ் எனக் கூறி கொள்ளையிட்ட மூவர் கைது

(கொழும்பு)

இரகசியப் பொலிஸார் என தங்களை அறிமுகம் செய்துகொண்ட இளைஞர்கள் மூவர், கண்டி - மாத்தளை நோக்கிப் பயணிக்கும் ரயில் பயணிகளிடம் கொள்ளையில் ஈடுபட்ட நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பயணிகளிடமிருந்து பணம், கையடக்கத் தொலைபேசி போன்றவற்றை இவர்கள் கொள்ளையிட்டுள்ளனர் என்று பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. கட்டுகஸ்தொட்ட பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலொன்றுக்கு அமைய மேற்படி சந்தேக நபர்கள் மூவரும் விசேட பொலிஸ் குழுவொன்றினால் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

# தேசிய அடையாள அட்டை தனிநபர் சட்ட ஆவணமாகும்

(கொழும்பு)

இலங்கையில் தேசிய அடையாள அட்டையானது பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்றது. இது இலங்கையில் மிகவும் முக்கியமான, தனி நபருக்குரிய சட்ட ரீதியான ஆவணம் என்பது குறிப்பிடத்தக்கது.

தேசிய அடையாள அட்டையைப் பெறுவதற்குப் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் அவசியம். பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல்லாமல் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க முடியாது என்று ஆட்பதிவுத் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் ஜி.ஏ.ஆர்.தேவப்பிரிய தெரிவித்துள்ளார்.

ஆனால் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பெரும் எண்ணிக்கையான மக்கள் தமது தேசிய அடையாள அட்டை உள்ளிட்ட முக்கிய ஆவணங்களை இழந்துள்ளார்கள்.

அங்கிருந்த அரச அலுவலகங்களும் யுத்த காலத்தில் தீமூட்டப்பட்டும், மோதல்களிலும் அழிக்கப்பட்டுள்ளன. இதனால் இந்த அலுவலகங்களிலிருந்து தமக்குரிய ஆவணங்களைப் பெற்றுக் கொள்ள முடியாதிருப்பதாக மக்கள் கூறுகின்றனர்.

எனினும் முடிந்த அளவில் தொலைந்து போன பிறப்பத் தாட்சிப் பத்திரம் மற்றும் தேசிய அடையாள அட்டை உள்ளிட்ட முககிய ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கையில் தேர்தலில் வாக்களிப்பதற்கு, வெளிநாட்டுப் பயணத்துக்கான கடவுச் சீட்டு மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு, வங்கிகளில் கணக்கு ஆரம்பிப்பதற்கு, திருமணத்தைச் சட்ட ரீதியாகப் பதிவு செய்வதற்கு, குழந்தைப் பிறப்பை பதிவு செய்வதற்கு தேசிய அடையாள அட்டை அவசியமாகியுள்ளது.

யுத்தகாலத்தில் குறிப்பாக தலைநகர் கொழும்பு, மலையகம் மற்றும் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட சிறுபான்மை இன மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் பாதுகாப்பு கெடுபிடிகளின்போது, மக்கள் தமது அடையாளத்தை உறுதி செய்வதற்கு அதிகாரிகளிடம் சமர்ப்பிக்க வேண்டிய முக்கிய ஆவணமாக தேசிய அடையாள அட்டை இருந்தமை குறிப்பிடத்தக்கது என்றார்.

இதேவேளை, வடக்கில் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் மாத்திரம் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் தேசிய அடையாள அட்டை இல்லாதிருப்பதாக ப..வ்ரல் என்ற சுதந்திரமான, நியாயமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பின் நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர் சபாநாயகம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

## இலங்கை மீனவர்கள் இந்தியாவில் கைது

(கொழும்பு)

இந்திய கடல்பகுதியில் அத்துமீறிப் பிரவேசித்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் இலங்கை மீனவர்கள் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தூத்துக்குடி கடற்பரப்பில் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர். இலங்கைக் கொடியுடன் இவர்களின் படகு நின்றபோதே குறித்த ஐவரும் கைது செய்யப்பட்டனர்.

அதன்பின்னர் கைது செய்யப்பட்ட மீனவர்கள் தூத்துக்குடி பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டனர். இவர்கள் ஐவரும் நீர்கொழும்பைச் சேர்ந்த சிங்கள மீனவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மின் தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த மின்தடை பற்றிய செய்தியில் இடம்பெற்றிருந்த இடங்களுக்கு மேலதிகமாக 13.06.2012 புதன்கிழமை, 15.06.2012 வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணி வரையும் கொன்வெண்ட் பிரதேசம், குருநகர் பிரதேசம், பாசையூர் பிரதேசத்தின் ஒரு பகுதி, கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு ஆகிய இடங்களிலும்,

17.06.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணி வரையும் சுன்னாகம், கொக்குவில், ஆனைக்கோட்டை, நவாலி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# சம்பந்தன் உரையும் சலசலப்பும்

- என்.சத்யமூர்த்தி கட்டுரையிலிருந்து

முன் எப்போதும் இல்லாத அளவிற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவர் சம்பந்தனின், மட்டக்களப்பு பேருரை பிரச்சினைக்குரியதாக கருதப்படுகிறது. அவரது கூற்றுகள் தமிழ் சமுதாயத்தின் குரலாக கருதப்பட்டால்,அது தமிழர் ஆதரவு என கருதப்படும் சிங்கள அறிவு ஜீவிகளிடம் எதிர்மறை கருத்துக்களை உருவாக்கி உள்ளது. சம்பந்தனது பேச்சு அவர் தேர்ந்து எடுக்கப்பட்ட தலைவராக செயல்படும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் திட்டமும் தீர்மானமுமாக இருக்குமேயானால், அவரது கருத்தை, அவரது தலைமையிலேயே இயங்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பை சார்ந்த சுரேஷ் பிரேமச்சந்திரன் மறுத்துள்ளார்.

சம்பந்தனின் உரையில் சில முக்கிய கருத்துகள் இடம் பெற்றுள்ளன. ஆனால், ஒன்றை விட மற்றொன்று மிகவும் பிரச்சினைக்குரியதாகவே அந்த கருத்துக்கள் அமைந்துள்ளன. இலங்கையில் உள்ள அனைத்து தமிழ் பேசும் மக்களும் ஒரே சாரியாக அரசியலில் அணி திரள வேண்டும் என்பது தான் அவரது கூற்றில் பிரச்சினையற்ற கருத்து என்று கொள்ள வேண்டும். ஆனால், அதுவே பிரச்சினைக்குரியது.

அரசியலுக்கு அப்பால் தொடர்ந்து வரும் இலங்கை தமிழ் மக்களிடையே ஊடுருவி உள்ள வடக்கு, கிழக்கு என்ற சமூக அலகுகள் ஒரு புறம். அதனுள்ளே இன்னமும் பற்றி, பரவி நிலைபெற்றுள்ள ஜாதி, மதம் குறித்த பிரிவினைகள் மறு புறம். இவற்றிற்கு அப்பால், நகர்ப்புறம் மற்றும் கிராமிய சமுதாயங்களுக்கு இடையே இன்றும் களையப்படாத வேறுபாடுகள் மற்றொரு புறம். இலங்கை சூழலில் இந்த ஒரு வேறுபாடு, குடாவில், தீவுப் பகுதி மக்களையும் வேற்று மனிதர்களாகவே பார்த்து வருகிறது என்ற உண்மை கூட கசக்கும்.

கடந்த பெப்ரவரி மாதம் 27 - 28ஆம் திகதிகளில் நடைபெற்ற நாடு தழுவிய மக்கள் தொகை கணக்கெடுப்பின் முடிவுகள் தெரிந்த பின்னரே, தமிழ் - முஸ்லிம் இனத்தவரிடையேயான சமூக - அரசியல் உறவுகள் குறித்த உண்மை நிலைக்கான சூசகங்கள் வெளிப்படும். அதே சமயம், இந்த இரு பாலரோடு, மலையக தமிழ் மக்கள் எவ்வாறு எல்லாம் சேர்ந்து செயல்பட முடியும் என்பது குறித்தும் ஆலோசிக்கப்படவில்லை. முன்னவர்கள் போராடுவது வாழ்வுரிமை குறித்த விடயம். மலையக தமிழர்களோ இன்னமும் வாழ்வுக்கான உரிமையையே முழுமையாக பெறவில்லை.

சம்பந்தனின் பேச்சில் இருந்த பிரச்சினைக்குரிய விடயங்களில் ஒன்று, தமிழரசுக் கட்சியே கூட்டமைப்பின் முதன்மைக் கட்சி என்பது. ஆனால், ஈபிஆர்எல்எஃப் அமைப்பின் தலைவரான சுரேஷ் அதனை உடனடியாக மறுத்திருப்பது, கூட்டமைப்பினுள் புரையோடிவரும் உள்கட்சி பூசல்களை மேலும் புடம் போட்டு காட்டுகிறது.

முன்னதாக, ஜெனிவா வாக்களிப்பிற்கு முன்னர் கூட்டமைப்பு தலைவர்கள் அங்கு பயணிப்பது மற்றும் யாழ்ப்பாணத்தில் மே தின கொண்டாட்டங்களில் சம்பந்தன் தேசியக் கொடியை கையில் ஏந்தியது போன்ற சம்பவங்களின் போது, சுரேஷ் மற்றும் மாவை சேனாதிராஜா போன்ற தலைவர்கள் உடன் அவரது கூற்றிற்கு முரணாக அறிக்கை விட்டனர். சம்பந்தனை கூட்டமைப்பு தலைவராக ஏற்றுக் கொண்டுள்ளது என்று தொடர்ந்து கூறி வரும் சுரேஷ், அதன் உறுப்பினர்களாக மட்டுமே நேரடியாக நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட சில உறுப்பினர்களை, தமிழ் அரசுக் கட்சி தனது அங்கத்தவர்களாக தத்து எடுத்துக் கொண்டுள்ளதையும் குறை கூறியுள்ளார்.

தனது மட்டு. உரையில், சம்பந்தன் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கும் செய்தி ஒன்றை கூறியுள்ளார். இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதை பிரச்சினைகளுக்கு இடையில் இலங்கையில் தொடர்ந்து வாழ்ந்து வரும் தமிழ் மக்களிடம் விட்டுவிடுமாறு அவர் புலம்பெயர்ந்த தமிழ் மக்களிடம் கூறியுள்ளார். அதே தொனியில், இனப் பிரச்சினையில் இன்னமும் தமிழர்கள் உயிரை இழந்துவிடா வண்ணம், முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளார். அவரது கூற்றின் படி, புலம்பெயர்ந்த தமிழர் குழுக்கள் வழிக்குதவாத வன்முறைப் பாதையை இன்னமும் ஆதரித்து வருகிறது என்றே கொள்ள வேண்டும்.

இந்த விதத்தில் சம்பந்தனின் கருத்து ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதே. ஆனால், அதையொட்டி, இலங்கைத் தமிழ் மக்கள் தங்களது முந்தைய இலக்கான 'தனி நாடு' கோரிக்கையை கை விட்டுவிடவில்லை என்ற தொனியிலும் அவர் பேசியுள்ளது பெருத்த சர்ச்சையை தோற்றுவித்துள்ளது. குறிப்பாக, இனப் பிரச்சினையில் தமிழர் ஆதரவு நிலை எடுத்து வந்துள்ள பல சிங்கள அரசியல் தலைவர்களும் அறிவு ஜீவிகளாலும் கூட சம்பந்தனின் இந்த நிலைப்பாட்டை ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை.

அதே சமயம், அண்மையில் உள்ள தமிழ் நாட்டில் இனப் பிரச்சினை குறித்த விவாதங்களில் அதிரடியாக பேசி வரும் அரசியல் தலைவர்கள் கூட தொடர்ந்து கூட்டமைப்பையும் சம்பந்தனையும் புறக்கணித்தே வருகின்றனர். அவர்களில் பலரும்,



கூட்டமைப்பு ஆதரவு நிலை எடுக்க, யாரோ ஒருவரது சமிக்ஞைக்காக காத்திருப்பதாகவே கருத இடம் உள்ளது. அந்த சமிக்ஞை கூட புலம் பெயர்ந்த தமிழர் குழு ஏதோ ஒன்றில் இருந்தே வர வேண்டி உள்ளது என்றே கருதவும் இடம் உள்ளது.

'தனி நாடு' கோரிக்கை என்று எங்கும் தெளிவு படுத்தாமல் சம்பந்தன் அது குறித்து பேசிய கருத்துகளில் சர்வதேச சமூகத்தையும் உட்படுத்தி உள்ளார். ஜெனிவா வாக்களிப்பை மனதில் வைத்து, இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளின் ஆதரவு தற்போது கிடைத்துள்ள நிலையில் இரத்தம் சிந்தாமலே தமிழ் மக்கள் தங்களது குறிக்கோளை எட்டிவிட முடியும் என்ற வகையில் அவர் பேசியுள்ளார். இது, சர்வதேச சமூகத்தை சிந்திக்க வைத்துள்ளது. இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளின் எண்ணவோட்டம் குறித்து சம்பந்தன் எவ்வாறு பேச முடியும் என்ற கேள்வியும் எழுகிறது.

எது எப்படியோ, சம்பந்தனின் மட்டக்களப்பு பேருரை, தமிழ் கட்சிகளையும் சர்வதேச சமூகத்தையும் சிந்திக்க வைத்துள்ளது. அதே சமயம், அவரது உரையின் போக்கும், அவர் கூறிய மற்றும் கூறாமல் விட்ட கருத்துகளும் இலங்கை அரசிற்கு சம்பந்தன் தலைமை மீது மட்டுமல்லாது, தமிழ் மக்கள் மீதும் மீண்டும் சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது. இனப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணவேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருந்து வந்த நிலையில், நாடாளுமன்ற குழுவின் மூலமே அது சாத்தியம் என்று அரசு புதிய நிலைப்பாட்டை எடுத்தது.

ஆனால் சம்பந்தனின் பேருரையில் இந்த இரு கருத்துகளுமே இடம் பெறாதாது புரியாத புதிராகவே பலருக்கும் அமைந்துள்ளது. அது மட்டுமல்ல, அவர் கூறி விட்டது ஒரு புறமிருக்க, அவர் கூறிய கருத்துக்கள், மிதவாதி என்று கருதப்பட்ட அவரும் இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து தீவிரமான கருத்துகள் கொண்டுள்ளாரோ என்ற சந்தேகத்தை அரசு தரப்பில் ஏற்படுத்தி இருக்கலாம்.

இனப்போர் முடிவுக்கு வந்த கால கட்டத்திலும் கூட்டமைப்பு மேல் இத்தகைய சந்தேகம் இருந்ததாலேயே, அரசு பேச்சுவார்த்தையை தொடங்குவதற்கு காலம் தாழ்தியது என்று எண்ண இடம் இருக்கிறது. அந்த எண்ணம் சிறிதுசிறிதாக மாற, கூட்டமைப்பின் அணுகுமுறையும் அறிக்கைளும் வழியமைத்தன என்றும் கூறலாம். ஆனால், மட்டகளப்பு மாநாட்டிற்கு பின்னால், போருக்கு முந்திய நிலைப்பாட்டை, கூட்டமைப்பின் பிற கட்சிகளைப் போலவே தமிழ் அரசுக் கட்சியும் மாற்றிக் கொள்ளவில்லை என்ற எண்ணமே எதிரொலிக்கிறது.

இதற்கு மாறாக, இது அரசியல் வியூகம் குறித்த மிதவாத போக்கு மட்டுமே என்று இருந்தால், அத்தகைய சமிக்ஞைகள் மட்டுவிலிருந்து கிளம்பவில்லை. இன்னும் சொல்லப் போனால், தனி நாடு குறித்த கொள்கை மாறிவிடவில்லை, அதனை அடைவதற்கான வியூகமே மாற்றப்பட்டுள்ளது என்ற எண்ணத்தையே இது அரசியல் நோக்கர்களிடையே எழுப்பி உள்ளது. இது தான் உண்மை நிலையா? என்று சம்பந்தனோ அவரது கட்சியின். பிற தலைவர்களோ இன்று வரை விளக்கம் அளிக்கவில்லை.

சம்பந்தனுடன் பேச்சுவார்த்தை மூலம் அனைவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வை எட்டலாம் என்று அரசு உண்மையிலேயே எண்ணியிருந்தால், அந்த எண்ணத்தில் தற்போது விரிசல் ஏற்பட்டுள்ளது. அதைப்போன்றே, சர்வதேச சமூகத்தின் அனுமதி இல்லாமலே, அவர்களின் பெயர்களையும் அனாவசியமாக இழுத்துள்ளது, அவர்கள் மீதான இலங்கை அரசு தரப்பில் சிலருக்கு இருக்கும் நியாயமற்ற சந்தேகத்திற்கு எண்ணெய் வார்த்தது போலவே சம்பந்தனின் அறிவிப்பு அமைந்துள்ளது.

சர்வதேச சமூகத்தில் உள்ள நாடுகளின் புதிய தலைமுறை தலைமைகளிடமும் இலங்கை தமிழ் கட்சிகளின் மீதான நம்பிக்கையை வளர்ப்பதற்கு பதிலாக, அவநம்பிக்கையை வளர்ப்பதற்கே இது போன்ற தன்னிச்சையான நிலைப்பாடுகள் விதை விதைக்கும். இடத்தை கொடுத்தால், இலங்கை தமிழ் கட்சிகள் மடத்தை பிடிக்கின்றன என்று போருக்கு முன்பாக பல ஆண்டுகளாக உலக நாடுகள் பலவற்றிலும் நிலவி வந்த கருத்துக்கு மீண்டும் உயிர் கொடுத்து, அதற்கு ஊட்டச்சத்தும் கொடுக்கும் விதமாக இந்த பேருரை அமைந்து விட்டது.

இவற்றில் எதுவுமே இனப் பிரச்சினைக்கு அமைதி தீர்வு காண்பதற்கான வழி அல்ல! மாறாக, 'பிள்ளையார் பிடிக்க...' என்ற பழமொழி தான் நினைவிற்கு வருகிறது.

# அரசின் தவறான கொள்கைகளுக்கு மக்கள் பொறுப்புக்கூறத் தேவையில்லை



(கொழும்பு)

மக்களின் வாழ்க்கை பாரிய நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. இதில் இருந்துதப்பிக்க உழைக்கும் மக்கள் வழிகளை தேடி வருகின்றனர். அரசாங்கத்தை நாங்களே ஏற்படுத்தினோம். அரசாங்கம் எங்களை கவனிப்பதில்லை என்று கூறுவதற்கு காரணம் உள்ளது.

அரசாங்கத்தின் தவறான கொள்கைகளுக்கு உழைக்கும் மக்கள் பொறுப்புக் கூறவேண்டியவர்கள் அல்லர். உழைக்கும் மக்களின் தொழிற்சங்கப் போராட்டங்களை நீதிமன்றம் மூலம் அரசாங்கம் அடக்க நினைக்குமானால், அதனை தோற்கடிக்க வேண்டும் என தேசிய மொழிகள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

மகரகம பிரதேசத்தில் நடைபெற்ற உழைக்கும் மக்கள் சக்தி என்ற பெயரில் புதிய தொழிற்சங்க கூட்டமைப்பு ஒன்றை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சகல அரச ஊழியர்களுக்கும் 2500 ரூபா ஊதிய அதிகரிப்பை பெற்றுக்கொடுப்பது, தனியார் துறை ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தை 12.500 ரூபாவாக அதிகரிப்பது. தோட்டத் தொழிலாளர்களின் தினக் கூலியை 750 ரூபாவாக உயர்த்துவது, அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கான வரிகளை நீக்குவது உட்பட 24 கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக அரசாங்கத்துடன் சம்பந்தப்பட்ட 52 தொழிற்சங்கங்கள் இணைந்து இந்த தொழிற்சங்க கூட்டமைப்பை ஏற்படுத்தியுள்ளன.

மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது. மக்களின் கருத்துக்களுக்கு செவிமடுத்தே அரசாங்கத்தினால் இரத்துச் செய்யப்பட்ட வாழ்க்கைச் செலவு கொடுப்பனவுகளை வழங்க தீர்மானிக்கப்பட்டது. மக்களின் நிலைப்பாடுகளையும் கருத்துக்களையும் புறந்தள்ளிவிட முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 15 குட்டிகளுக்கு பெயர் சூட்டல்



பின்னவலை யானைகள் சரணாலயத்திலுள்ள 15 யானைக் குட்டிகளுக்கு பெயர் சூட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. குறித்த யானைக் குட்டிகளுக்கான பெயர் களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகள் முன்மொழிந்தனர். இந்த 15 யானைக் குட்டிகளும் 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பிறந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

# இரண்டு மில்லியன் கிலோகிராம் நெல் இராணுவத்தினரால் கொள்வனவு

(கொழும்பு)

இராணுவத்தினரின் பயன்பாட்டிற்காக, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள விவசாயிகளிடமிருந்து இதுவரை சுமார் இரண்டு மில்லியன் கிலோகிராம் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வனிகசூரிய தெரிவித்துள்ளார்.

வடமத்திய மாகாணத்தில் தற்போது வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வரும் நெல் கொள்வனவு நடவடிக்கையை மட்டக்களப்பு, அம்பாறை மற்றம் திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலும் விஸ்தரிக்கத் திட்டமிட்டுள்ளாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய இராணுவத்தினர் விரைவில் குறித்த பகுதிக்ளில் உள்ள விவசாய நிலங்களுக்கு நேரடியாகச் சென்று நெல் கொள்வனவில் ஈடுபடுவார்கள்.

அரசாங்கம் அறிவித்துள்ள நிர்ணய விலைக்கு அமைய நெல் கொள்வனவு நடவடிக்கை இடம்பெறுவதால் மக்கள் பெரும் நன்மை அடை வதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இன அடிப்படை குடியேற்றம் பாதக விளைவை ஏற்படுத்தும்

(கொழும்பு)

பல்லின மக்களும் வாழும் கிராமத் திட்டத்தை எவரும் எதிர்க்கக் கூடாது என வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

தேசிய ஒற்றுமையை வலுப்படுத்தும் நோக்கிலேயே அரசாங்கம் இவ்வாறு மூவின மக்களும வாழும் கிராமங்களை உருவாக்க முயற்சிக்கின்றது. இன அடிப்படையில் கிராமங்களில் குடியேற்றங்களை மேற்கொள்வது பாதகமான விளைவினை ஏற்படுத்தும்

எந்தவொரு இனசமூகத்திற்கும் தனித்துவமான கிராமங்களை அமைப்பதனை ஏற்றுக் கொள்ள முடியாது

பல்லின மக்களும் ஒரே கிராமத்தில் வாழக் கூடிய பின்னணி ஏற்படுத்தப்படாவிட்டால் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத் தலைவர் இரா.சம்பந்தன் உள்ளிட்ட சிலர் பிரிவினைவாத கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றனர். இனவாத கோட்பாடுகளின் மூலம் அரசியல் நடத்துவது ஆபத்தானது என அவர் மேலும் தெரிவித்தார்.

# தொழிற்சங்க நடவடிக்கைக்கு ஆதரவு

(கொழும்பு)

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் தொழிற்சங்க நடவடிக்கைக்கு ஆதரவு வழங்க தீர்மானித்துள்ளதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. கல்விசாரா ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு அரசாங்கம் துரிதமாக தீர்வினை வழங்க வேண்டும் என ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் சஞ்ஜீவ பண்டார தெரிவித்துள்ளார்.

இதேவேளை கல்விசாரா ஊழியர்களின் பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை மேற கொள்ள வேண்டும் என பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி மஹீம் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் தொழிற்சங்க நடவடிக்கை தொடர்கிறது.

இந்த நிலையில் பிரச்சினைகள் தீர்க்கப்படும் வரை தொழிங் சங்க நடவடிக்கையை கைவிடப் போவதில்லை.

இவ்வாறு பல்கலைக் கழக கல்விசாரா ஊழியர்களின தொழிற்சங்க ஒன்றியத்தின் இணை செயலாளர் தம்மிக்க எஸ்.பிரியந்த தெரிவித்துள்ளார்.

# சயனைட் குப்பியுடன் கைது

சயனைட் குப்பி ஒன்றை வைத்திருந்த இராணுவ வீரர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். பொலனறுவை புலஸ்திபுர பிரதேசத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த படைவீரரிடமிருந்து கைத்துப்பாக்கி மற்றும் துப்பாக்கி ரவைகளும் மீட்கப்பட்டுள்ளன. சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. விடுதலைப் புலிகளினால் பயன்படுத்தப்பட்ட சயனைட் குப்பியை வைத்திருந்தாரா என்பது பற்றி விசாரணை நடத்தப்பட உள்ளது.

# விமானத்தில் ஒழுக்கவீனம் பயணி பொலிஸாரால் கைது

(கொழும்பு)

டுபாயிலிருந்து வந்த விமாமொன்றில் பயணித்த கொழும்பைச் சேர்ந்த பிரயாணியொருவர் ஒழுக்கவீனமாக நடந்துகொண்டமையினால் கட்டுநாயக்க பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மதுபோதையில் காணப்பட்ட இந்நபர், பிரயாணிகளுக்கும் விமான பணியாளருக்கும் இடையூறு ஏற்படுத்தியதாக ஆரம்பக்கட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது. இச்சந்தேக நபர் வீடியோ திரையொன்றையும் சேதப்படுத்தியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளார்.

# சாரதியின் சாமர்த்தியம்

(கொழும்பு)

தெற்கு அதிவேக வீதியின் வெலிபன்ன நுழைவாயிலுக்கு அருகில் ஏற்பட இருந்த கொடூர விபத்தொன்று சாரதியின் சாமர்த்தியத்தினால் தவிர்க்கப்பட்டுள்ளது.

மஹரகமவிலிருந்து காலி நோக்கிப் பயணித்த தனியார் பயணிகள் பஸ் ஒன்றின் முன் பக்க டயர் கழன்று வீழ்ந்துள்ளது. இதன்போது கடும் பிரயத்தனத்தை மேற்கொண்ட பஸ்ஸின் சாரதி பஸ்ஸை விபத்துக்குள்ளாகாத வகையில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளார்.

# கூடங்குளம் பாதிப்பு பற்றி ஆராய இலங்கை - இந்திய அதிகாரிகள் சந்திப்பு

(கொழும்பு)

கூடங்குளம் அணு விபத்து பேரிடர் மேலாண்மை தொடர்பாக இந்திய அணுசக்தி அதிகாரிகளை இலங்கை அதிகாரிகள் ஜூலை 9 முதல 15 ஆம் திகதிக்குள் புதுடில்லியில் சந்தித்துப் பேச இருக்கின்றனர்.

கூடங்குளம் அணு மின் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்பகுதி மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். அதேபோல், கூடங்குளம் அணு உலையில் விபத்து ஏற்பட்டால் அது இலங்கையையும் பாதிக்கும் என்று அங்குள்ள சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கவலை தெரிவித்து வருகின்றனர்.

இதையடுத்து, இந்தியாவுடன் அணுவிபத்து பேரிடர் மேலாண்மை தொடர்பாக உடன்பாடு செய்து கொள்ள இலங்கை விரும்பியது. இதன் ஒருபகுதியாகவே இந்திய அதிகாரிகளுடன் இலங்கை அதிகாரிகள் பேச்சு நடத்துகின்றனர்.

புதுடில்லியில் நடக்க இருக்கும் சந்திப்பின் போது இரு நாட்டு அதிகாரிகளும் இருதரப்பு உடன்பாடு தொடர்பாக ஆலோசிப்பார்கள் என்று இலங்கையின் அணு சக்தி ஆணைய தலைவர் ரஞ்சித் விஜயவர்த்தன தெரிவித்தார். இலங்கையின் மின்சாரத் துறை அமைச்சராக சம்பிக ரணவக்க பொறுப்பேற்ற பிறகு, இதற்கான பணிகளை மீண்டும் முடுக்கி விட்டார். இதையடுத்து, திருத்தப்பட்ட ஆவணம் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப் பட்டது.

உத்தேசமாக ஜூலை 9 முதல் 15 ஆம் திகதிக்குள் இரு நாட்டு அதிகாரிகளும் சந் திக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது என விஜய வர்த்தன தெரிவித்தார்.

# 3 இலங்கை அகதிகள் இஸ்ரேலில் கைது

(கொழும்பு)

இஸ்ரேலில் சட்டவிரோதமாக தங்கியிருந்த மூன்று இலங்கையர்கள் கைதுசெய்யபட்டுள்ளனர். எனினும், அவர்கள் எந்த இனத்தை சேர்ந்தவர்கள் என்ற விடயம் அறிவிக்கப்படவில்லை.

இஸ்ரேலிய பொலிஸார் நடத்திய சோதனையின்போது இவர்கள் உட்பட்ட தென்சூடான், நைஜீரியா மற்றும் ஐவரி கோஸ்ட் ஆகிய நாடுகளின் சுமார் 150 அகதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் இஸ்ரேலின் உள்துறை அமைச்சில் தம்மை பதிவு செய்துகொள்ளாமை காரணமாகவே கைது செய்யப்பட்டதாக, இஸ்ரேலின் உள்துறை அமைச்சர் எலி இசாய் தெரிவித்துள்ளார். கைதுசெய்யப்பட்ட அனைவரும் ஒரு வாரத்துக்குள் சுயமாகவே இஸ்ரேலை விட்டு வெளியேறுவர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழில் தேர்ச்சி பெறுவதற்கு மொழி விருத்தி அவசியமானது

## – வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர்

(வடமராட்சி)

யாழ்.மாவட்டத்தில் கடந்த வருட க.பொ.த சாதாரண தர பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் 48 சதவீதமான மாணவர்களே தமிழ் மொழிப் பாடத்தில் தேர்ச்சியடைந்துள்ளனர். இதற்கு போதிய மொழித்திறன் விருத்தியின்மை காரணமாக அமைகின்றது என வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் ந. ஆனந்தராஜ் தெரிவித்தார்.

வல்வை மகளிர் வித்தியாலயத்தில் நடைபெற்ற தரம் 6 மாணவர்களுக்கான மொழிவிருத்தி வாசிப்பு முகாம் செயற்பாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், மனிதனாகப் பிறந்தவர்களுக்கு 4 திறன்கள் உண்டு. அதில் கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் போன்றவையாகும்.

அந்த வகையில் ஒரு குழந்தை பிறந்தவுடன் கேட்டல் சக்தியைப் பெறுகின்றது. பின்னர் படிப்படியாக பேசுவதற்கு கற்கிறது. அதன் பின்னர் தான் பாடசாலையில் சேர்ந்து எழுத, வாசிகக் கற்றுக் கொள்கின்றது.


எழுத்தும், வாசிப்புமே மாணவர்களின் உயரிய ஆற்றலுக்கும் மொழித்திறனை வளர்க்கவும் முக்கிய பங்கு வகிக்கிறது. இதனை பெற்றோர்கள் உரிய வகையில் மாணவர்களுக்கு வழங்கவேண்டும்.

பாடசாலை ஆசிரியர்கள் மட்டும் மாணவர்களுக்கு கற்பிப்பதுடன் அம் மாணவர்கள் அதனை மேலும் மேலும் திறம்படச் செய்வதற்கு பெற்றோர்களே ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கம்பர், பேராசிரியர் சிவத்தம்பி, பாரதியார், புலவர் வைத்தியலிங்கம் என்று மாணவர்கள் 4 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு எழுத்தாற்றல் பாடல், நாடகம், வாசிப்பு, பேச்சு, அபிநயம் என்பன கற்றுக கொடுக்கப்பட்டது.

வளவாளர்களாக வல்வை மகளிர் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், ஓய்வு பெற்ற அதிபர் திருமதி தவமலர் சுவேந்திரநாதன், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பரமேஸ்வரி யோகராசா ஆகியோர் கலந்து கொண்டனர்

(116)



காரைநகர் - பாலவோடை அம்மன் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற தேர்திருவிழாவில் அம்பாள் தேரில் வீதியுலா வருவதைக் காணலாம். (50)

# உள்ளக இடமாற்றங்களால் சிரமத்துக்குள்ளாகும் ஆசிரியர்கள்

(அச்சுவேலி)

கடந்த காலங்களில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட யாழ்.பாடசாலைகளிலிருந்து வன்னிப் பாடசாலைகளுக்கான இடமாற்றங்களை பல்வேறு காரணங்களைக் காட்டி இரத்துச் செய்து யாழ்ப்பாணத்திலுள்ள கஷ்ட மற்றும் அதிகஷ்ட பிரதேசப்பாடசாலைகள் சிலவற்றிற்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற அனேகமான ஆசிரியர்கள் இக்கட்டான ஓர் நிலையில் தவித்துவருவதை காணமுடிவதாக சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்.குடாநாட்டில் கடந்த காலங்களில் கஷ்ட அதிகஷ்ட பிரதேச பாடசாலைகளாக அரசினால் அறிவிக்கப்பட்டிருந்த பல பாடசாலைகளில் புதிய மீளாய்வு செய்யப்பட்டபின் வசதியான பாடசாலைகளாக அறிவிக்கப் பட்டிருக்கும் நிலையில், வன்னி இடமாற்றத்தை இரத்துச்செய்து மேற்படி பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற ஆசிரியர்கள் அநேகர் தற்போது என்ன செய்வது என்று தெரி யாத ஓர் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் கஷ்ரப்பிரதேச ஆசிரிய சேவையை இதுவரை நிறைவு செய்து கொள்ளாத இவ்வாறான ஆசிரியர்கள் எந்நேரமும தங்களுக்கு வன்னிப்பாடசாலைகளுக்கான இடமாற்றம் வழங்கபடலாம் என்ற அச்ச உணர்வுடன் காணப்படுவதாகவும் அத்தகவல்கள் தெரிவிக்கின்றனர்.

(03)

# நவ நாள் வழிபாடு

(கொழும்புத்துறை)

மானிப்பாய் புனித அந்தோனியார் யாத்திரைத் தல திருவிழா கடந்த 8 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 15 ஆம் திகதி வரை மாலை 5 மணியளவில் நவநாள் வழிபாடுகள் இடம் பெற்று, 16 ஆம் திகதி மாலை 5 மணிக்கு நற்கருணை பெருவிழாவும் மறுநாள் காலை 5.30 மணிக்கு முதல்திருப்பலியும், காலை 7.00 மணிக்கு திருநாள் திருப்பலியும் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி அதிபர் அருட்பணி சவுந்திரநாயகம் தலைமையில் கூட்டுத் திருப்பலி இடம்பெறவுள்ளது. தொடர்ந்து ஆலய வளாகத்தில் புனிதரின் தேர்ப்பவனியும், திருச் சொரூப ஆசீர்வழங்கல் நிகழ்வும் இடம் பெறும் என ஆலய பங்குத் தந்தை அருட்திரு.எக்ஸ்.டபிள்யூ. ஜேம்ஸ் தெரிவித்துள்ளார். (52)

# மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடி

காரைநகர் கல்விக்கோட்டப்பாடசாலைகளில் உள்ள கண்பார்வைக்குறைபாடுள்ள மாணவர்களுக்கு இலவசமாக கண்பரிசோதனை செய்து கண்ணாடி வழங்குவதற்கு வியாவில் ஐயனார் தேவஸ்தானம் நடவடிக்கை எடுத்துள்ளது.

புலம்பெயர்ந்து இலண்டனில் வாழும் காரைநகரைச்சேர்ந்த புரவலர் க.பாலையா வழங்கியுள்ள நிதியுதவியுடன் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்நிகழ்வு, நாளை மறுதினம் வியாழக் கிழமை கண் சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ். குகதாஸன் தலைமையில மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் நடைபெறவுள்ளதாக ஐயனா ஆலய அறங்காவலர் மகாராணி க.சோமசேகரம் தெரிவித்துள்ளார்.

(10)

# இரதோற்சவம்

(கொழும்புத்துறை)

ஊர்காவற்றுறை - புளியங்கூடல் செருத்தனைம்பதி அருள் மிகு ஸ்ரீ.இராஜ மகா மாரி அம்மன் திருக்கோயிலின் பெரும் திருவிழா கடந்த மாதம் 1 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடை பெற்று வருகிறது.

இதில் எதிர்வரும் 15 ஆம் திகதி சப்பரத் திருவிழாவும், 16ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 17 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்று, 18 ஆம் திகதி இரவு அம்மன் பூங்காவனத் திருவிழாவுடன் நிறைவு பெறவுள்ளது. (52)

# காற்றுடன் வந்த வாழைச் சருகு; தண்டப்பணம் 1000 ரூபா

(காரைநகர்)

காரைநகர் மேற்கு பிரதான வீதியில் அண்மையில் மிக வேகமாக வீசிய பருவக் காற்றின் போது வெகுதூரத்தில் இருந்த மிகக் காய்ந்த வாழைச் சருகு வீதிஓரத்தில் வாய்க்கால் அருகில் ஒதுக்கப்பட்டிருந்தது. அதற்கு அருகில் உள்ள கடைக்காரர் பொலிஸாரால் நீதிமன்றில் நிறுத்தப்பட்டு ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

வீதிகள் துப்புரவு செய்வது, குப்பைகள் அகற்றுவது அப்பகுதி பிரதேச சபை ஊழியர்களின் கடமையாகும். அருகில் குறித்த சபை ஊழியர்கள் வீதி துப்பரவு செய்தல் வேலைகளில் ஈடுபடுவதில்லை. அதனால் வீதியில் குவியும் குப்பைகள் குவித்து வைப்பதும், நெருப்பு வைப்பது குற்றச் செயல்களாக கருதப் படுகின்றது.

பிரதேச சபை ஊழியர்களிடம் இது குறித்துக் கேட்டபோது, அவர்கள் கூறுகின்றார்கள் எங்களுக்கு வேறு வேலைகள் தரப்பட்டுள்ளது. நீங்கள் காரியாலயத்திற்கு வந்து அறிவியுங்கள் எனக் கூறுகின்றனர். எனவே சம்பந்தப்பட்டவர்கள் இது குறித்து கவனம் செலுத்த வேண்டும் என கோரிக்கை விடுக்கப்படுகிறது.

(50)



மானிப்பாய் பொலிஸார் சாவற்கட்டு கிராமத்தில் அண்மையில் நடத்திய நடமாடும் சேவையில் மக்களின் முறைப்பாடுகளை பதிவு செய்வதைக் காணலாம். (104)

# மீண்டும் இயங்கும் கோபுர மணிக்கூடு

(குருநகர்)

யாழ்.மணிக்கூட்டுக் கோபுர மணிக்கூடுகள் தினமும் மாலை நேரங்களில் இயங்குவதைக் காணமுடிகின்றது.

அதேவேளை சரியான நேரங்களைக் காட்டாமல் காணப்பட்டதும் சுட்டிக்காட்டப் பட்டது.

தற்போது மணிக்கூடுகள் இயங்குவதால் அவ் வீதியூடாக செல்பவர்கள் நேரத்தைப் பார்க்கக் கூடியதாக இருப்பதாக தெரிவிக்கின்றனர்.

(68)

# முரசின் இன்றைய பலன்

(12.06.2012 –செவ்வாய்க்கிழமை)

நந்தன வருஷம் வைகாசி மாதம் 30 ஆம் திகதி. அட்டமி முற்பகல் 9.13 வரை.
நட்சத்திரம் பூரட்டாதி மரணயோகம் முற்பகல் 09.06 வரை. அட்டமி நவமி
இராகுகாலம் 2.52 - 4.22 வரை. சுபநேரம் 10.22 - 11.52 வரை.
எமகண்டம் 8.52 - 10.22 வரை. குளிகைகாலம் 11.52 - 1.22 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | அதிகாரம், எதிர்பார்த்த இடமாற்றம், திருமணம கைகூடும், நீண்டகால கனவுகள் நனவாகும். |
| ரிஷபம் | அதிகாரப் போக்கு, மாமியாருடன் மனஸ்தாபம், கல்வியில் முன்னேற்றம், அன்னியரால் உதவி. |
| மிதுனம் | ஞாபக மறதி, பிணை போகவேண்டாம், தந்தை வழி இலாபம், சகோதர மனஸ்தாபம். |
| கடகம் | சந்திராட்டமம் பயணம் தவிர், குடும்பத்தில் குதுகலம், திருமணப் பேச்சுக்கள், பதவியுயர்வு. |
| சிம்மம் | சந்திராட்டமம் பயணம் தவிர், குடும்ப அன்னியோன்யம், பணியில் மேன்மை, அரச உதவி. |
| கன்னி | உடல் நல பாதிப்பு, அனாவசிய அலைச்சல், கடன் சுமை அதிகரிக்கும், குடும்பத்தில் குழப்பம். |
| துலாம் | உற்சாகம், பதவி பறிபோகலாம், மேலதிகாரிகள் சீற்றம், உடல் நலனில் அக்கறை அவசியம். |
| விருச்சிகம் | தொழில் சிந்தனை, வெளி வட்டாரப் பழக்கம், தொழிலில் மேன்மை, பொருள் வரவில் தேக்கம். |
| தனுசு | சுப காரிய ஈடுபாடு, சிறப்பான தனவரவுகள், உறவினர் அனுசரணை, வர்த்தகத்தில் இலாபம். |
| மகரம் | பணவரவுகள், அழக்கழ மறதியும், சோர்வும், சகோதர விரோதம் மறையும், பாராட்டும் புகழும். |
| கும்பம் | முயற்சி வெற்றி, தொழிலில் நல்ல பலன், செலவுகளுக்கு பஞ்சமில்லை, சோர்வும் சலிப்பும். |
| மீனம் | அலைச்சல், திருமணம் நிறைவேறும், வெளியூர் பயண இலாபம், குடும்பப் பிரச்சினை. |

# வென்றது குரோஷியா; இத்தாலி ஸ்பெயின் ஆட்டம் சமநிலை




(கிடான்ஸ்க்)

யூரோ கிண்ணக் கால்பந்துப் போட்டித் தொடரில் குரோஷிய அணி அபார வெற்றிபெற்றது. இத்தாலி, ஸ்பெயின் அணிகள் மோதிய ஆட்டம் சமநிலையில் நிறைவடைந்தது.

யூரோ கோப்பை கால்பந்து போட்டியில் கிடான்ஸ்க்கில் நேற்று முன்தினம் நடந்த 'சி' பிரிவு லீக் ஆட்டத்தில் நடப்பு சம்பியன் ஸ்பெயினும், இத்தாலியும் பலப்பரீட்சை நடத்தின. முதல் பாதியில் கோல் ஏதும் விழவில்லை. இதனால் பிற்பாதியில் இரு அணி வீரர்களும் மிகவும் ஆக்ரோஷமாக ஆடினார்கள்.

61ஆவது நிமிடத்தில் இத்தாலியின் டி நடாலி கோல் அடித்தார். ஆனால் அவர்களது மகிழ்ச்சியில் நீண்ட நேரம் நீடிக்கவில்லை. அடுத்த 3ஆவது நிமிடத்தில் ஸ்பெயினின் பேப்ரிகஸ் பதில் கோல் திருப்பினார். இதன் பின்னர் கடைசி வரை முயன்றும் இரு அணி வீரர்களாலும் வெற்றி கோலை அடிக்க முடியவில்லை. பல வாய்ப்புகள் நூலிழையில் நழுவி போயின. முடிவில் இந்த ஆட்டம் 1-1 என்ற கணக்கில் டிராவில் முடிந்தது.

இதேவேளை, சி பிரிவு லீக் ஆட்டம் ஒன்றில் குரோஷியா-அயர்லாந்து அணிகள் மோதின.

இந்த ஆட்டத்தின் முதல் பாதியில் குரோஷிய வீரர்கள் ஜெலாவிக், மாண்ட்சுகிக் ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர். அயர்லாந்து தரப்பில் லெட்ஜர் ஒரு கோல் அடித்தார். முதல் பாதியின் முடிவில் குரோஷிய அணி 2-1 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

2ஆவது பாதி ஆட்டத்திலும் குரோஷிய வீரர்கள் ஆக்ரோஷமாக ஆடினர். ஆட்டத்தின் 49ஆவது நிமிடத்தில் குரோஷிய வீரர் மாண்ட்சுகிக் மீண்டும் ஒரு கோல் அடித்தார். இறுதிவரை போராடியும் அயர்லாந்து அணியால் பதில் கோல் அடிக்க இயலவில்லை. இறுதியில் குரோஷியா 3-1 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது.

# பட்டம் வென்றார் சாய்னா



(பாங்கொக்)

தாய்லாந்து ஓப்பன் பட்மின்ரன் தொடரில் சாய்னா நேவால் அபாரமாக ஆடி சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

முன்னணி வீராங்கனைகள் பங்கேற்ற தாய்லாந்து ஓப்பன் பட்மின்ரன் தொடர் தாய்லாந்தின் பாங்கொக் நகரில் நடந்தது. மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடந்தது. இதில், உலகின் 5ஆம் நிலை வீராங்கனையான இந்தியாவின் சாய்னா நேவால், தாய்லாந்தின் இன்தனோனை எதிர்த்து விளையாடினார்.

தொடக்கத்தில் சாய்னா சற்று தடுமாறினாலும் அடுத்த செட்களில் அட்டகாசமாக விளையாடி வெற்றி பெற்றார். சாய்னா 19,21, 21,15, 21,10 என்ற செட்களில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். இந்த ஆண்டில் சாய்னா வெல்லும் 2ஆவது சம்பியன் பட்டம் இது. இதற்கு முன் மார்ச் மாதத்தில் சுவிஸ் ஓபன் பட்டத்தை வென்றுள்ளார்.

# இலங்கைக்கு 2 தங்கங்கள்

(கொழும்பு)

ஆசிய கனிக்ஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் இலங்கை இரு தங்கப் பதக்கங்களை வென்றது. பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் ஷிவன்தி ரத்நாயக்க மற்றும் ஆண்கள் பிரிவில் துலாஜ் மதுஷங்க ஆகியோர் தங்கம் வென்றனர்.

ஆசிய கனிக்ஷ்ட மெய்வல்லுநர் போட்டி சுகததாச அரங்கில் கடந்த சனிக்கிழமை ஆரம்பமானது. முதல் நாளில் 6 தங்கப் பதக்கங்களுக்கான போட்டிகள் இடம்பெற்றன. இதில் மூன்று தங்கப் பதக்கங்களை சீனா வென்றது. தவிர ஜப்பான், சீன மற்றும் ஈரான் ஆகிய நாடுகள் தலா ஒரு தங்கப் பதக்கம் வென்றன.

பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியின் இறுதிப் போட்டியில் இலங்கையின் ஷிரன்தி ரத்நாயக்க வெற்றி பெற்றார். இவர் போட்டியை 55.91 விநாடிகளில் ஓடி முடித்து தங்கம் வென்றார்.

கேகாலை புனித ஜோசப் கல்லூரியில் கல்வி பயின்ற ஷிரன்தி ரத்நாயக்க ஆசிய கனிஷ்டமெய்வல்லுநர் போட்டிக்கான இலங்கை குழாமின் தலைவராக செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இம்முறை போட்டியில் இலங்கை சார்பில் அதிக பட்சமாக 104 வீர, வீராங்கனைகள் பங்கேற்கின்றனர். அதேபோன்று ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் இலங்கை சார்பில் துலாஜ் மதுஷங்க தங்கப் பதக்கம் வென்றார்.

# ஆர்ஜன்ரீனா வெற்றி


(நியூயோர்க்)

மெஸ்ஸியின் ஹெட்ரிக் கோல் மூலம் பிரேஸிலுடனான நட்புறவு கால்பந்து போட்டியில் ஆர்ஜன்ரீனா அணி 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றி யீட்டியது. நியூயோர்க் மிடோலான்ட் அரங்கில் நடந்த இந்த போட்டியின் 23ஆவது நிமிடத்தில் ரொமுலோ கோலொன்றை போட்டு பிரேஸிலை முன்னிலை பெறச் செய்தார். எனினும் ஒரு நிமிட இடைவெளியில் மெஸ்ஸி அடுத்தடுத்து இரு கோல்களை போட ஆர்ஜன்ரினா முன்னிலை பெற்றது. மெஸ்ஸி 31, 34 ஆம் நிமிடங்களில் இந்த கோல்களை போட்டார்.

விறுவிறுப்பாக நடந்த இந்தப் போட்டியில் 56 ஆவது நிமிடத்தில் ஒஸ்கார் ஒரு கோலை போட்டு பிரேஸிலை சமநிலைக்கு கொண்டு வர பின்னர் 72 ஆவது நிமிடத்தில் ஹல்க் பிரேஸில் சார்பில் இன்னுமொரு கோலைப் போட்டார்.

எனினும் கடைசி தறுவாயில் பொட்ரிகோ பெர்னான்டர்ஸ் 76 நிமிடத்திலும் மெஸ்ஸி 85 ஆவது நிமிடத்திலும் ஆர்ஜன்டீனா சார்பில் கோல்கள் போட அந்த அணி 4-3 என போட்டியில் வென்றது. இதன் மூலம் மெஸ்ஸி இந்த பருவ காலத்தில் கால்பந்து அரங்கில் 82 கோல்களை போட்டுள்ளார்.

# விபத்தில் சிக்கினார்



உலக அதிக வேக ஓட்ட வீரர் என்ற சாதனைக்குரிய ஜமைக்காவின் உசைன் போல்ட் கார் விபத்தொன்றில் சிக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் காயங்கள் எதுவுமின்றி அவர் தப்பியுள்ளதாக ஜமைக்கா தகவல்களை மேற்கோள்காட்டி பி.பி.சி செய்தி வெளியிட்டுள்ளது.

ஒலிம்பிக் போட்டிகளுக்கு முன்னோடியாக இந்த மாத இறுதியில் நடைபெறவுள்ள பயிற்சி ஓட்டங்களில் உசைய்ன் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2009 ஆம் ஆண்டு இவ்வாறான கார் விபத்தொன்றில் சிக்கிய உசைய்ன் போல்ட், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

# உலகக் கிண்ணத்தில் ஆடுவேன்

(லண்டன்)

உலகக் கிண்ண ருவென்ரி 20 கிரிக்கெட் தொடரில் விளையாட முடியும் என இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட வீரர் கெவீன் பீற்றர்சன் தெரிவித்துள்ளார்.

31 வயதான கெவீன் பீற்றசன் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து அண்மையில் ஓய்வு பெற்றிருந்தார். எனினும் இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் நிறுவனத்தின் சர்வதேச இருபதுக்கு-20 மற்றும் ஒருநாள் போட்டிகளுக்கான வீரர்களின் ஒப்பந்தத்தில் கெவீன் பீற்றசன் உள்வாங்கப்படவில்லை.

ஓய்விற்காக அடுத்த மாதம் வெளிநாடு செல்லவுள்ள பீற்றர்சன், விடுமுறை நாட்களில் பயிற்சிகளில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இம்முறை சர்வதேச இருபதுக்கு-20 கிரிக்கெட் தொடர் எதிர்வரும் செம்டெம்பர் மாதம் 18ஆம் திகதி முதல் ஒக்டோபர் 7ஆம் திகதி வரை இலங்கையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# இரட்டையரில் சம்பியன்

(பா ரீஸ்)

பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் கனடாவின் டேனியல் நெஸ்டர்-பெலாரஸின் மேக்ஸ் மிர்ன்யி ஜோடி சம்பியன் பட்டம் வென்றது.

இந்த ஜோடி சனிக்கிழமை இரவு நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் 6-4, 6-4 என்ற நேர் செட்களில் அமெரிக்காவின் பாப் பிரையன்-மைக் பிரையன் சகோதரர்கள் ஜோடியை வீழ்த்தியது.

மேக்ஸ் மிர்ன்யிக்கு இது 6ஆவது கிராண்ட் ஸ்லாம் பட்டமாகும். பிரெஞ் ஓப்பனில் அவர் வென்றுள்ள 4ஆவது பட்டம் இது. அமெரிக்க ஓப்பனில் இரு முறை வென்றுள்ளார்.

# அறிவுரையை மதிப்பேன்



(புதுடில்லி)

அணித் தலைவர் டோனியின் அறிவுரையை மதித்து நடப்பேன். அவர் ஒரு சிறந்த கப்டன் என இந்திய அணியின் துணைக் கப்டன் ஹோலி தெரிவித்தார்.

துணைக் கப்டன் பொறுப்பேற்ற பிறகு என்னை இரசிகர்கள் அதிகம் கவனிக்கிறார்கள். மைதானத்தில் சில சமயங்களில் அதிக கோபமாக நடந்து கொள்வேன். அப்படிப்பட்டவற்றை குறைத்துக் கொள்ளுமாறு கப்டன் டோனி அறிவுறுத்தியுள்ளார். எவ்வளவு கோபம் இருந்தாலும் எல்லையை மீறக்கூடாது என்றுள்ளார். அதனால் விரைவில் எனது நடவடிக்கைகளை மாற்றிக் கொள்வேன். கோபத்தை கட்டுப்படுத்தினால் மட்டுமே நல்ல கிரிக்கெட் வீரராக முடியும் என்று டோனி சொன்னதை மதித்து இனி நடப்பேன் என்று கூறியுள்ளார்.

# மே.தீவுகள் சிறப்பான ஆட்டம்

இங்கிலாந்து அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத்தீவு அணியின் சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்தி வருகின்றது.

இங்கிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவதும், இறுதியுமான போட்டி எட்ஸ்பஸ்டனில் நடைபெற்று வருகின்றது.

முதலிரண்டு நாட்கள் மழை காரணமாக முற்றாக கைவிடப்பட்ட நிலையில் மூன்றாம் நாளிலிருந்தே போட்டி ஆரம்பமானது. இதில் முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி ராம்டீன், பெஸ்ட் ஆகியோரின் இறுதி விக்கெட் இணைப்பாட்டத்தின் மூலம் வலுவான நிலையை அடைந்தது. இறுதியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 426 ஓட்டங்களைப் பெற்றது. பத்தாவது விக்கெட்டுக்காக ராம்டீன், பெஸ்ட் இணை 143 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ராம்டீன் 183 பந்துகளை எதிர்கொண்டு ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக 102 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார். பெஸ்ட் 112 பந்துகளை எதிர்கொண்டு 14 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 95 ஓட்டங்களைப் பெற்று ஐந்து ஓட்டங்களினால் சதத்தைத்தவறவிட்டார். அத்துடன் புதிய சாதனை ஒன்றையும் ஏற்படுத்தினர்.

2004ஆம் ஆண்டு பங்களாதேஷிற்கு எதிராக இந்தியாவின் சகீர்கான் 75 ஓட்டங்கள் எடுத்ததே, 11ஆவது வரிசை துடுப்பாட்ட வீரர் ஒருவர் டெஸ்டில் எடுத்த அதிகபட்ச ஓட்டங்களாகும். அந்த ஓட்ட எண்ணிக்கையைக் கடந்து 30 வயதான பெஸ்ட் புதிய உலக சாதனை படைத்தார்.

இதேவேளை, சமீபத்தில்மேற்கிந்தியத்தீவு அணியின் முன்னாள் கப்டன் விவியன் ரிச்சர்ட்ஸ் அளித்த பேட்டியில், ராம்டீன் மோசமாக விளையாடுவதால் அவர் அணிக்குத் தேவையில்லை என்று பேசியிருந்தார். அந்த கடுப்பில் இருந்த ராம்டீன் சதம் அடித்ததும் தனது ஆத்திரத்தை இரசிகர்கள்முன்னிலையில் வெளிப்படுத்தினார். வழக்கம் போல் சதம் அடித்து துடுப்பைஉயர்த்திக் காட்டியதும், சிறிய துண்டு பேப்பரில் 'விவியன் இப்ப பேசுங்க' என்று கிண்டலாக எழுதி காட்டியது பரபரப்பை ஏற்படுத்தியது. தொடர்ந்து முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய இங்கிலாந்து அணி நான்காம் நாள்ஆட்டம் நிறைவுக்கு வந்த வேளை, ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 221 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் பீற்றர்சன் 78, இயன் பெல் 76 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் பெஸ்ட் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.



## அயர்லாந்து, இங்கிலாந்து ஒரு நாள் தொடர்

# விலகினார் ஹஸி

(சிட்னி)

அயர்லாந்து, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஒரு நாள் தொடரிலிருந்து அவுஸ்ரேலிய வீரர் மைக் ஹஸி விலகியுள்ளார்.

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி எதிர்வரும் 23ஆம் திகதி அயர்லாந்துடன் ஒரே ஒரு ஒருநாள் போட்டியில் மோதுகிறது. இதனை அடுத்து 29ஆம் திகதி முதல் இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 5 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் போட்டித் தொடரில் விளையாடுகிறது. இந்த இரண்டு போட்டி தொடருக்கான அவுஸ்ரேலிய அணியில் இருந்து முன்னணி துடுப்பாட்ட வீரர் ஹஸி விலகி உள்ளார். மைக் ஹஸியின் மனைவிக்கு 3 மாதத்துக்கு முன்பே குழந்தை பிறந்து இருப்பதால் மனைவியை அருகில் இருந்து கவனிக்க வசதியாக மைக் ஹஸி இந்த போட்டி தொடரில் இருந்து விலகியுள்ளதாக அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.







இறம்பைக்குளம் மகளிர் ம.வி

# பெண்களுக்கான மாகாண மென்பந்து சம்பியனானது சுழிபுரம் விக்டோரியா

(வவுனியா)

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான வடமாகாண மட்ட பெண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டித் தொடரில் சுழிபுரம் விக்டோரியக் கல்லூரி அணி சம்பியனாகியது.

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டித் தொடர் வவுனியா சிறுவர் பூங்கா மைதானம் மற்றும் வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரி மைதானங்களில் கடந்த 8ஆம் திகதி நடைபெற்றது.

10 ஓவர்கள் கொண்ட இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் சுழிபுரம் விட்டோரியாக் கல்லூரி அணியும், வவுனியா-இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலய அணியும் மோதின.

முதலில் ஆடிய சுழிபுரம் விக்டோரியக் கல்லூரி அணி பத்து ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 83 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எஸ். பிரியங்கா இரண்டு பவுண்டரிகள் அடங்கலாக 15 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு 84 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய வவுனியா-இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலய அணி 10 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 56 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் மணிமேகலை இரண்டு பவுண்டரிகள் அடங்கலாக 12 ஓட்டங்களைப் பெற்றார். இதன் மூலம் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணி மாகாண மட்ட சம்பியனாகியது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் வட மத்திய மகளிர் கல்லூரி அணியும், வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரி அணியும் மோதின.

முதலில் ஆடிய வவுனியா - ஓமந்தை மத்திய மகளிர் அணி 10 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 77 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எஸ். கஜந்தினி நான்கு பவுண்டரிகள் அடங்கலாக 22 ஓட்டங்களைப் பெற்றார். பதிலுக்கு 78 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய வட மத்திய மகளிர் கல்லூரி அணி ஒன்பது ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் கீர்த்தனா ஒரு சிஸ்கர், ஒரு பவுண்டரி அடங்கலாக 22 ஓட்டங்களைப் பெற்றார். இவ்வெற்றியின் மூலம் வட மத்திய மகளிர் கல்லூரி அணி மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. (93)




வட மத்திய மகளிர் கல்லூரி

# கரப்பந்து பரீட்சைக்கான தயார்ப்படுத்தல் வகுப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை கரப்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சைக்கான தயார்ப்படுத்தல் வகுப்புக்கள் எதிர்வரும் 23,24ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி கரப்பந்தாட்ட பரீட்சைக்கான தயார்ப்படுத்தல் வகுப்பில் பங்குகொள்வோரே பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவார்கள் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இதில் கரப்பந்தாட்டப் பரீட்சைக்குத் தோற்றவிரும்புவோரையும் இவ் ஆயத்த பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள முடியும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

# தாச்சி இறுதியில் தாவடி காளி அம்பாள்

(கைதடி)

யாழ். மாவட்ட மட்ட தாச்சிப் போட்டியின் இறுதி ஆட்டத்திற்கு தாவடி காளி அம்பாள் அணி தகுதி பெற்றுள்ளது.

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் 15ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மாவட்ட மட்டத்திலான தாச்சிப் போட்டி கைதடி குமரநகர் விளையாட்டு மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்று வருகின்றது.

சனி, ஞாயிறு தினங்களில் நடைபெற்று வரும் இப்போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டம் ஒன்று கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இதில் உடுவில் ஆலடி சூப்பர் கிங் அணியும், தாவடி காளி அம்பாள் அணியும் மோதின.

இரு அணிகளுமே பலம் வாய்ந்த அணி என்பதால் இப்போட்டி இரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது.

இதற்மைய இரு அணி வீரர்களின் ஆட்டமும் மிகச் சிறப்பான முறையில் அமைந்திருந்தது. இருப்பினும் தாவடி காளி அம்பாள் அணி வீரர்களின் வேகமான ஆட்டத்திற்கு முன்னால் உடுவில் ஆலடி சூப்பர் கிங் அணியால் ஈடுகொடுக்க முடியவில்லை.

இறுதியில் தாவடி காளி அம்பாள் அணி 6-3 என்ற பழம் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.


மின்னொளியில் நடைபெற்ற இந்த அரையிறுதி ஆட்டம் தாச்சி இரசிகர்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யும் வகையில் அமைந்திருந்தது.

மற்றுமொரு அரையிறுதி ஆட்டம் நடைபெறவுள்ள நிலையில் இறுதிப் போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

20இற்கும் மேற்பட்ட தாச்சி அணிகள் பங்குகொண்ட இத்தாச்சிப் போட்டித் தொடரின் முதல் சுற்று ஆட்டங்கள் லீக் அடிப்படையில் நடைபெற்ற அதேவேளை, ஏ, பி என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவிலிருந்தும் இரண்டு அணிகள் தெரிவு செய்யப்பட்டே அரையிறுதி ஆட்டங்கள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

## ஜே.பி.எல். ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடர்

# யாழ். சென்றல் வெற்றி




(யாழ்ப்பாணம்)

ஜே.பி.எல். ருவென்ரி -20 கிரிக்கெட் போட்டித் தொடரின் ஏழாவது போட்டியில் யாழ்ப்பாணம் சென்ரல் அணி 05 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற இப்போட்டியில் யாழ்ப்பாணம் சென்ரல் அணியும் ஜொனியன்ஸ் அணியும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றது. இதில் குமணன் 02 நான்குகள் 03 ஆறுகள் உட்பட 38, காண்டீபன் 33, அகிலன் 23, ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மயூரன் 04 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட் டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் கலிஸ்ரன் 04 ஓவர்கள் பந்து வீசி 38 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும், திருக்குமரன் 04 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் கைப்பற்றி னார்கள்.

156 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்ரல் அணி 19.3 ஓவர்களில் 05 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதில் ரஜீவ்குமார் 43 பந்துகளில் 05 நான்குகள் 04 ஆறுகளுடன் 58, றொகான் 34, கலஜஸ்ரன் 16 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சஞ்சயன் 04 ஓவர்கள் பந்து வீசி 18 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். போட்டியின் ஆட்ட நாயகனாக சென்ரல் அணியைச் சேர்ந்த ரஜீவ் குமார் தெரிவு செய்யப்பட்டார். (எஸ்.பி.,எஸ்)

# பரிசை வென்ற பற்றீசியன்ஸ்

(யாழ்ப்பாணம்)

ஜே.பி.எல். ருவென்ரி - 20 கிரிக்கெட் போட்டித் தொடரின் எட்டாவது போட்டியில் பற்றீசியன்ஸ் அணி 47 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற போட்டியில் பற்றீசியன்ஸ், மானிப்பாய் பரிஸ் அணிகள் மோதின.

முதலில் ஆடிய பற்றீயன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 156 ஓட்டங்களைப் பெற்றது. இதில் விதுபாலா 48 பந்துகளில் 05 நான்குகள் 03 ஆறுகள் உட்பட 54, பத்மமுரளி 36, ஜெகன் 26, ரியூடர் 14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஹரிகரன் 04 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 13 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், வினோத் 04 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 21 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

157 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 09 விக்கெட்டுக்களை இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியடைந்தது. இதில் வினோத் 26, நிதர்சன் 22, சசேந்திரன் 13, ஜெயதீபன் 13 ஓட்டங்களை பெற்றனர். பந்து வீச்சில் லீவிங்டன் 04 ஓவர்கள் பந்து வீசி 19 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும், எரிக் பிரதாப் 04 ஓவாகள் பந்து வீசி 25 ஓட்டங்களுக்க 02 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக பற்றீசியன்ஸ் அணியைச் சேர்ந்த விதுபாலா தெரிவு செய்யப்பட்டார். (எஸ்.பி.,எஸ்)



# போரைத் தொடரும் "புலத்துப் புலிகள்"!

- டி.பி.எஸ்.ஜெயராஜ் கட்டுரையிலிருந்து.

புலிகள் மற்றும் தமிழ் புலம் பெயர்ந்தோரிடையே உள்ள புலிகள் சார் அமைப்புகளினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்டம், வெளிநாட்டிலுள்ள தமிழர்கள் சிலரைப் பொறுத்தவரை யுத்தம் இன்னமும் முடிவடைந்து விடவில்லை



என்பதையே வெளிப்படுத்தியது. பிரதான நிலையிலிருந்த புலிகள் மே, 2009இல் இராணுவத் தோல்வியினால் பாதிக்கப்பட்டு, எல்.ரீ.ரீ.ஈ கட்டமைப்பு ரீதியாகவும் மற்றும் செயற்பாட்டு ரீதியாகவும் இலங்கையில் துடைத்தழிக்கப் பட்டுவிட்டது, ஆனால் வெளிநாட்டுப் புலிகளுக்கு யுத்தம் இன்னமும் நடைபெறுகிறது.

வெளிநாட்டுப் புலிகள் மற்றும் அவர்களின் சகபாடிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பல்வேறு ஊடக உறுப்புகளின் அறிக்கைகளில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் ஒரு இராணுவ பிரசாரமாகவே சித்திரிக்கப்பட்டிருந்தது. அவர்கள் வெளிப்படையாகவே அதை ஒரு போர் எனவே அழைத்திருந்தார்கள். மிகவும் குறிப்பிடத்தக்க வகையில் அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள், தொண்டர்களாகவோ அல்லது செயற்பாட்டாளர்களாகவோ வர்ணிக்கப்படவில்லை மாறாக "புலிகள்" என்றே குறிப்பிடப்பட்டார்கள்.

"புலத்துப் புலிகள்" என்கிற புதிய பதம் உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டது. நிலம் அல்லது எல்லை என்கிற கருத்துள்ள புலம் என்கிற சொல் சமீப காலங்களாக, பாரம்பரிய தமிழ் பேசும் பிரதேசங்களான தமிழ் கூறும் நல்லுலகம் என அழைக்கப்படும் இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இடங்களிலிருந்து வேறு இடங்களுக்கு குடிபெயர்ந்தவர்களை குறிப்பதற்காக பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

ஒரு கருத்துப்படி அவர்கள் புலம் பெயர்ந்த தமிழர்கள். ஆனால் மற்றொரு கருத்துப்படி அவர்கள் புலத்து தமிழர்கள் ஆவார்கள். புலத்துப் புலிகள் என்கிற பதம் இதிலிருந்து பெறப்பட்டது, இதனைப் புலம் பெயர்ந்த புலிகள், வெளிநாட்டுப் புலிகள், நாட்டை விட்டு வெளியேறிய புலிகள், மறுநாட்டுப் புலிகள் எனவும் அழைக்கலாம்.

பெரும்பாலும் இளம் ஆண்களையும் பெண்களையும் கொண்டிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்கள் புலித் தொடர்பினை புலப்படுத்தும் அடையாளங்களை வெளிப்படையாகவே அணிந்திருந்தனர். எல்.ரீ.ரீ.ஈயினது கர்ச்சிக்கும் புலியின் முத்திரை சின்னத்தை கொண்ட கொடிகளை அவர்கள் ஏந்தியிருந்தார்கள். புலிகளின் முத்திரையுள்ள உடைகளை அநேகர் அணிந்திருந்தார்கள். வெளிப்படையாக தங்களை எல்.ரீ.ரீ.ஈ என அடையாளம் காண்பது தவிர்க்கப்படும்போது, ஆர்ப்பாட்டக்காரர்கள் எல்.ரீ.ரீ.ஈயினை வரையறுக்கும் சுலோகமாகிய "தமிழரின் தாகம் தமிழீழ தாயகம்" எனும் கோஷத்தை அடிக்கடி பலமாக எழுப்பி வந்தார்கள். "எங்களின் தலைவர் பிரபாகரன்" என்றுகூட பகிரங்கமாக ஆங்கிலத்தில் சிலர் கோஷமிட்டார்கள்.

எல்.ரீ.ரீ.ஈ பிரித்தானியாவில் ஒரு பயங்கரவாத அமைப்பாக தடை செய்யப்பட்டிருந்த போதிலும் பிரித்தானிய பொலிஸார் இந்த பகிரங்கமான எல்.ரீ.ரீ.ஈ அடையாளங்களையும் மற்றும் தொடர்புகளையும் வெளிப்படுத்துவதற்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எல்.ரீ.ரீ.ஈ தடைசெய்யப்பட்ட, 2000ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட பிரித்தானிய பயங்கரவாத சட்டத்தின் பிரிவு 13 கூறுவது:

13. ஈ.டபிள்யு.எஸ்.என்.ஐ எனும் இந்தப் பிரிவு தெளிவு படுத்தும் குறிப்புகள்:

(1) "ஒரு நபர் ஒரு பொது இடத்தில் ஒரு குற்றத்தை செய்தவராக கருதப்படுவது அவர்

(அ) ஒரு பொருளை சுட்டும் ஆடையை அணிந்துள்ளார் அல்லது

(ஆ) ஒரு பொருளை வெளிப்படுத்தும் ஒன்றை அணிந்து, அல்லது காவிச் செல்லுதல் எந்த வழியிலும் அத்தகைய ஒரு சூழ்நிலை உருவாகும்போது, அவர் தடைசெய்யப்பட்ட அமைப்பை சேர்ந்தவர் அல்லது ஆதரவாளர் என்கிற நியாமான சந்தேகம் எழலாம்."

இத்தகைய பிரிவுகள் இருந்த போ தும், லண்டன் பொலிஸார், எல்.ரீ.ரீ.ஈ யின் முத்திரைச் சின்னங்களை அணிந்து கொண்டு, புலிக் கொடிகளை வீசிய இளைஞர்களை கேள்வி கேட்கக்கூட முயற்சிக்கவில்லை. இதில் மேலும் கூடுதலாக இந்த புலத்துப் புலிகள், வீதிகளில் ஆர்ப்பாட்டம் அல்லது பேரணி நடத்த அனுமதிக்கப்பட்டது மட்டுமல்லாமல், இலங்கையின் தேசியக்கொடியினை எரிப்பது உட்பட பல ஆத்திரமூட்டும் செயல்களிலும் அவர்கள் ஈடுபட்டார்கள்.

ஜனாதிபதி ராஜபக்ஷவின் லண்டன் பிரசன்னத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம்




செய்த ஆர்ப்பாட்டக்காரர்கள் பொதுநலவாய பொருளாதார அமைப்பு அவரின் முக்கிய குறிப்புகள் அடங்கிய உரையினை நிகழ்த்துவதை இரத்து செய்ய வைத்தது போன்ற சில வெற்றிகளை அடைந்திருந்தாலும், இந்தப் பின்னடைவுக்கு அப்பால் மகிந்த ராஜபக்ஷவின் ஏனைய பிரித்தானிய பயண நிகழ்ச்சி நிரல் திட்டமிட்டபடியே நடந்தேறியது.

லண்டனில் அவரது குறுகிய கால வாசம் இலங்கை தமிழ் புலம்பெயர்ந்தவர்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களினால் மோசமடைந்திருந்தாலும், ஜனாதிபதி அவரது சிறப்புக்கு தகுந்தபடி கலக்கமில்லாமல் உறுதியாக இருந்தார். அந்த ஆர்ப்பாட்டத்துக்கு எதிராக ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாக இலங்கையின் நாடுகடந்து வாழும் சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகத்தினரால் ஆர்ப்பாட்டங்களும் இடம் பெற்றன. ஒரு கட்டத்தில் ஜனாதிபதி பாதுகாப்பு அச்சுறுத்தல்களையும் பொருட்படுத்தாது தனது வாகனத்தில் இருந்து இறங்கி ஆதரவு தெரிவிக்கும் ஆர்ப்பாட்டக்குழுவினர் முன்னிலையில் உரை நிகழ்த்தினார்.

ஜனாதிபதிக்கும் முதற் பெண்மணிக்கும் மகாராணியை கௌரவிக்கும் முகமாக ஜூன் 6 இல் நடைபெறும் மதிய விருந்தில் கலந்து கொள்வதற்காக பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஷ்வர் சர்மாவினால் உத்தியோக பூர்வ அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

தமிழ் புலம்பெயர் அமைப்புகளிலுள்ள எல்.ரீ.ரீ.ஈ மற்றும் எல்.ரீ.ரீ.ஈ சார்பான சக்திகளாலும் மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களாலும், மால்பரோ ஹவுஸிலுள்ள பொதுநலவாய அமைப்பின் செயலகத்தில் ஜனாதிபதி, மகாராணியுடன் இந்த மதிய விருந்தில் சந்தித்துக் கொள்வதை தடுப்பதற்காக வெறித்தனமான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. அழைப்பினை இரத்துச் செய்யும்படி ஆர்வமுடன் முறையீடுகள் மேற்கொள்ளப்பட்டன. எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக பெருந்திரளான மக்கள்கூட்டம் நிகழ்வு நடக்கும் இடத்தில் கூடியது.

இந்த முயற்சிகளுக்கு இடையிலும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் ஷிராந்தி ராஜபக்ஸ ஆகியோர் விருந்தில் பங்குபற்றி மகாராணியாரை தனிப்பட்ட முறையில் சந்தித்தனர்.

பாதுகாப்பு ஏற்பாடுகள் காரணமாக ஜனாதிபதி முக்கியத்துவம் குறைந்த ஒரு வரவை மேற்கொள்ளவேண்டிய கட்டாயத்திலிருந்தாலும் அவர் மற்றும் திருமதி ராஜபக்ஷ ஆகியோர் பொதுநலவாய விருந்தில் சிறப்பான வரவேற்பு விருந்தினர்களாக கருதப்பட்டார்கள். மால்பரோ ஹவுசுக்கு வெளியே ஆர்ப்பாட்டக்காரர்கள் வெளிக்காட்டும் சூடான உணர்வுகளுக்கு நேர்மாறாக உட்பக்கத்து மனநிலை முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. கமலேஸ் சர்மா தனிப்பட்ட முறையில் ராஜபக்ஷவை வாழ்த்தியதுடன் ஜனாதிபதியை மற்றும் சில விருந்தினர்களுக்கும் அறிமுகப்படுத்தி வைத்தார்.

வெளியே நடைபெற்றுக் கொண்டிருந்த ஆர்ப்பாட்டம் இலங்கை ஜனாதிபதியை சக விருந்தினர்களிடையே கவனத்தை ஈர்க்கும் ஒரு பொருளாக மாற்றியிருந்தது. பொதுநலவாய அமைப்பின் செயலகத்தை சேர்ந்த ஒரு உத்தியோகத்தரின் கூற்றுப்படி பெரும்பாலான தலைவர்கள் ராஜபக்ஷவை அணுகி வாழ்த்துகளை பரிமாறியதைக் காணக்கூடியதாக இருந்ததாம். மேற்கு நாடொன்றை சேர்ந்த இராஜதந்திரி ஒருவர் வெளியில் நடக்கும் அவமதிப்புகளுக்கு மத்தியிலும் இலங்கை ஜனாதிபதி கடைப்பிடிக்கும் கண்ணியமான மன அமைதியை பார்த்து, தான் பெரிதும் கவரப்பட்டதாகத் தெரிவித்தார். ஜனாதிபதி அமைதியாகவும் உற்சாகமாகவும் இருக்கிறார் என்று அவர் தெரிவித்தார்.

அந்த நிகழ்வின் நட்சத்திரமாக ஜொலித்தவர் மகாராணியார்தான் என்பதில் சந்தேகமே இல்லை. பொதுநலவாய அமைப்பின் செயலகத்தை சேர்ந்த ஒரு உத்தயோகத்தரின் ஒன்பது வயது நிரம்பிய மகள் வழங்கிய பூங்கொத்தை பெற்றுக்கொண்டபின் மகாராணி, விருந்தினர்களுடன் கலகலப்பாக இணைந்து கொண்டார். மகிந்த மற்றும் ஷிராந்தி ராஜபக்ஷ ஆகியோருக்கு வாழ்த்துக்கூறி அவர்களுடன் கைகுலுக்கிய மகாராணி அவர்களுடன் ஒரு சிறிய உரையாடலிலும் ஈடுபட்டார். மகாராணி மிகவும் நிம்மதியாகக் காணப்பட்டார். அங்குள்ளவர்கள் தெரிவித்ததின்படி, பிரித்தானிய பத்திரிகைகளில், மகாராணி மகிந்தவுடன் விரைவாக கைகுலுக்கி விட்டுச் சென்றார் என்று வெளியாகியிருந்தது தவறானது.

# செவ்வாய் கிரகத்தில் குடியிருப்பு 2023 ஆம் வருடத்தில் சாத்தியம்!

நமது சூரிய குடும்பத்தில் உள்ள செவ்வாய்க் கிரகத்தில் உயிரினங்கள் வாழ்வதற்கான ஆதாரங்கள் உள்ளதென்றும், ஒரு சிலர் இல்லையென்றும் இருவேறு கருத்துக்கள் நிலவிவருகிறது. இந்த சூழ்நிலையில், இன்னும் 11 வருடத்தில் நெதர்லாந்து நாட்டிலிருந்து துணிச்சலாக தனியார் விண்வெளி வீரர்கள் நான்குபேரைக் கொண்ட



ஒரு குழுவை ஒரு வழிப் பயணமாக அனுப்பி வைக்கப்பட உள்ளது.

அந்தக் குழுவிற்குப் பெயர் மார்ஸ்-1 என பெயரிடப் பட்டுள்ளது. இதனைத் தொடங்கியவர் டச்சு தொழிலதிபரும், முன்பு மாற்று ஆற்றல் நிறுவனத்தின் தலைவருமான பஸ் லான்ட்ரொப் ஆவார். செவ்வாய்க் கிரகத்தை அடையவேண்டும் எனும் துணிச்சலான பயணத்திற்கு தயாராகிவரும் பட்டியலில் மார்ஸ்-1 உறுதியாக முன்னணியில் உள்ளது.

இந்த பயணத்தின் முதல் படியாக 2016இல் செவ்வாய்க் கிரகத்திற்கு தகவல் தொடர்பு செயற்கைகோளை அனுப்பும். அதற்குப் பிறகு இரண்டாவதாக, தூசு நிறைந்த செவ்வாய் கிரகத்தில் ஒரு நல்ல இடத்தை தேர்ந்தெடுத்து குடியிருப்பு அமைப்பதற்கு, ரெட் ப்ளானட் ரோவர் எனும் ரோபோவை அனுப்ப உள்ளது. மூன்றாவதாக, குடியிருப்பு அமைத்து அதில் வாழ்வதற்கான உள்கட்டமைப்புகளும், ஒட்சிசன் மற்றும் தண்ணீர் உருவாக்கித் தரக்கூடிய மெஷின்களும், சோலார் தகடுகளும் அனுப்பிவைக்கப்பட உள்ளன.

அதற்குபிறகு, 2022 ஆம் வருடத்தில் செப்டம்பர் 14 ஆம் திகதி உலக நாடுகளையே ஆச்சரியத்தில் ஆழ்த்தும் வகையில், மார்ஸ்-1 எனும் நான்கு விண்வெளி வீரர்கள் அடங்கிய முதல் குழு அனுப்பி வைக்கப்பட உள்ளது.

இந்த புதிய குடியிருப்பு சகாப்த பயணம் செவ்வாய்க் கிரகத்தை சென்றடைய 10 மாதங்கள் ஆகும். அதற்கு அவர்கள் முற்றிலும் மூடப்பட்டுள்ள அறைகளில் ஒருவரை ஒருவர் துன்புறுத்தாமல் அச்சூழலுக்கு ஏற்ப தங்களை தயார்படுத்திக் கொண்டு எவ்வாறு மனிதன் அங்கு வாழ முடியும் என ஆராய்வார்கள்.

இவர்களைத் தொடர்ந்து அடுத்த இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை அடுத்தடுத்து துணிச்சலான விண்வெளி வீரர்கள் தொடர்ந்து செவ்வாய்க் கிரக குடியிருப்புக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். ஆனால் அவர்கள் யாரும் மீண்டும் பூமிக்கு திரும்பாமல் செவ்வாய்க்கிரக வாசிகளாகவே வாழ்வார்கள் என திட்டமிடப்பட்டுள்ளது. இது ஒரு நீண்ட காலத்திற்கு நிரந்தரமாக அமையப்போகும் வலிநிறைந்த துணிச்சல் மிக்க செயல் திட்டம் என்று லாண்ட்ரொப் தெரிவித்துள்ளார்.

# அரசும் தமிழ்த்தரப்பும் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்…

**– சாலையூரான் –**

புலிகளுக்கெதிரான இறுதிக்கட்டப் போரில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு நிரந்தர அமைதிக்கான சூழல் ஏற்படுத்தப்பட்டு விட்டதாக அரசு கூறிவரும் நிலையில், கடந்த வாரம் இலங்கையிலும் லண்டனிலும் ஏககாலத்தில் கவனத்துக்குரிய இரு சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன.

ஒன்று, இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட சனல்-4 தொலைக்காட்சி நிருபர்கள் நாடு கடத்தப் பட்டிருப்பது, மற்றையது பொதுநலவாய நாடுகள் அமைப்பின் ஏற்பாட்டில் லண்டனில் நடைபெற்ற கூட்டத்துக்கு சென்ற இலங்கை ஜனாதிபதிக் கெதிராக அங்கு வாழும் இலங்கைத் தமிழர்கள் தமது எதிர்ப்பு உணர்வலைகளை வெளிப்படுத்தி யிருப்பது.

ஏககாலத்தில் இந்த இரு சம்பவங்களும் நடைபெற்றமை தற்செயலானது போல் தோற்றமளித்தாலும், அரசமட்டத்திலும் அவ்வாறே தமிழ்மக்கள் மட்டத்திலும் நிலவும் அதிருப்தி உணர்வலைகளை தெளிவாக வெளிப்படுத்தும் சம்பவங்களாக இவற்றைக் குறிப்பிட முடியும்.

லண்டன் வாழ் தமிழர்கள் ஜனாதிபதிக்கு எதிர்ப்புணர்வை வெளிப்படுத்த முடிந்தது என்றால் மறுபுறம் சர்வதேச மட்டத்தில் அரசுக்கு அபகீர்த்தி ஏற்படுவதற்கு பிரதான காரணியாக செயற்பட்ட சனல் - 4 தொலைக்காட்சி நிருபர்களை வெளியேற்றி, அரசு பதிலடியை வெளிப்படுத்தியிருக்கிறது.

இரு தரப்பினருமே தமது எதிர்த்தரப்பை துரோகிகளாகவும் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்கிற தோரணையிலும் தமது எதிர்ப்பலைகளை வெளியிடும் நிலைமை மீண்டும் இந் நாட்டில் ஏன் வளர்கிறது என்கின்ற கேள்வியை இவ்விடத்தில் கேட்பது அவசியமானது.

குறிப்பாக போருக்குப் பின்னர், பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி கிடைக்க உழைப்பதாகக் கூறிக் கொண்டு சர்வதேசம் இலங்கை விடயத்தில் மூக்கை நுழைத்திருப்பதே கூர்மையடைந்துள்ள இந்த எதிர்ப்புணர் வின் வெளிப்பாட்டுக்கான அடிப்படைக் காரணமாகும்.

இங்கு சர்வதேசம் இருதரப்புக்குமிடையே மூக்கை நுழைத்திருக்கும் விதம் உள்நாட்டில் இணக்கமான ஒரு சூழலை உருவாக்குவதற்கு பதில் இரு தரப்புக்கு மிடையே விரோதமான ஒரு சூழ்நிலை மேலும் வலுவடைவதற்கே வழியை ஏற்படுத்தி இருக்கிறது.

இரு தரப்புக்கும் இடையே ஏற்பட்டிருக்கும் இவ்வாறானதொரு பகையுணர்வு நிலை இரு தரப்பையும் சர்வதேசத்துக்கு புறம்பாக எக்காலத்திலும் எந்தவொரு சூழலிலும் எத்தகைய குறைந்தபட்ச இணக்கமான நிலைக்கும் சென்று விடக் கூடாதென்பதில் எச்சரிக்கையுடன் இருக்கின்ற ஒரு நிலைமைக்கே கொண்டு சென்றிருக்கின்றது. இதன் விளைவாக இரு தரப்பும் தத்தமது நிலையில் தாம்



எதிர்கொள்ளும் அக நெருக்கடிகளை மறுதரப்புடன் மனம் விட்டுப் பகிர்ந்து கொள்ள முடியாத ஒரு நிலைமைக்குள் சென்றிருக்கின்றன.

தாம் விரும்பும் விதத்தில் எதிர்த்தரப்பை பழிவாங்கி தீர்க்கவோ அன்றி ஒற்றுமையாக இணங்கிச் செல்லவோ முடியாத சூழலில் வெளியே வாய்ப்பு கிடைக்கின்ற போதெல்லாம் எதிர்த்தரப்பை அவமதித்தல் அல்லது தலைகுனியச் செய்தல் என்பதற்குக் கங்கணங்கட்டி நிற்கின்றன.

அரசும் கூடவே புலிகளும் பாரிய இழப்புக்களை எதிர்கொண்ட நிலையில் மிகுந்த விலைகொடுத்து பெற்றுக்கொண்ட இந்தச் சமாதான சூழலின் பின்னால் அரசும், தமிழ் தரப்பும் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஒருவரையொருவர் துரோகிகளாக காண்பித்து தமது அரசியலை முன்னெடுக்கும் தற்போதைய நிலைமை இலங்கை அரசியலில் மிகவும் துர்ப்பாக்கியமானதொரு சூழலேயாகும்.

போருக்குப் பிறகு அரசத் தரப்பும் அவ்வாறே தமிழ்த்தரப்பும் உண்மையான மனந்திறந்த வெளிப்படையான இணக்கமொன்றுக்குச் செல்வதில் இழைத்துள்ள தவறுகளை முறையாக மதிப்பீடு செய்து கொள்வதே சரியான வழிமுறையாக இருக்க முடியும்.

இதன் மூலமே தற்போது நிலவும் விரோதமான மனப்போக்கில் இருந்து இரு தரப்பும் விடுபடுவது மட்டுமன்றி உள்நாட்டிலேயே பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதற்கான வழிவகைகளையும் இருதரப்பினரும் கண்டறிந்து கொள்ள முடியும்.

அப்பாவி இளைஞர்கள் கைதாகி தடுப்பு முகாம்களில் இருக்க அரசப் படைகளால் கைதான புலிகள் விடுதலையாகி சுதந்திரமாக நடமாடுவதாக பாதிக்கப்பட்ட பொதுமக்கள் கூறிவரும் முறைப்பாடுகளும் மீள்குடியமர்ந்துள்ள மக்களுக்காக அரசால் மேற்கொள்ளப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அந்த மக்களை சுயமான ஒரு தொழில் வருமான நிலைக்குச் இட்டுச் செல்லத் தவறி விட்டது என முன்வைக்கப்படும் விமர்சனங்களும் தமிழ் மக்கள், தம்மை பாரபட்சமாக அரசு நடத்துவதாக உணரும் நிலைக்கு இட்டுச் சென்றிருக்கின்றன.

பிந்தியதாக, வடக்கே படைத்தரப்புக்காக நிலங்களை கொள்வனவு செய்வதில் அரசத்தரப்பு அக்கறை காட்டி வருவதாக வெளிவரும் செய்திகளும், அவ்வாறே பௌத்த ஆலயங்களை தமிழர் பகுதிகளில் நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக முன்வைக் கப்படும் விமர்சனங்களும் நாட்டில் மீண்டும் இனத்துவ நிலைப்பட்டு மக்கள் சிந்திக்கும் போக்கிற்கே வழிவகுக்குமாகையால் அரசுத் தலைவர்கள் இது குறித்து தீவிர கவனத்தில் கொள்வது அவசியம்.

மறுபுறத்தில், தமது தேர்தல் வெற்றிக்கான சுயநலன் நோக்கில் இருந்து கொண்டு இனப்பிரச்சி னைத் தீர்வுக்கு சர்வதேசத்தை தொடர்புபடுத்தி தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் தேசியக் கூட்டமைப் பினர் கூறிவரும் கருத்துக்கள் அரசுத் தரப்புக்கும் தேவையற்ற அச்சங்கள் சந்தேகங்களை ஏற்படுத்தியி ருப்பதுடன், விரோதிகள் என்பதையும் விட துரோகிகளாக தமிழ் தலைவர்களை நோக்கும் நிலைமை தென்னிலங்கை மக்கள் மத்தியில் உருவாகியிருப்பதையும் தமிழ் தலைவர்கள் என தம்மை கூறிக்கொள்பவர்கள் உணர்ந்து செயற்படவேண்டிய தருணம் இது.

நெருக்கடியான இந்த நிலைமையில் இனத்துவ நிலைப்பட்டுத்தான் தத்தமது தலைமைத்துவங்களை தக்க வைத்துக்கொள்ள முடியுமென இரு தரப்பு தலைவர்களும் சிந்திப்பார்களாயின் மீண்டும் நாட்டில் அமைதியற்ற ஒரு சூழல் உருவாவதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது.

# தமிழரசுக் கட்சி பெயரிலும் தீர்விலும் போடும் இரட்டைவேடம்!

சம்பந்தனது உரையில் சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒரு விடயம், இது இன்னொரு வகையான மாவீரர் தின உரையோ என்று தோன்றியமையாகும். இதற்கான காரணம் உரையின் அமைப்பு அதன் தொனி என்பன மாவீரர் உரையை ஒத்ததாக இருந்தது. மட்டுமல்ல, சில விடயங்கள் மாவீரர் தின உரையில் இருந்து எடுத்து அவ்விதமே பயன்படுத்தியதுபோல் இருந்தமையாகும்.

உதாரணமாக, உலகம் 'நீதி அச்சில்' இயங்குகின்ற ஒன்று அல்ல. எனவே, அதனிடமிருந்து இயல்பாகவே நாம் நியாயத்தை எதிர்பார்க்க முடியாது என்று கூறியமை நிச்சயமாக பிரபாகரனின் மாவீரர் தின உரையில் இருந்து எடுக்கப்பட்டதாகும். இதற்குப் புறம்பாக தமிழ் தரப்பின் தந்திரோபா யம் பற்றிய விடயங்களில் 'தொனி' பெரிதும் ஒத்திருந்தமை கவனிக்கப் படக்கூடியது. இது தற்செயலாக இடம் பெற்றிருக்கும் என்று கூற முடியாது. இந்த ஒருமைப்பாடு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டதாக இருப்பின், அதற்கான காரணம் சம்பந்தனை பிரபாகரன் போன்றதொரு தலைவராக (தேசியத் தலைவர்) சித்திரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சியாக இருக்க வேண்டும்.

உரையின் மென்மையான ஒரு கோணம் என்னவெனில், அதில் ஒரு ரஜனித்துவம் காணப்பட்டிருந்தமை யாகும். உரையில் இடைப்பாகத்தில் இருந்து பந்திகளுக்கிடையே ஒரு சமச்சீராக 'நாம் பொறுமையாக இருக்கவேண்டும்' என்று தொடர்ச்சியாக ஒரு 'பன்ச் டயலாக்' மாதிரி கூறிவந்திருந்தார். அதில் ஒரு சுவை இருந்தாலும் இப்போது நாம் பொறுமையாக இருக்க வேண்டும் என்று அத்தனை தடவை அழுத்திக் கூறவேண்டிய காரணம் என்ன என்ற கேள்வி எழுவது சாதாரணமானது.

இதற்கு அடிப்படையான இரண்டு காரணங்கள் இருக்கலாம். ஒன்று இன்றைய தமது சமூகத்தின் நிலை தொடர்பில் அல்லது தேசியக் கூட்டமைப்பு முன்னெடுக்கும் (அல்லது முன்னெடுக்காதிருக்கின்ற) செயற்பாடுகள் தொடர்பில் தமிழ் மக்கள் பொறுமை இழந்து வருகின்றார்கள் என்று சம்பந்தன் கருதியிருக்கக்கூடும்.

இரண்டாவது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்காலச் செயற்பாடு கள் விரக்தியை ஏற்படுத்திவிடக்கூடும் என்று கருதப்பட்டிருக்கலாம்.

எனவே, இது முன் ஜாக்கிரதையாக கூறப்பட்ட விடயமாக இருக்கக்கூடும். எவ்வாறாயினும் ஒரே உரையில் எத்தனை தடவைகள் பொறுமையாக இருக்கவேண்டும் என்று கூறப்பட்டன என்று பார்க்கும்போது இது முக்கியமான பிரச்சினையாகவே இருக்கவேண்டும்.

சம்பந்தனின் உரையின் முக்கிய மான ஒரு பரிமாணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் (அல்லது தமிழ் அரசுக் கட்சியின்) அரசியல் இலக்கு தொடர் பிலானது. இன்று கூட்டமைப்பின் அரசியல் இலக்கு என்ன? தனி நாடா? சமஷ்டியா? அல்லது 13ஆவது திருத் தத்தை அடிப்படையாகக் கொண்ட மாகாண சபையா? இக்குழப்பம் சற்று காலமாகவே இருந்து வருகின்ற ஒன்றே ஆகும். 2010ஆம் ஆண்டு தேர்தல் விஞ்ஞாபனத்தில் சமஷ்டி என்று கூறப்பட்டது. பின்னர் மாகாண சபையின் பொலிஸ் அதிகாரங்கள் காணி அதிகாரங்கள் பற்றித் தீவிர மாகப் பேசப்பட்டது. அதற்கிடையே குறிப்பாக, புலம்பெயர்ந்தவர்கள் மத்தியில் சுயநிர்ணய உரிமை பற்றிப் பேசப்பட்டது. எனவே, இது ஒரு தெளிவான குழப்பமாகவே இருந்தது. சம்பந்தனின் உரை இக்குழப்பத்தைத் தீர்ப்பதற்கு உதவியது என்று கூற முடியாது.

சம்பந்தன் தெளிவாகக் கூறிய ஒரு விடயம் என்னவெனில் கட்சி 13ஆவது திருத்தத்தை ஒரு தீர்வாக ஏற்றுக்கொள்ளவில்லை என்பது, நடைமுறையில் இது எந்த அளவிற்கு உண்மையானது என்பது பொறுத்திருந்து பார்க்கப்பட வேண்டியது. கோட்பாட்டு ரீதியாக சம்பந்தன் உரையில் இருந்து ஏற்படுகின்ற குழப்பம் என்னவெனில், இப்போதைய இலக்கு தனி நாடா, ஒன்றுபட்ட நாட்டினுள்ளான தீர்வா என்பது. மேலோட்டமாக நோக்குகையில் சம்பந்தன் கடந்தவாரம் தனி நாட்டுப் பிரகடனம் செய்தது போலவே இருந்தது. இதனை அடிப்படையாகக் கொண்டே சிங்கள கடும் தேசியவாதிகளின் தாக்குதலுக்கு சம்பந்தன் உள்ளாகி இருந்தார்.

இருப்பினும், இங்கு நாம் சுட்டிக்காட்ட முனைவது என்னவெனில் தனி நாடா? ஒன்றுபட்ட நாட்டினுள் தீர்வா என்ற விடயத்தில் சம்பந்தன் தெளிவாகவே குழப்பி இருந்தார் என்பதாகும். உண்மையிலேயே இவ்விதமான குழப்பம் ஒன்று காணப்படுகின்றதா அல்லது இது திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்டதா என்பது தெளிவானது அல்ல.

எவ்வாறெனினும், இதுதொடர்பில் இரண்டு விடயங்கள் சுட்டிக்காட்டப்பட வேண்டும். ஆரம்ப காலத்தில் இருந்தே தமிழரசுக் கட்சி தொடர்பில் இரட்டை வேடம்போடும் கட்சி என்ற ரீதியில் விமர்சனம் ஒன்று காணப்படுகின்றது. தமிழ் மக்களுக்கு ஒரு முகம் தெற்கிற்கு இன்னொரு முகம். தமிழ் அரசுக் கட்சியின் பெயரே கூட இதற்கு ஒரு காரணமாக இருந்தது. தமிழில் தனி அரசு என்பது போல் தமிழ் அரசுக் கட்சி என்று அழைக்கப்பட்டது. ஆங்கிலத்தில் சமஷ்டிக் கட்சி என்று அழைக்கப்பட்டது. சம்பந்தனின் இவ்வுரையும்கூட அவ்வகையானதே என்று விமர்சிக்கப்படுமாயின் ஆச்சரியப்படுவதற்கில்லை.

– எஸ்.ஐ.கீதபொன்கலன் கட்டுரையிலிருந்து.

# மனிதனா? மிருகமா?



ஒரு பெரிய நிறுவனத்தில வேலை பார்த்துக் கொண்டிருந்த ஒரு இளைஞன். அடிக்கடி நோய் வாய்ப்பட்டுக் கொண்டிருந்தான். பெரிய பெரிய டாக்டர்களைப் போய்ப் பார்த்து, மருந்து, ஊசி எல்லாம் வாங்கிப் போட்டும், எவ்வித பயனும் கிடைக்கவில்லை. கடைசியில் அவனுடைய புத்திசாலி மனைவி ஒரு நாள் சொன்னாள், "நீங்க மனுஷங்களுக்கு வைத்தியம் பார்க்கிற டாக்டர்களை விட்டுட்டு, ஏதாவது ஒரு நல்ல வெட்னரி டாக்டரிடம் (மிருக டாக்டர்) போய் உடம்பைக் காட்டுங்க! அவர்தான் உங்களுக்கு சரியான ட்ரீட்மெண்ட் கொடுக்க முடியும்" என்றாள்.

"என்னது மிருக டாக்டரிடமா? உனக்கென்ன மூளை கெட்டுப் போச்சா?" என்று சீறினான் கணவன்.

"எனக்கொண்ணும் கெட்டுப் போகல! உங்களுக்குத்தான் எல்லாமே கெட்டுப் போய் கிடக்கு! காலாங்காத்தாலே கோழி மாதிரி விடியுறதுக்கு முன்னமேயே எழுந்திருக்கிறீங்க! அப்புறம் காகம் மாதிரி குளிச்சிட்டு, குரங்கு மாதிரி "லபக் லபக்"கென்று ரெண்டு வாய் தின்னுட்டு, பந்தயக்குதிரை மாதிரி வேகமாக ஓடி அலுவலகம் போறீங்க! அங்கே போய் மாடு மாதிரி உழைக்கிறீங்க! உங்களுக்கு கீழே வேலை செய்யுறவங்க மேலே கரடியா கத்துறீங்க! அப்புறம் அலுவலகம் விட்டவுடனே, ஆடு மாடுகள் மாதிரி பஸ்ஸிலே அடைஞ்சு வீட்டுக்கு வாறீங்க! வந்ததும் வராததுமா, நாள் முழுக்க வேலை செய்த களைப்பிலே நாய் மாதிரி என்மேலே சீறி விழுறீங்க! அப்புறம் முதலை மாதிரி ராத்திரிச் சாப்பாட்டை "சரக் சரக்"கென்று முழுங்கிட்டு, எருமை மாடு மாதிரி போய் படுத்து தூங்குறீங்க!

மறுபடியும் விடிஞ்சா அதே மாதிரி கோழி கதைதான்! இப்படி இருக்கிறவங்களை மனுஷ டாக்டர் எப்படிங்க குணப்படுத்த முடியும்? அதனாலதான் சொல்றேன், நாளைக்கே ஒரு கால்நடை டாக்டரைப் போய் பாருங்க!" என்று ஒரே மூச்சில் சொல்லி முடித்தாள் மனைவி.

என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் கணவன் முழிக்க, "கோட்டான் மாதிரி முழிக்காதீங்க போங்க" என்று முத்தாய்ப்பு வைச்சாளாம் மனைவி..!

கொசுறு 'அப்ப நீயும் வாயேன் அங்க' என்று மனதுக்குள் முணுமுணுத்துக் கொண்டு நகர்ந்தான் கணவன்..!!

- நன்றி: இணையம்

# பச்சிலைகளின் பயன்பாடு

# அறுகீரை



வேறுபெயர்கள்: அறைக்கீரை, அரைக்கீரை

தாவரவியற் பெயர்: **Amarantns tristis**

இதை தோட்டங்களில் பயிர்செய்வார்கள். இதன் இலையின் மேற்பகுதி பச்சைநிறத்தோடும் கீழ்ப்பகுதி ஒருவித நீலமும் சிவப்பும் கலந்த நிறத்திலிருக்கும். இதில் தங்கம், இரும்புச்சதுக்கள் அதிகம் உண்டு. பத்திய உணவுக்கு எவ்விதத்திலும் கெடுதல் ஏற்படுத்தாது. பலவீனத்தைப் போக்கும். எந்த அறுசுவையுமில்லாது முளைக்கீரையைப் போலவே நல்ல உருசியும்,. மணமும் குணமும் உடையது. முளைக்கீரையை உண்ணுமளவிற்குச் சுமார்125 கிலோ முதல் 150கிலோ வரைக்கும் சமையல் செய்து தினமும் உட்கொள்ளலாம்.

அதனால் ஆரோக்கியத்தையும் தேககாந்தியையும் பெறலாம். இது ஒரு சஞ்சீவி மூலிகையாகும்.

## உணவில் பயன்படுத்தும் முறை

அரைக்கீரையோடு மிளகு, உள்ளி, பெருங்காயம், இஞ்சி, வெங்காயம் சேர்த்து உப்பிட்டுக் கடைந்து கொண்டு சாதத்தில் இக்கடையலைப் போட்டு நெய் விட்டுப் பிசைந்து சிறு குழந்தைகட்கு ஊட்டலாம்.

குழந்தைகளுக்குப் பால் கொடுக்கும் தாய்மார்களும் உணவில் தினம் சேர்த்து வரலாம். இதனால் நோய்த் தடுப்புச் சக்தி பலப்படும். மூளை வளர்ச்சி உண்டாகும். ஆஸ்மா மற்றும் பல பிணிகள் போன்றவற்றிற்கு அருமருந்தாகும். இதனை அடிக்கடி உபயோகித்து வருவதால் உடலின் எல்லாப் பாகங்களும் சீரான வளர்ச்சியைப் பெறுகின்றன. சுறுசுறுப்பை உண்டு பண்ணும். தேகம் பலம் பெறும். ஞாபக சக்தியை உண்டு பண்ணும்.

நாட்டு மருந்து சாப்பிடுபவர்கள் பத்திய உணவாகக் கீரைக் கடைசலையும், மிளகு ரசத்தையும் உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.

பிரசவித்த பெண்களுக்கு இன்றியமையாதது இக்கீரை. உடலின் உஷ்ணத்தை அதிகப்படுத்தும் புண்களை ஆற்றும். பால் பெருகும் சீதள வியாதிகளைத் தடுக்கும்.

## அரைக்கீரை தோசை

ஒரு டம்ளர் கடலைமாவு, ஒரு கரண்டி அரிசிமாவு, இஞ்சி ஒரு துண்டு, சின்ன வெங்காயம் பொடியாக நறுக்கியது கால் கப். அரைக்கீரை கால் கப், காய்ந்த மிளகாய் 5, உப்பு தேவையான அளவு, சோம்பு 3 தே.க, மிளகு 1தே.க, பூண்டுப்பல் ஆறு, நிலக்கடலை 100கி, பசுநெய் 50 கி, கொத்தமல்லி இலை ஒரு கைப்பிடி. மாவுகளை சலித்து உப்பு சேர்த்து வெங்காயம் பூண்டு தோலுரித்த பொடியாக அரித்துப் போட்டு அரைக்கீரை பொடியாக அரிந்து இவைகளைப் போட்டு இஞ்சியை அரைத்துப்போட்டு, காய்ந்த மிளகாயை அரைத்துப் போட்டு நிலக்கடலையையும் ஒன்றிரண்டாக உடைத்துப் போட்டு பிசைந்து தோசைப்பதமாக கரைத்து தோசைக் கல்லில் வார்த்து நெய் விட்டு சாப்பிடலாம்.

இதனால் உடம்புக்கு குளிர்ச்சி உண்டாகும். ஞாபக சக்தி உண்டாகும். பிரசவித்த தாய்மார்கட்டு ஏற்ற உணவாகும். இதன் தண்டுகளைக் கழுவி எடுத்து பூண்டு மிளகு இஞ்சி சேர்த்து அவித்த சாற்றில் ரசம் செய்து சாப்பிடலாம். பருப்பு சேர்த்தும் ரசம் தயாரிக்கலாம்.

அரைக்கீரை விதையோடு கேழ்வரகு குரக்கன் உழுத்தம் பருப்பும் சேர்த்து மாவாக்கிக் கொண்டு களியாக செய்து நெய்விட்டு இத்துடன் பனை வெல்லமும் சேர்த்து அல்வாவைப் போல் கிண்டி எடுத்துச் சாப்பிட்டு வரலாம். இதைக் காலை உணவாகவும் சாப்பிடலாம்.

தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் தாது புஷ்டியை உண்டாக்கும். தவறான வழியில் இளவயதில் ஆண்மை இழப்புக்கு இலக்கானவர்கள் தொடர்ந்து இக்கீரையை சாப்பிடுவதன் மூலம் ஆண்மையைப் பெற்றுவிட முடியும்.

## ஆண்மைக் குறைவிற்கு

அறக்கீரை 100கி. மிளகு 10கி. கொத்தமல்லி இலை 50 கி., சீரகம் 10 கி. அனைத்தையும் இளஞ்சூட்டில் சூப்தயாரித்து ஒரு நாளைக்கு 4 வேளை பருகலாம். இவ்வாறு 20 நாட்கள் சாப்பிடலாம்.

## மூட்டு வாதத்திற்கு

1கைப்பிடி அறக்கீரைக்கு 4 குவளை நீர்விட்டு நாலில் ஒன்றாய்க் குறுக்கி காலை மாலை குடித்து வரலாம்.

## நீரிழிவு நோயிற்கு

அறக்கீரையை நிழலில் உலர்த்தி இடித்துச் சுரணம் செய்து நாளும் 5-10கி. அளவு உணவுக்குப்பின் வெந்நீரில் சாப்பிடலாம். இல்லையே நாளும் உணவில் அறைக்கீரை சமைத்துச் சாப்பிடலாம்.

சிரசில் ஏற்படும் பீனிசவலி, கண்பார்வைக் கோளாறு, செவி நொய்கள், மூக்கடைப்பு இவற்றிற்கு.

## அரைக்கீரைத் தைலம்


அரைக்கீரை விதையையும் கார் போக அரிசியையும் வகைக்கு 30 கி. எடுத்து பொடித்து வெங்காயச்சாறு 700மி.லீற்றரில் ஊறவைத்து வெய்யிலில் உலர்த்தி அரைத்து 700மி.லி. நல்லெண்ணெயில் போட்டுக்காய்ச்சி தைலம் செய்து கொண்டு தலைக்குத் தேய்த்து வரலாம்.

சளி, இருமல் உள்ளவர்கள் இக்கீரையுடன் துவரம் பருப்பு, மிளகாய் வற்றல் பெருங்காயம், வெங்காயம், பூண்டு முதலியவற்றைச் சேர்த்து சம்பல் போல செய்து ஆகாரத்துடன் உட்கொண்டு வரலாம்.

வாத சம்பந்தப்பட்ட வியாதிகளுக்கு இக்கீரையோடு சுக்கு மிளகு வெங்காயம் பெருங்காயம், பூண்டு, பசுநெய் சேர்த்து உணவாக்கிக்கொள்ள வேண்டும்.

நோயற்ற வாழ்வு வாழ அரைக்கீரையை நம்புங்கள். உங்கள் வீட்டுத் தோட்டங்களில் பயிரிடுங்கள். பலன் பெறுங்கள்.

**டாக்டர் திருமதி T.குமுதறஞ்சன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்த ஆயுர்வேத அலகு
யாழ். பல்கலைக்கழகம்.




# காகங்களின் கணக்கு

**மன்னா** கிருஷ்ணதேவராயரின் அரச சபையில் இருந்த அமைச்சர்கள் அனைவரும் விகடகவி தெனாலிராமனை பார்க்கும் போது அன்பாகவும், பாசத்தோடும் இருப்பது போல் நடிப்பார்கள். உண்மையில் அத்தனை அமைச்சர்களும் தங்கள் மனதுக்குள் தெனாலிராமனை எப்படியாவது மன்னர் கிருஷ்ண தேவராயரிடம் இருந்து பிரித்து அவனை தனிமைப் படுத்த வேண்டும் என்று பலவேறு வழிகளில் செயல்பட்டார்கள். ஒருநாள் தனியாக கூடிய அத்தனை அமைச்சர்களும் மன்னர் கிருஷ்ணதேவாராயர் கேட்கும் கேள்விக்கு தெனாலிராமன் பதில் சொல்ல முடியாமல் தவித்து முடிவில் அவமானப்பட வேண்டும் என்றும் அதனால் மன்னருக்கும் தெனாலிராமனுக்கும் உள்ள நட்பு முறிய வேண்டும் என்று திட்டம் தீட்டினார்கள்.

அதன்படி மன்னர் கிருஷ்ணதேவராயரிடம் சென்ற அமைச்சர்கள், 'மன்னர் மன்னா! சமீபகாலமாக தெனாலிராமனின் நடவடிக்கைகள் சரியில்லை' என்று கூறினார்கள். அவன் செய்த தவறுகளை கூறுமாறு கேட்டார் கிருஷ்ணதேவராயர். 'தெனாலிராமன் தவறுகள் கொஞ்சநஞ்சமல்ல. பட்டியல் போட்டுச் சொன்னால் சொல்பவர்கள் வாய் வலிப்பதோடு கேட்பவர்கள் பொறுமையும் இழந்து விடுவார்கள்' என்று புளுகிச் சொன்னார்கள் அமைச்சர்கள்.

தெனாலிராமனை எந்த வகையில் தண்டிக்கலாம் என்று கேட்டார் கிருஷ்ணதேவராயர்.

கிருஷ்ணதேவராயர் தங்களை நம்பி விட்டார் என்று மகிழ்ச்சி அடைந்த அமைச்சர்கள், 'மன்னா! நாளை அரச சபை கூடும் போது தாங்கள் தெனாலிராமனிடம் ஒரு கேள்வி கேட்க வேண்டும். நீங்கள் கேட்கும் கேள்விக்கு தெனாலிராமன் பதில்கூறி விட்டால் அவன் உண்மையிலேயே அறிவில் சிறந்தவன் என்று ஒப்புக் கொள்கிறோம்' என்று கூறினார்கள்.

'தெனாலிராமனிடம் என்ன கேள்வி கேட்க வேண்டும் என்று கூறுங்கள்.'

'மன்னர் மன்னா! தாங்கள் விஜய நகரத்தில் உள்ள மக்களின் எண்ணிக்கையை அவ்வப்போது அதிகாரிகள் மூலமாக கேட்டுத் தெரிந்து கொண்டு, அனைவரும் நலமுடன் வாழ பல நல்ல திட்டங்களை அவ்வப்போது செய்து மக்களின் நன் மதிப்பை பெறுகிறீர்கள். ஆனால் நீங்கள் இது வரை நம் நாட்டில் உள்ள பறவைகளின் எண்ணிக்கையை பற்றி எந்தவிதமான கவலையும் படவில்லை.'

'பறவைகளின் எண்ணிக்கையை பற்றி ஏன் கவலைப் படவேண்டும்?'

'மன்னா! நம் நாட்டில் காகங்களின் எண்ணிக்கை அதிகமாகி விட்டது. காகங்களால் மக்கள் பலவிதமான தொல்லைகளுக்கு ஆளாகி அவதிப்படுகிறார்கள். ஆகவே தாங்கள் தெனாலிராமனிடம் நம் நாட்டில் உள்ள காகங்களின் எண்ணிக்கையை பற்றி கேட்க வேண்டும் தெனாலிராமன் ஒருவனால் மட்டுமே காகங்களின் எண்ணிக்கையை சரியாக கூறமுடியும்' என்று கூறினார்கள் அமைச்சர்கள்.

அரச சபையைக் கூட்டிய மன்னர் கிருஷ்ண தேவராயர் தெனாலிராமனை பார்த்து, 'உன் ஒருவனால் மட்டுமே பதிலளிக்கக் கூடிய கேள்வியை உன்னிடம் கேட்க உன்னை அழைத்தேன்' என்றார்.

'கேளுங்கள் மன்னா' என்றான் தெனாலிராமன்.

'தெனாலிராமா! நம் விஜயநகரத்தில் காகங்களின் எண்ணிக்கை பெருகி, அவை மக்களுக்கு நிறைய தொல்லைகள் கொடுப்பதாக நிறைய புகார்கள் வந்துள்ளன. நீ காகங்களின் எண்ணிக்கையை உடனே கூறினால் தக்க நடவடிக்கை எடுக்க உதவியாக இருக்கும்.'

தெனாலிராமன் சிரித்துக்கொண்டே, 'மன்னா! நம் நாட்டில் பறக்கும் காகங்களை விட தங்கள் சுய நலத்துக்காக பிறரைப் பற்றி கோள் சொல்லி பிழைப்பு நடத்தும் மனித உருவில் உள்ள காகங்கள் தான் நிறைய உள்ளன' என்றான்.

மன்னரும் சிரித்துக் கொண்டே, 'நம் நாட்டில் மரங்களில் அமர்ந்து கொண்டும், வானத்தில் பறந்துகொண்டும் உள்ள காகங்களின் எண்ணிக்கையை சரியாக கூறு' என்றார்.

தெனாலிராமனும் யோசிப்பது போல யோசித்து அரச சபைக்கு வெளியே வந்து அரண்மனையைச் சுற்றி இருந்த மரங்களையும் அதன் மேல் அமர்ந்திருந்த காகங்களையும் பார்த்து மனதுக்குள் எண்ணுவது போல் எண்ணினான். பிறகு வானத்தைப் பார்த்து பறந்து கொண்டுள்ள காகங்களை எண்ணினான். பிறகு அரச சபையின் உள்ளே நுழைந்த தெனாலிராமன் மன்னரை பார்த்து, 'மன்னா! நீங்கள் கேட்ட கேள்வி சற்று கடினமாக இருந்தாலும் அதற்கான பதிலை கூற எனக்கு எந்தவிதமான கஷ்டமும் ஏற்படவில்லை. மன்னா! காகங்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து எண்பத்து எட்டாயிரத்து நூற்றுப் பதினேழு' என்றான்.

தெனாலிராமன் கூறிய பதிலைக் கேட்ட அமைச்சர்கள் "மன்னா! தெனாலிராமன் கூறிய காகங்களின் எண்ணிக்கையை எப்படி நம்புவது" என்று கேடடார்கள். தெனாலிராமன் உடனே எழுந்து "மன்னா! நான் கூறிய காகங்களின் எண்ணிக்கை சற்று குறைவாக இருந்தால் நம் நாட்டில் இருந்த காகங்கள் தங்கள் உறவினர்களை பார்க்க அண்டை நாடுகளுக்கு சென்றிருக்கும். நான் கூறிய காகங்களின் எண்ணிக்கை சற்று கூடுதலாக இருந்தால் அண்டை மாநிலங்களில் இருக்கும் காகங்கள் நம் நாட்டில் உள்ள தங்கள் உறவினர்களை பார்க்க வந்திருக்கும்" என்றாண்.

தென்னாலிராமன் கூறிய காகங்களின் எண்ணிக்கையையும், அது சரியானது என்பதற்கான அவனது விளககத்தையும் கேட்ட மன்னரும் அமைச்சர்களும் பதில் ஏதும் கூற முடியாத நிலையில் மௌனமானார்கள்.

தெனாலிராமனின் புத்தி நுட்பமான பதிலால் மகிழ்ச்சி அடைந்த கிருஷ்ண தேவராயர், தெனாலிராமனுக்கு பரிசுகளை வழங்கி கௌரவித்தார்.

# அதிநவீன பரிசோதனை ஆய்வு கூடவசதி வடபகுதி மக்களுக்கு வரப்பிரசாதம்

## யாழ். நொதேர்ன் சென்றல் வைத்தியசாலை இயக்குநர் டாக்டர் கேசவராஜா



(கிரு,சாந்தன் - சிகரம்)

அதிநவீன பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு யாழ்.மாவட்ட மக்கள் கொழும்புக்குச்செல்லவேண்டிய தற்காலத்தில் அம்மக்களிற்கு இங்கேயே அத்தகைய பரிசோதனைகளை மேற்கொள்வதற்கே இவ் ஆய்வு கூடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது என வைத்தியசாலையின் நிர்வாக இயக்குநர் வைத்தியர் கேசவராஜா தெரிவித்துள்ளார்.

யாழ் நொதேர்ன் சென்றல் வைத்தியசாலையில் (nothern central hospital) புதிய ஆய்கூடம் ஒன்று நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது.

மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில்,

தற்போது அதிநவீன ஆய்வுகூட பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு கொழும்பு வைத்தியசாலைகளுக்கே வடபகுதி மக்கள் செல்கின்றனர். அதனால் அதிக செலவும், நேரவிரயமும் ஏற்படுகின்றது. அந்த நிலை மாறி தற்போது யாழ்ப்பாண மக்கள் மட்டும் அல்லாது நாட்டின் சகல பாகங்களிலிருந்தும் இங்கு வந்து வைத்திய சேவையினைப் பெற்றுக் கொள்கின்றனர். இவ்வாறு வைத்திய சேவையினைப் பெற்றுக் கொள்ளவரும் நோயாளிகளின் எண்ணிக்கை தற்போது அதிகரித்திருக்கிறது

அத்துடன்,பல கிலோமீற்றர் தூரம் பயணம் செய்து மேற்கொள்ளவேண்டியஅனைத்துப் பரிசோதனைகளையும் யாழ்ப்பாணத்திலேயே மேற்கொள்ளக்கூடியதாக இந்த அதிநவீன ஆய்வுகூடம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தப்புதிய பரிசோதனைக் கூடத்தில் சில பரிசோதனைகளை உடனடியாகவும் சில பரிசோதனைகளை ஒரு சில தினங்களிலும் சோதனைக்கான பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்,

புதிய அதிநவீன ஆய்வுகூட பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக ஆய்வுகூட பரிசேதகர்களான றெஷானி குணநாயகம், சிறாஜ், அரியகுலரட்ணம் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்

இந்த நிகழ்வின் ஆரம்ப வைபவத்தில் வைத்தியர் அஜந்தா, வைத்தியர் சிறிதரன், வைத்தியர் திருமதி சூரியக்குமார், சட்டவாளர் சிவலிங்கம், வைத்தியர் ஜேசுபொனிபஸ், மெட்ரோ பொலிஸ் நிறுவன உதவி இயக்குனர் வைத்தியர் ஆனந்த குப்புசாமி, மெட்ரோ பொலிஸ் நிறுவன் நிர்வாக இயக்குநர் தெய்வேந்திரசிங், ராஜவூட், நொதேர்ன் சென்றல் வைத்தியசாலையின் இயக்குநர் எஸ்.பி.சாமி, வைத்தியசாலை ஊழியர்கள் மற்றும் உயர்அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

# உடுவில் மகளிர் கல்லூரியில் மாணவ முதல்வர்கள் தெரிவு


(சிகரம்)

யாழ்.உடுவில் மகளிர் கல்லூரியில் கடந்த யூன் 08ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாணவத் தலைவர்கள் தமது பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இந்தக் கல்லூரியின் 2012ஆம் ஆண்டுக்கான மாணவ முதல்வராக செல்வி கமலினி மில்ஸ் தெரிவுசெய்யப்பட்டுளார்.


மேலும் சிரேஷ்ட மாணவத் தலைவர்களாக துவாரகா காந்தரூபன்,பிரதிக்ஷனா சிவசுப்பிரமணியம்,சாளினி செல்வரத்தினம்,கோபிகா குணசேகரம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பாடசாலை அதிபர் திருமதி சிறாணி மில்ஸ் தலைமையில் நடைபெற்ற இந்த மாணவத் தலைவர்கள் பொறுப்பேற்பு நிகழ்வில்,பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், அலுவலர்கள், பணியாளர்கள் முன்னிலையில் 28 மாணவர்கள் தமது பொறுப்புக்களை ஏற்றுள்ளனர்.



கடந்த வருடம் மாணவத் தலைவராக பணியாற்றிய செல்வி,சாம்பவி சிவாஜி தமது பொறுப்புக்களை புதிய மாணவ முதல்வரிடம் கையளித்தல்,பாடசாலை அதிபர் பாடசாலையின் உயிர் ஒளியைப் பற்றவைத்து அதனை மாணவ முதல்வர் ஊடாகப் பரவச் செய்யும் நிகழ்வு, பாடசாலை அதிபரின் சிறப்புரை,மற்றும் இறையாராதனை ,இசை நிகழ்ச்சிகள் என்பன சிறப்பு நிகழ்ச்சிகளாக நடைபெற்றன.

# பாரம்பரிய கலைகளுடன் நடைபெற்ற ஆலய பூங்காவனத் திருவிழா



(சிகரம்)

சங்கானை சிலம்புப் புளியடி வைரவர் ஆலயப் பூங்காவனத்தில் பாரம்பரிய நாட்டியங்கள் சங்கானை சிலம்புப்புளியடி ஞான வைரவர் ஆலயத்தின் பூங்காவனத் திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை வெகுவிமர்சையாக நடைபெற்றது. இந்த பூங்காவனத் திருவிழாவில் பாரம்பரிய நாட்டியங்களான பொய்க்கால் குதிரையாட்டம், கரகாட்டம், மேளக்கச்சேரி என்பன முதன் முறையாக வெகுவிமரிசையாக நடைபெறறன.

மே 30ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகிய இந்த ஆலயத்தின் வருடாந்த அலங்காரத் திருவிழா தொடர்ந்து 10 நாட்கள் நடைபெற்று நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பூங்காவனத் திருவிழாவுடன் நிறைவு பெற்றது.

இந்த அலங்கார திருவிழா நிகழ்வில் ஆலயங்களில் வழமையாக நடைபெறும் நிகழ்வான மேளக்கச்சேரி நடைபெற்ற போதும், 5 கூட்டம் மேளங்கள் மற்றும் நாதஸ்ர கலைஞர்களின் நாதஸ்வரக் கச்சேரி என்பவற்றுடன், தென்னிந்தியாவின் 'விஜய்'தொலைக்காட்சியின் 'சூப்பர் சிங்கர்' புகழ் கௌசிக்கின் இசை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வுகள் யாவற்றையும், சங்கானை இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் இந்தக் கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் முன்னின்று செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பிரதேசத்தில் முதன் முறையாக நடைபெற்ற கரகாட்டம் மற்றும் பொய்க்கால் குதிரையாட்டம் என்பன மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளதுடன், இவ்வாறான கலைகள் கிராமங்களிலிருந்தே உருவாகியதாகக் குறிப்பிட்ட பெரியவர் ஒருவர், இவ்வாறான கலைகளை கிராமங்களே வளர்த்தெடுக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.



# பதிவிறக்கப் பெட்டகம்

நம் சொற்களில் கடவுள் எழ வேண்டும். எது எங்கும் இருந்தாலும் காணக் கிடைக்காததோ, எது அறியப்படா விட்டாலும் நம்மை அதைப் பற்றியே பேச வைக்கிறதோ அது கடவுள். எது உணர்வில் மட்டும் வசிக்கிறதோ, எது உணர்வுமயமானதோ அது கடவுள். மனிதனை நேசிக்கக் கற்றுக் கொடுப்பது, இந்த வாழ்க்கையை மேலானதாக மாற்றக் கற்றுக் கொடுப்பது கடவுள். இலக்கியமும் கடவுள் வடிவம் தான். மனிதனையே கடவுளாகப் பார்க்கச் செய்வதுதான் இலக்கியம். – **ஜெயகாந்தன்**

நன்றிந்தக் கணம் நான் பிறந்தேன், நான் புதியன், நலிவிலாதோன், நான் கடவுள். – **பாரதி**

வில்லிசை என்பது உழைக்கும் மக்களின் இசைக்கலை. இசக்கியம்மன், பிச்சக்காலன், புலைச்சியம்மன், வாதை போன்ற நாட்டார் தெய்வ வழிபாட்டோடு தொடர்புடையது. அந்த இசைக் கலைஞர்களுக்கும், தெய்வத்திற்கும், சாமியாடுபவருக்கும், பக்தர்களுக்கும் ஒரு நெருங்கிய தொடர்பை உருவாக்கும் ஒரு ஊடகம். பாடிக் கொண்டிருக்கும்போது ஒரு பாட்டி வந்து 'பாட்டை நிறுத்து' என்று சொல்லி சாமியாடுபவரின் இடுப்பைப் பிடித்து, "என் பேரனுக்கு ஒரு நல்ல கெதி தருவியா மாட்டியா? இல்லை என்றால் உனக்கு இனி பாட்டும் கெடையாது, பூசை கெடையாது" என்பாள். சாமி உடனே, "நான் செய்கிறேன் தாயே... இப்போது என் இடுப்பை விடு" என்று சொல்ல, வில்லிசைப்பவர் பாட்டில் கேலி செய்ய, இறைவன் "இந்த இடத்த விட்டுட்டு நான் கடல் குளிக்க போகக் கூடிய இடத்தப் பாடு" என்று வில்லிசைக் கலைஞனுக்குப் பழமும் தேங்காயும் எடுத்துக் கொடுப்பார். இந்த உறவு நிலை பெருந் தெய்வ வழிபாட்டிற்குள் ஒருபோதும் இயங்காது. அங்கே அய்யர் என்கிற இடைத்தரகர்தான் பக்தர்களுக் கும் தெய்வத்துக்குமான ஊடகம். – **என். டி. ராஜ்குமார்**

கடவுள் மறுப்பை முழுமையாக ஏற்றுக்கொண்ட மதம் பௌத்தம். கடவுள் மறுப்பாளர்களைத் தன்னில் ஒரு பிரிவாக ஏற்றுக் கொண்ட மற்றொரு மதம் இந்துமதம். நாத்திகவாதத்தைச் சொன்ன சார்வாகனையும் இந்துமதம் ஒரு ரிஷியாக ஏற்றுக்கொண்டு அந்தத் தத்துவ மரபை உள்வாங்கிக் கொண்டு விட்டது. – **சாரு நிவேதிதா**

பக்தி என்பது என்ன? மனசின் கஷ்டங்களை நாம் அறியாத ஒன்றின் தலையில் சுமத்திவிட்டதாக நம்பி அந்த நம்பிக்கையின் மூலம் பலம் கொள்ளுவதே.– **புதுமைப்பித்தன்**

டொஸ்ரோயெவ்ஸ்கியின் 'கரமசோவ் சகோதரர்கள்' நாவலில் இவான் சொல்லும் ஒரு வாக்கியம் 'கடவுள் இல்லையென்றால் பின் எல்லாம் அனுமதிக்கப்பட்டவையே'. இவான ஒரு அறிவுஜீவியாக இருக்கிறான். அவனால் ஸ்மெர்ட்யகோவ்வை மறைமுகமாக உந்தி தன் தந்தையை கொலை செய்யவைக்க முடிகிறது. இவான் மேற்சொன்ன கருத்தியலின் துணை கொண்டுதான் இதைச் செய்கிறான். கடவுள் இல்லையென்றால் கடவுளின் பெயரால் உருவாக்கப்பட்ட அறமும் விழுமியங்களும் இறக்கின்றன. அறமும் விழுமியங்களும் இல்லாத ஒரு உலகில் எல்லாம் அனுமதிக்கப்பட்டவை. இங்கே இவான் என்ற அறிவுஜீவி கதாபாத்திரத்தை கருத்துருவகமாக மாற்றி சற்று விரித்தால் நாம் வந்து சேரும இடம் விஞ்ஞானம். ஆம். கடவுள் இல்லை என்ற எதிர்வினையில் தன் இருப்பை உருவாக்கிக் கொண்ட ஐரோப்பிய நாத்திகவாதமும் அதன் சகோதர சோஷலிசமும் கடவுளுக்கு மாற்றாக பகுத்தறிவை முன்வைத்தன– அதன் அனைத்து உரையாடல்கள், கலைகள், தத்துவங்கள் மூலமாக முன்னேற்றிய ஒரு துறை விஞ்ஞானமே.

இன்று ஒரு விஞ்ஞானியால் எந்த அறப்பிரச்சினையும் இல்லாமல் அணுமின் நிலையத்தில் வேலை செய்ய முடிகிறது. சோதனை கூடத்தில் அமர்ந்து கொண்டு எந்த சலனமும் இல்லாமல் மரபணு மாற்று விதைகளை உருவாக்க முடிகிறது. இந்த விஞ்ஞானிகள் யார்? ஏதேனும் தனித்த ஒரு சமூக சூழலில் வளர்ந்தவர்களா? இல்லையே. நாம் வாழும் இதே சமூகத்தில் படித்து வளர்ந்த மத்தியதர வர்க்கத்தினர் தானே. அப்படியென்றால் எப்படி எந்த சலனமும் இல்லாமல் அவர்களால் இதை செய்ய முடிகிறது? இவானின் வாக்கியமே அதற்கான பதில் தருகிறது.

'கடவுள் இல்லையென்றால் பின் எல்லாம் அனுமதிக்கப்பட்டவையே'. – **சர்வோத்தமன்**

# இறையாண்மைக்கு அச்சுறுத்தல்; சம்பந்தன் மன்னிப்பு கோரவேண்டும்

என்கிறது தேசிய சுதந்திர முன்னணி

(கொழும்பு)

நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கருத்து தெரிவித்துள்ளார். எனவே, சம்பந்தன் நாட்டு மக்கள் முன்னிலையில் மன்னிப்புக் கோர வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

அது மட்டுமின்றி அவருக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இன்னும் தமிழீழக் கொள்கைகளிலிருந்து விடுபடவில்லை என்பது இறமை இன்று நாட்டிற்கு தெரியவந்து விட்டது என தேசிய சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் பிரியந்ஜித் விதாரண தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மாநாடு அண்மையில் மட்டக்களப்பில் இடம்பெற்றது. இதில் சம்பந்தன் எம்.பி. விசேட உரையினையாற்றினார். இவ் உரையானது கடும் கண்டனத்திற்கு உட்படுத்த வேண்டியதொன்றாகும். ஏனெனில் புலிகளினால் உள்நாட்டில் முன்னெடுக்கப்பட்ட பயங்கரவாத போரை ஒரு விடுதலைப் போராட்டமாக சம்பந்தன் வர்ணித்தார்.

அதேபோன்று 13 ஆவது திருத்தத் சட்டத்தை சுய நிர்ணய உரிமைக்கான உபாயமாகவே பயன்படுத்துவதாகவும் வெளிப்படையாகவே கூறியுள்ளார். எனவே அரசியலமைப்பின் 157 ஏ பிரிவின் பிரகாரம் ஐக்கிய இலங்கைக்குள் தனி நாட்டிற்கான முன்னெடுப்புகள் செய்துள்ளார்.

இதனை மையப்படுத்தி அவரை சட்டத்தின் முன் நிறுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விதாரண தெரிவித்துள்ளார்.

# இலண்டனில் வெளியான காணொளிகள் உண்மைக்குப் புறம்பானவை

அரசாங்கம் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டு அண்மையில் இலண்டனில் வெளியிடப்பட்ட புதிய காணொளிகளும், புகைப் படங்களும் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவை என ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் பந்துல ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இலண்டனுக்கு விஜயம் செய்திருந்த வேளையில் அவருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்குடன் பரப்புரைகளை மேற்கொள்வதற்காக இந்தக் காணொளிகள் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளதாக பந்துல ஜயசேகர கூறியுள்ளார்.

அத்துடன், இறுதிக்கட்டப் போரின் போது தமிழ் மக்கள் மீது படைத்தரப்பினர் தாக்குதல்களை மேற்கொண்டதாகக் காட்டி அரசாங்கத்திற்கும், படைத்தரப்பினருக்கும் , களங்கத்தை ஏற்படுத்தும் நோக்குடன் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களினால் இத்தகைய காணொளிகள் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டு வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

# காலநடை வைத்தியர் கைது

(கொழும்பு)


தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் மூன்று மிருகங்களின் மண்டையோடுகள் காணாமல் போன சம்பவம் தொடர்பில் அங்கு பணியாற்றும் கால்நடை வைத்தியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட மிருகக்காட்சிசாலை ஊழியரிடமிருந்து கிடைககப்பெற்ற தகவலுக்கு அமைவாக குறித்த கால்நடை வைத்தியர் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன குறிப்பிட்டார்.

அவரிடமிருந்து மிருகங்களின் மூன்று பற்களும் மீட்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிடுகிறார்.

இந்த சம்பவம் தொடர்பிலான விரிவான விசாரணைகளை தெஹிவளைப் பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் சிங்கம், சிறுத்தை, மற்றும் ஜக்குவார் ரக புலி போன்றவற்றின் மண்டையோடுகள் குளிரூட்டியில் வைக்கப்பட்டிருந்த நிலையில் காணாமல் போயுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## தெய்வங்களும் கவனம்!

கருத்துப் பகிர்தல்

*30 வருட வெடியோசை சத்தங்கள் ஒய்ந்திருக்கின்றன இந்தச் சூழலில் ஊடகங்களில் தொடர்ந்து வெளியாகும் செய்திகள் திருட்டு, வழிப்பறிக் கொள்ளை. அட! அதுவும் போதாது என்று தமிழ் மக்களால் தெய்வங்களாக மதிக்கப்படும் ஆலய விக்கிரகங்களும் திருடர்களால் விட்டு வைக்கப்படவில்லை.*

*சில இடங்களில் விக்கிரகங்கள் மீட்கப்பட்டிருக்கும் இச்சூழலில் இனி வரும் காலங்களில் ஆலயங்களுக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டி வரும் என்பதில் வியப்பு எதுவும் இல்லை.*

*இக்களவுகளைத் தடுத்து நிறுத்த இன்றைய இளைஞர்கள் முனவரவேணடும். நாளுக்கு நாள் திருட்டுக்களின் தொகை அதிகரிப்பு தொடர்ந்து மக்களைப் பயப் பீதியில் உறைய வைக்கும் இச்சூழலில், எமது இளம் சமூகம் விழித்தெழுந்து மக்களுக்காக குரல் கொடுக்க வேண்டும்.*

*கிராமங்கள் தோறும் விழிப்புக் குழுக்கள் அமைத்து விழித்திருந்தால் இத்திருட்டுக்களை பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியும். இதற்குச் சமூகப் பெரியோர்கள், பொலிஸார் பூரண ஒத்துழைப்பை வழங்கி இளைஞர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி திருட்டுப் பேர்வழிகளை ஒழிக்க வேண்டும்.*

சந்திரன்
வரணி வடக்கு, கொடிகாமம்.

---

## தடுக்க யாருமில்லையா?

*வன்னிப் பகுதியில் கால்நடைகள் களவு போவதைத் தடுக்க யாருமில்லையா?*

*கடந்த போர் அனர்த்தத்தின் பின்பு வன்னி வாழ் மக்கள் தமது ஜீவனோபாயத்துக்காக கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு வரும் வேளையில், உள்ளூர் மற்றம் வேறு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாலும், மேச்சலுக்குச் செல்லும் கால்நடைகள் களவாடப்படுகின்றன.*

*இத்திருட்டுச் சம்பவங்களில் சம்பந்தப்பட்டவர்கள் எமது வன்னி வாழ் மக்களின் வாழ்வாதார நிலையை உணர்ந்து இனிவரும் காலங்களில் இப்படியான சட்டத்திற்கு விரோதமான அநாகரிகமான காரியங்களில் ஈடுபடவேண்டா மெனவும், பாதிக்கப்பட்டு புதிய வாழ்வைத் தொடங்கியிருக்கின்ற மக்களின் எதிர்பார்ப்புக்களைச் சிதைத்துச் சீரழிக்க வேண்டாமெனவும் கேட்டுக் கொள்கின்றோம்.*

வி.தங்கராசன்
கோம்பாவில், புதுக்குடியிருப்பு.

# இந்திய நடிகர்களுக்கு மக்களின் வரிப்பணம் தாரை



(கொழும்பு)

உலக சந்தையில், எரிபொருள் விலைகள் குறைந்துள்ளதன் நன்மையை மக்களுக்கு வழங்காத அரசாங்கம், நாட்டு மக்களிடம் இருந்து சேகரிக்கும் வரியை பயன்படுத்தி, இந்தியாவில் இருநது நடிகர்களையும் நடிகைகளையும் இலங்கைக்கு அழைத்து வரும் நிலைமைக்கு சென்றுள்ளது என ஜே.வி.பியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையில் உள்ள ஜே.வி.பியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ரில்வின் சில்வா இதனைக் குறிப்பிட்டுள்ளார். உலக சந்தையில், எரிபொருளின் விலை வெகுவாக குறைந்துள்ளது. இதன பயனை மக்களுக்கு வழங்காத அரசாங்கம், முன்னர், அதிகரித்த விலைக்கே இன்னும் எரிபொருளை வழங்கி வருகிறது.

இது மிகவும் பாதூரமான நிலைமையாகும். கடந்த பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி மண்ணெண்ணெய் 35 ரூபாவாலும், பெட்ரோல் 12 ரூபாவாலும் டீசல் 31 ரூபாவாலும் அதிகரிக்கபபட்டன.

இந்த அநீதியான முறையில் எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட்டமைக்கு எதிராக மக்கள் வீதியில் இறங்கி போராட்டினர். இதன் போது சிலாபம் மீனவர் ஒருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டார். உலக சந்தையில் எரிபொருள விலைகள் அதிகரிப்பதால், பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நஷ்டத்தில் இயங்குவதால், எரிபொருள் விலைகளை குறைக்க முடியாது என அரசாங்கம் கூறியது. எனினும் தற்போது சர்வதேச சந்தையில் ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை 97 டொலர்களாக குறைந்துள்ளது. இலங்கையில் எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட்ட போது, உலக சந்தையில் 125 டொலர்களாக இருந்த மசகு எண்ணெய் தற்போது பெருமள வில குறைந்துளளது. இதன் பயனை ஏன் மக்களுக்கு வழங்குவதில்லை என ரில்வின் சில்வா கேள்வி எழுப்பியுளளார்.

# தீ விபத்தில் வீடுகளை இழந்தவர்கள் அகதிகளாக அவலம்

(கொழும்பு)

நுவரெலியா மாவட்டத்தில் நுவரெலிய பிரதேச சபைக்குட்பட்ட லிந்துலை டில்கோட்டில் தோட்டத்தில் கடந்த வருடம் செப்டம்பர் மாதம் 24 ஆம் திகதி காலை ஏற்பட்ட தீ விபத்தில் 10 வீடுகளை கொண்ட லயன் குடியிருப்பில் உள்ள 7 வீடுகள் முற்றாக எரிந்து சாம்ப லானது.

எரிந்த வீடுகளில் குடி இருந்த சுமார் 40 பேர் உடனடியாக தற்காலிகமாக டில்கோட்டில் பாடசாலையில் தங்க வைக்கப்பட்டனர்.

பாடசாலையில் கல்விகற்கும் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படும் என்பதால் சில நாட்களில் தோட்ட நிர்வாகத்தினர் ஏற்பாடு செய்திருந்த சிறிய இடம் ஒன்றுக்கு இவர்கள் இடம் மாற்றப்பட்டனர்.

இந்த இடம் ஆண், பெண், பிள்ளைகள் என அனைவருக்கும் இரண்டு கழிவறைகளை கொண்டிருந்ததோடு சுமார் 600 சதுர அடியில் 7 குடும்பங்களை சேர்ந்த 40 பேரும் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

அவ்விடம் எந்த வகையிலும் குடியிருப்பதற்கு பொருத்தமற்று காணப்பட்டதனால் பாதிக்கப்பட்டவர்கள் எரிந்த வீடுகளின் முன்னால் கொட்டில்களை அமைத்துக்கொண்டு வாழ ஆரம்பித்தனர்.

சுமார் 9 மாதங்களாகியும் இவர்களுக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக்கொடுக்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வராத நிலையில் கொட்டில்களிலேயே தமது வாழ்க்கையை கொண்டு நடாத்துகின்றனர்.

பலர் இந்த கொட்டில்களிலேயே திருமணம் முடித்து பிள்ளைகளையும் பெற்றுள்ளனர். பிறந்துள்ள இந்த பிள்ளையின் வாழ்க்கையும் இந்த கொட்டிலிலேயே நடைபெறுமோ என கவலையடைகின்றனர்.

# நெடுந்தீவு பிரதேச மட்ட இலக்கியப்போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவு ரீதியாக நடத்தப்பட்ட இலக்கியப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது. விபரம் வருமாறு,

**கவிதைப் போட்டி**

ம.மேரிஷால்நிலாடினி, டே.அனுஷா (நெடுந்தீவு றோ.க.ம. கல்லூரி), வி.கோகிலன் (நெடுந்தீவு மகா வித்தியாலயம்).

**கவிதைப் பாடல்**

க.கஜபாலினி (நெடுந்தீவு மகா வித்தியாலயம்), வி.டேமியா, க.தனுஜா நெகேமி (நெடுந்தீவு றோ.க.ம.கல்லூரி).

**கவிதைப் போட்டி**

ஞா.புஸ்பமலர், ம.மரியறெணோயா, ச.மேரி சீனு (நெடுந்தீவு றோ.க. ம.கல்லூரி).

**கட்டுரைப் போட்டி**

கி.கிரிஷாந்தி, டா.தேவராஜ், சோ.நித்திகா (நெடுந்தீவு மகா வித்தியாலயம்),

**கையெடுத்துப் போட்டி**

ஜெ.ஜிவித்தனா (நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்), யூ.கிறிஸ்ரன் குரூஸ் (நெடுந்தீவு சீக்கி அ.த.க.வித்தி), வி.டர்ஜினி (நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தி).

**கவிதைப் போட்டி**

ம.யோதீஸ்வரன், (நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தி), சோ.நித்திகா (நெடுந்தீவு மகா வித்தியாலயம்), யே.மேரி டெனூசியா ( நெடுந்தீவு மகா வித்தியலயம்.

**பாடல் நயத்தல்**

டா.தேவராஜ், சோ.நித்திகா கி.கிரிஷாந்தி (நெடுந்தீவு மகா வித்தியாலயம்).

திறந்த பிரிவில் வி.சபேசன் பாடல் ஆக்கம், சிறுகதை, கவிதை ஆகிய போட்டிகளில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

Grade - 13 | க.பொ.த.(உயர்தர) மாதிரி வினாத்தாள் | G.C.E. (A/L) Examination model Paper | 02 T II

நேரம் : 2 மணித்தியாலம்

கல்வி முரசு

உயிரியல் - I
Biology - I


ஆசிரியர் :
Ponniah Aravinthan
(B.se, M.ed, Dip.in.ed)

**உயிரியல் - I தொடர்ச்சி.....**

(48) பின்வரும் இயல்பு தவிர பெரும்பாலான வழிகளில் Organophoshate கள் Organochlorine களிலிருந்து வேறுபடுகின்றது. அவ்வியல்பு,

1. நீரில் கரையும் இயல்பு.
2. நரம்பிணைப்புக் கணத்தாக்கக் கடத்தலில் செல்வாக்குச் செலுத்துதல்.
3. உயிரியல் செறிவாக்கம் (Bio accumilation).
4. இரைப்பை நஞ்சாகத் தொழிற்படுதல்.
5. Cholineesterase ஐ தொழிற்பாடற்றதாக்குதல்.

(49) ஒத்த மொத்த அதிர்வெண்கள் இருமாதிரிகளின் அளவு சார் இயல்பை மதிப்பிடுவதற்காகப் பெறப்பட்ட இரு தகவல்களின் தொகுதிகளின் பரம்பலை a,b என்னும் செவ்வன் பரம்பல் வளையிகள் காட்டுகின்றன.




பின்வரும் அனுமானங்களில் ஏற்றுக் கொள்ளமுடியாதது,

1.வளையி a வரையறுக்கப்பட்ட வீச்சைக் கொண்டிருப்பதுடன் இடைக்கு அண்மையில் செறிவடைந்து காணப்படுகிறது.
2.வளையி b யினால் வெளிக்காட்டப்படும் பெறுமானங்கள் பரந்த வீச்சில் பரம்பியுள்ளன.
3. a யின் நியம விலகலானது b யின் நியம விலகலை விட சிறியது.
4. வரைபு a யின் இடையிலிருந்து சிறிதாகவே பரம்பிக் காணப் படுவதால் மாதிரி ஓரளவு ஒத்த தன்மையானதாகக் காணப்படுகிறது.
5. வளையி a யுடன் ஒப்பிடும் போது வளையி b யில் அதிக வீதத்தி லானோர் இடையிலிருந்து ஒரு நேர், மறை நியம விலகல் தூரத்தினுள் அடங்குகின்றனர்.

(50) துவிக்கலப்பு பிறப்பொன்றின் போது $F_2$ சந்ததியின் 4 தோற்ற அமைப் புக்களின் அதிர்வெண்கள் 21, 4, 5, 2 என அவதானிக்கப்பட்டன. மாணவனொருவன் இவ்வதிர்வெண்கள் 9 : 3 : 3 : 1 விகிதத்தை உறுதிப்படுத்துகின்றனவா என அறிய Chi - square பெறுமானம் ஆவது,

1) 0.00 2) 0.38 3) 1.33 4) 11.00 5) 32

51 - 60 வரையான ஒவ்வொரு வினாக்களுக்கும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட விடைகள் சரியானவை. தரவுகளைப் பயன்படுத்தி சரியான விடையைத் தெரிவு செய்க.

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| A, B, D சரியானவை | A, C, D சரியானவை | A, B, சரியானவை | C, D சரியானவை | வேறுவிடை அல்லது விடைகளின் சேர்க்கை |

(51) பலகல ஒளிதற்போசணிகள் உள்ளடக்கப்பட்ட இராச்சியம் / இராச்சியங்கள்

A. Monera B. Fungi C. Protista D. Plantas E. Animalia

(52) வைரசுக்களைப் பொறுத்த மட்டில் தவறான கூற்று / கூற்றுக்கள்,

A. சிலவைரசுக்கள் ATP ஐ உற்பத்தி செய்யக்கூடியவை.
B. எல்லா விலங்கு வைரசுக்களும் DNA ஐ கொண்டவை.
C. வைரசுக்கள் பளிங்காக்கப்படக்கூடியவை.
D. வைரசுக்களின் இனப்பெருக்கத்துக்கு உயிருள்ள விருந்துவழங்கி தேவைப்படுகின்றது.
E. சில வைரசுக்களில் புரத உறையைச் சூழ மென்சவ்வுக் கவசம் காணப்படுகின்றது.

(53) விலங்கு நரம்புத் தொகுதி தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் உண்மையானது/ உண்மையானவை.

A. சோடேற்றாக்களில் தனித்த குழாயுருவான நரம்புத் தொகுதி
B. மொலஸ்காக்களில் துண்டுபட்ட நரம்புத் திரட்டுகளும், வயிற்றுப்புற நரம்புநாணும் காணப்படுகிறது.
C. நெமற்றோடாக்களில் நரம்பு வளையமும் சில நிலைக்குத்தான நரம்பு நாணும் காணப்படுகிறது.
D. Echinodermata களில் நரம்பு வளையங்களும் ஆரைக்குரிய நரம்பு நாணும் காணப்படுகிறது.
E. ஆத்திரப்போடாக்களில் திரட்டுக்களினாலான இரட்டை முதுகுப்புற நரம்பு நாண் காணப்படுகிறது.

(54) சூழல் தொகுதி தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் தவறானது / தவறானவை,

A. 2ஆம் போசணை மட்டத்தைவிட இறுதி இரைகௌவி மட்டத்தில் குறைந்த எண்ணிக்கையான அங்கத்தவர்களே காணப்படுகின்றனர்.
B. உயர் போசணை மட்டத்திலிருந்து தாழ் போசணை மட்டத்துக்கு சக்தியானது ஒருதிசையில் பாய்ச்சலடைகின்றது.
C. பிரிகையாக்கல் மட்டத்தில் குறைந்த எண்ணிக்கையிலான அங்கத்தவர்கள் காணப்படுகின்றனர்.
D. சூழற்தொகுதியில் உயிர்ப்பிரிந்தழிகைக்கு உட்படாத பதார்த்தங்கள் உணவுச் சங்கிலி வழியே தேக்கப்படுகின்றன.
E. நீர்ச் சூழலானது கைத்தொழிற் கழிவுகள், விவசாய இரசாயனங்கள், கழிவு நீர், வண்டல், வெப்பம் என்பவற்றால் மாசுபடுத்தப்படுகிறது.

(55) இழைமணி, அகக்கலவுருச் சிறுவலை என்பவற்றைக் கொண்டிராத தற்போசணை அங்கிகளைத் தெரிவு செய்க.

A. Anabaena, பச்சைக் கந்தக பற்றீரியா
B. Osillatoria, Nitrosomonas
C. பச்சைக் கந்தக பற்றீரியா, Vibrio
D. Ulva, Nostoc
E. Nitrosomonas, Chlamydomonas

(56) இதயத்தசை தொடர்பான சரியான கூற்றைத் தெரிவு செய்க.

A. கிளை கொண்ட உருளையுருவான கலங்களால் ஆக்கப்பட்டது.
B. கலங்கள் இடைபுகுந்த தட்டுக்களால் இணைக்கப்பட்டுள்ளன.
C. உடலகநரம்புகளால் ஊக்குவிக்கப்படுகின்றன.
D. பரிவுத் தூண்டல்களினால் சுருங்கல் வீதம் குறைக்கப்படுகிறது.
E. வன்கூட்டுத் தசையின் தசைப்பாத்து ஒன்றுக்கு இத்தசையின் ஒரு கலம் சமனானது.

(57) பின்வரும் கபச்சுரப்பி ஓமோன்களில் எவை போசணைத்திரிகை ஓமோனாக (Tropic hormone) கொள்ளப்படமுடியாதவை.

A. FSH B. ACTH C. வளர்ச்சி ஓமோன் D. Prolactin E. TSH

(58) இளம் இருவித்திலைத் தண்டின் இயல்புகளைத் தெரிவு செய்க.

A. ஒருங்கமைந்த கலன் கட்டுக்கள்
B. மூடிய கலன் கட்டுக்கள்
C. உள்ளாதிக்காழ்கள்
D. பெரியமையவிழையமும் கதிர் நார்களும்
E. மேற்றோலுக் கீழான வட்ட ஒழுக்கிலான வன்கலவிழையங்கள்

(59) மனிதரில் செவ்வென்பு மச்சையிலிருந்து செங்குழியங்கள் விடுவிக்கப்படல் தொடர்பான தொழிற்பாட்டுடன் தொடர்புபட்டுள்ள ஓமோன்கள்

A. போலிக்கமிலம்
B. Vit $B_5$
C. Vit K
D. Vit $B_{12}$
E. Vit $B_6$

(60) பின்வருவனவற்றுள் எதில் / எவற்றின் தயாரிப்பில் பற்றீரியாக்களின் தொழிற்பாடு தொடர்புபட்டுள்ளது,

A. தயிர்
B. சீஸ்
C. போலியோ தடுப்பு மருந்து
D. யோகட்
E. சர்க்கரை

(மறுபக்கம் பார்க்க)

Grade - 13

# க.பொ.த.(உயர்தர) மாதிரி வினாத்தாள்

G.C.E. (A/L) Examination model Paper

02 | T | II

நேரம் : 2 மணித்தியாலம்

கல்வி முரசு

உயிரியல் - (பகுதி II)
Biology -(Part - II)

ஆசிரியர் :
Ponniah Aravinthan
(B.se, M.ed, Dip.in.ed)

## பகுதி - A

(01) A) 1) உயிருள்ளவற்றுக்கும், உயிரற்றவற்றுக்கும் பொதுவான இரு இயல்புகளைத் தருக.

1. ............................ 2. ............................

2) உயிரினங்கள் பிழைத்திருப்பதற்கு அனுசேபம் அவசியமான ஒரு இயல்பாகும். அனுசேபம் என்பதால் விளங்கிக் கொள்வது யாது?

..................................................

..................................................

..................................................

3) கலமொன்றில் பின்வரும் அனுசேபத் தாக்கங்கள் நிகழும் புன்னங்களைப் பெயரிடுக.

a) RNA தொகுப்பு ..................................

b) புரதத் தொகுப்பு ..................................

c) $CO_2$ இலிருந்து குளுக்கோஸ் தொகுப்பு ..................

d) பைருவேற் உடைக்கப்பட்டு ATP விளைவாக உருவாகுதல் ..................................................

4) முளைக்கும் வித்துக்கள் தாழ்த்தும் வெல்லங்களைக் கொண்டுள்ளன என்பதைக் காட்ட ஆய்வுகூடத்தில் செய்யக்கூடிய எளிய பரிசோதனை ஒன்றை விபரிக்குக.

..................................................

..................................................

..................................................

..................................................

..................................................

..................................................

..................................................

..................................................


5) பின்வரும் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் தாவர இழையங்களைப் பெயரிடுக.

1. சேமிப்பு ..................................

2. பதார்த்தக்கடத்தல் ..................................

3. பொறிமுறை ஆதாரம் ..................................

B) உரு I இயூகரியோட்டா கல வட்டத்தைக் காட்டுகிறது.




1) கலவட்டம் என்றால் என்ன?

..................................................

..................................................

..................................................

..................................................

2) P, Q, R, S என குறிப்பிடப்பட்ட கலவட்டத்தின் அவத்தைகளை இனம் காண்க.

P ............................ Q ............................

R ............................ S ............................

உருவில் A, B, C, D, E, F எனக்குறிப்பிட்ட ஒவ்வொரு பகுதிகளிலும் நிகழும் இரு நிகழ்வுகளைத் தருக.

A i) ............................ ii) ............................

B i) ............................ ii) ............................

C i) ............................ ii) ............................

D i) ............................ ii) ............................

E i) ............................ ii) ............................

F i) ............................ ii) ............................

3) 2 மகட்கருக்களும் தாயின் எண்ணிக்கையை ஒத்த எண்ணிக்கையான நிறமூர்த்தங்களைப் பெற்றுக் கொண்டுள்ளன என்பதை உறுதிப்படுத்தும் கல வட்டத்தின் அவத்தை எது?

..................................................

..................................................

4) இருமடியக்கலம் ஒன்றின் நிறமூர்த்த எண்ணிக்கை 8 ஆகும். பின்வரும் நிகழ்வுகளின் முடிவில் இக் கலத்தில் காணப்படும் நிறமூர்த்த எண்ணிக்கையைக் குறிப்பிடுக.

a) இழையுருப் பிரிவு ..................................

b) ஒடுக்கற் பிரிவு ..................................

5) ஒடுக்கற்பிரிவின் போது மக்கட்கலங்களின் பரம்பரையலகு மீளச் சேர்க்கையை ஏற்படுத்தும் 2 செயன்முறைகளைத் தருக.

a) ............................ b) ............................

c) 1) DNA யும், புரதமும் நிறமூர்த்தங்களில் காணப்படும் இரு பல்பகுதியச் சேர்வைகள் ஆகும். நிறமூர்த்தங்களில் பின்வரும் மூலக்கூற்றினதும் தொழிற்பாட்டைத் தருக.

a) DNA ..................................

b) புரதம் ..................................

2) மேற்கூறிய மூலக்கூறுகளின் அடிப்படை ஆக்க அலகுகள் எவை? (Repeating units)

a) ..................................................

b) ..................................................

3) முதலுரு மென்சவ்வில் காணப்படும் புரதங்களின் இரு தொழிற்பாடுகளைக் குறிப்பிடுக.

a) ..................................................


b) ..................................................

4) விலங்கு இழையங்களில் காணப்படும் கலத்தக இணைப்புக்களின் இரு தொழிற்பாடுகளைக் குறிப்பிடுக.

..................................................

..................................................

D)



A B C D

1) மேற்காட்டப்பட்டுள்ள அங்கிகள் உள்ளடக்கப்படும் இராச்சியங்களைக் குறிப்பிடுக.

A ............................ C ............................

B ............................ D ............................

2) A யானது அவ்விராச்சியத்தில் உள்ளடக்கப்படுவதற்கு பொருத்தமானது என்பதற்கான இரண்டு காரணங்களைத் தருக.

a) ..................................................

b) ..................................................

3) பின்வரும் இயல்புகளைக் காட்டும் அங்கி / அங்கிகளைத் தெரிவு செய்க.

i) இயங்கும் இனப்பெருக்கலம் ..................................


ii) ஒளித்தூண்டல் அசைவு ..................................

iii) சேமிப்புணவாக மாப்பொருள் ..................................

iv) மையப் புன்வெற்றிடத்தினால் பிரசாரணச் சீராக்கம் ..................

(தொடரும்)

# காங்கிரஸ் மூழ்கிக் கொண்டிருக்கும் கப்பல்; குஜராத் முதல்வர் நரேந்திர மோடி விமர்சனம்



(ராஜ்கோட்)

மோசடிகள், ஊழல்கள் மற்றும் விலைவாசி உயர்வால், ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு மீது மக்கள் மிகுந்த அதிருப்தியில் உள்ளனர். காங்கிரஸ் மூழ்கிக் கொண்டிருக்கும் கப்பல் என்பதை அந்தக் கட்சி உணரத் தவறிவிட்டது என, குஜராத் முதல்வர் நரேந்திர மோடி விமர்சித்துள்ளார்.

குஜராத் மாநில பாரதிய ஜனதா கட்சியின் இரண்டு நாள் செயற்குழு கூட்டம் ராஜ்கோட்டில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின் நிறைவு விழாவில், அம்மாநில முதல்வர் நரேந்திர மோடி பேசியதாவது: நாடு 7 சதவீத வளர்ச்சி வீதத்தை அடைந்துள்ளதாக, பிரதமர் மன்மோகன் சிங், நாட்டு மக்களுக்கு தவறான தகவலை சொல்கிறார். மத்தியில் உள்ள அரசு, தங்களின் கப்பலில் ஓட்டை விழுந்து விட்டதை இன்னும் உணரவில்லை. மூழ்கிக் கொண்டிருக்கும் கப்பலான காங்கிரஸ், மனித சக்தியை புண்படுத்தியுள்ளதோடு, அவர்களைப் பற்றி தப்புக் கணக்கும் போடுகிறது.

காங்கிரஸ் கட்சி மீண்டும் புத்துயிர் பெற வாய்ப்பே இல்லை. புத்துயிர் பெற போராடிக் கொண்டிருக்கும் இந்தக் கட்சியால், நாட்டில் எப்படி நிலைத்தன்மையை தர முடியும். குஜராத் மாநிலத்தில் இந்த ஆண்டு இறுதியில் சட்டசபைத் தேர்தல் நடைபெறவுள்ளது. பா.ஜ.வின் வளர்ச்சி அரசியல் தேவையா அல்லது காங்கிரஸ் கட்சியின் ஜாதி அரசியல் தேவையா என்பதை, மாநில மக்கள் முடிவு செய்ய வேண்டும். கடந்த 2002, 2007ஆம் ஆண்டுகளில் நடந்த சட்டசபைத் தேர்தலில், பா.ஜ. கட்சி வெற்றி பெற்றது. தற்போது அதை விட சாதகமான சூழ்நிலையே பா.ஜ. கட்சிக்கு உள்ளது. வரக்கூடிய சட்டசபை தேர்தலிலும், பா.ஜ. கட்சி மாநிலத்தில் வெற்றி பெற்று ஹாட்ரிக் சாதனை படைக்கும். டொலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பு வீழ்ந்து கொண்டே இருக்கிறது. சர்வதேச சந்தையில், இந்தியாவின் புகழ், வீழ்ச்சி அடைந்துள்ளது. இவ்வாறு முதல்வர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

# அ.தி.மு.க செயலாளர் மதுரையில் வெட்டிக்கொலை

மதுரை அவனியாபுரம் சிந்தாமணி பகுதியைச் சேர்ந்த மனோகரன் (வயது 54) என்பவர், 58ஆவது வட்டார அ.தி.மு.க. செயலாளராக இருந்து வந்தார்.

இவருக்கும் அதே பகுதியைச் சேர்ந்த முன்னாள் 2ஆவது வட்டார அ.தி.மு.க. கிளை செயலாளர் பூமிநாதன் என்பவருக்கும் குடிநீர் குழாய் பதிப்பதில் பிரச்சினை ஏற்பட்டது.

இதுதொடர்பாக அவனியாபுரம் பொலிஸ் நிலையத்தில் வழக்கு விசாரணையில் உள்ளது. இந்நிலையில் நேற்றிரவு சிந்தாமணி பகுதியில் மனோகரன் வந்து கொண்டிருந்தார். அப்போது பூமிநாதன் மற்றும் சிலர் மனோகரனை சுற்றி வளைத்து அரிவாளால் வெட்டினர். தலையில் வெட்டுப்பட்ட மனோகரன் இரத்த வெள்ளத்தில் உயிருக்கு ஆபத்தான நிலையில் மதுரை அரசு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்தார். இந்த கொலை குறித்து அவனியாபுரம் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து அ.தி.மு.க. பிரமுகர் பூமிநாதன் உட்பட 6 பேரை தேடிவருகிறார்கள்.




# நடுவானில் கழன்று விழுந்த விமானத்தின் சில்லு

இந்திய நாட்டின் விமானப் போக்குவரத்து வரலாற்றில் இதுவரை நிகழாத சம்பவம் ஒன்று நேற்றுமுன்தினம் நிகழ்ந்தது. அசாம் மாநிலம் சில்சாரில் இருந்து, அம்மாநில தலைநகர் கவுகாத்தி நோக்கி, ஏயர் இந்திய விமானம் ஒன்று சென்றபோது, நடுவானில் விமானத்தின் முன்சக்கரம் கீழே விழுந்தது. இருந்தாலும், மிகுந்த திறமையாகச் செயற்பட்டு, விமானத்தை பத்திரமாக தரையிறக்கினர் விமானிகள். இதனால், 48 பயணிகள் உட்பட 52 பேர் உயிர் தப்பினர். எரி பொருளுடன் சக்கரம் இல்லாமல் கீழே இறங்கினால், மிகப்பெரிய தீ விபத்து நிகழ்ந்து, பயணிகள் உயிருக்கு ஆபத்து நேரலாம் என்பதால், இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக வட்டமடித்த பின், ஓரமாக உள்ள ஓடுதளம் ஒன்றில் விமானம் பத்திரமாக தரையிறக்கப்பட்டது. அதற்கு முன்னதாக, விமான நிலையத்தில், அவசர கால ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டிருந்தன. வழக்கமாக சில்சாரில் இருந்து 45 நிமிட பயணத்தில், கவுகாத்திக்கு விமானம் சென்று விடும். ஆனால், நேற்று எரிபொருள் தீர வேண்டும் என்பதால், நீண்ட நேரம் வானில் வட்டமடித்தது.

நடந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்துவதற்காக, சிவில் விமான போக்குவரத்து டைரக்டர் ஜெனரல் அலுவலக அதிகாரிகள் கவுகாத்தி விரைந்துள்ளனர்.

# நித்தியானந்தாவிற்கு பூரண ஆயுசு - நித்திய கண்டம்



சுவாமி நித்தியானந்தா ஆச்சிரம மடத்திற்குள் கன்னட டி.வி நிருபர் ஒருவர், அங்குள்ள சீடர்களால் தாக்கப்பட்ட விவகாரம் தற்போது எரிமலைபோல் வெடித்துள்ளது. நித்தியானந்தாவை கர்நாடகத்தை விட்டு வெளியேற்ற வேண்டும் என்று கோரி பல இடங்களிலும் போராட்டங்கள் நடந்து வருகின்றன. அம்மாநில பொலிஸாரும் நித்தியானந்தா மீது வழக்கு தொடர்ந்துள்ளனர். இதையடுத்து அவர் தலைமறைவாகியுள்ளதாக கூறப்படுகின்றது.

இந்நிலையில் நித்தியானந்தா மடத்தை கையகப்படுத்துவோம் என்று கர்நாடக அமைச்சர் சுரேஷ் குமார் கூறியுள்ளார். இதுகுறித்து மங்களூரில் செய்தியாளர்களிடம் முதல்வர் சதானந்தா கௌடா கூறுகையில், ராமநகர மாவட்ட ஆட்சித் தலைவர், பொலிஸ் அதிகாரி ஆகியோரிடம் இந்த விவகாரம் தொடர்பாக அறிக்கை கேட்கப்பட்டுள்ளது. அறிக்கை கிடைத்ததும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இதேவேளை நித்யானந்தா மீது சமீபத்தில் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த, 'சுவர்ணா டிவி'யில், ஆர்த்தி ராவ் என்ற பெண் பேட்டியளித்து இருந்தார். நித்தியானந்தாவால் தான் பல முறை பாலியல் தொந்தரவுக்கு உள்ளானதாக அந்தப் பேட்டியில் தெரிவித்திருந்தார். இதற்கு மதுரையில் பதிலளித்த நித்தியானந்தா, அந்தப் பெண்ணுக்கு எச்சில் மூலம் பரவும் 'ஹெர்பிஸ் 2' என்ற பயங்கர நோய் இருந்ததாகவும், அதை குணப்படுத்திக் கொள்ளவே அவர் ஆச்சிரமம் வந்ததாகவும் தெரிவித்தார். மேலும், அவருடன் தான் பாலியல் உறவு கொண்டிருந்தால் தனக்கும் அந்த நோய் வந்திருக்குமே என, கேள்வி எழுப்பியிருந்தார். நித்யானந்தாவின் இக்குற்றச் சாட்டிற்கு குறித்த பெண் ஆதாரத்துடன் மறுப்பு தெரிவித்துள்ளார்.

# கருணாநிதி துணையுடன், மக்கள் சக்தியுடன் ராசா 2ஜி வழக்கில் வெற்றி பெறுவாராம்



(ஊட்டி)

தி.மு.க தலைவர் கருணாநிதி துணையுடனும், மக்கள் சக்தியுடனும் 2ஜி வழக்கில் வெற்றி பெறுவேன் என்று முன்னாள் தொலைத்தொடர்புத் துறை அமைச்சர் ஆ.ராசா தெரிவித்துள்ளார்.

2ஜி வழக்கில் பிணையில் விடுதலையான முன்னாள் தொலைத்தொடர்புத்துறை அமைச்சர் ஆ.ராசா தனது தொகுதியான நீலகிரிக்கு வந்தார். ஊட்டியில் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து சேரிங்கிராஸ் பகுதியில் உள்ள தேவாங்கர் திருமண மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட ஆ.ராசா தெரிவித்தாவது;

கடந்த 2009ஆம் ஆண்டு நான் நீலகிரி தொகுதியில் போட்டியிட வந்தபோது அளிக்கப்பட்ட வரவேற்பு போன்று இன்றும் வரவேற்பு அளித்துள்ளீர்கள். நான் மத்திய அமைச்சராக இருக்கையில் ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் என்னால் ரூ.22,000 கோடி இழப்பு ஏற்பட்டதாக சிபிசி குற்றம்சாட்டியது. மேலும் மத்திய அரசின் தணிக்கைத்துறையோ என்னால் ரூபா1 இலட்சத்து 29,000 கோடி இழப்பு ஏற்பட்டதாகக் கூறியது.

ஆனால் சிபிஐ ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் ரூபா 33,000 கோடி இழப்பு ஏற்பட்டதாக என் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது. எதிர்கட்சியினரோ நான் ரூபா1 இலட்சத்து 76,000 கோடிக்கு ஊழல் செய்துவிட்டேன் என்று அவதூறு பரப்பினர். 2ஜி ஊழல் வழக்கு அனுமான அடிப்படையில் தொடரப்பட்டுள்ளது. எந்தவித அடிப்படை ஆதாரங்கள் இன்றி என் மீது வழ்கது போடப்பட்டுள்ளது என்று நான் நீதிமன்றத்தில் தெரிவித்தேன். நான் நிரபராதி என்பதை விரைவில் நிரூபிப்பேன். நான் திகாரில் இருந்து புறப்பட்டு சென்னை வரும் வரையில் பல இடங்களில் என்னிடம் பல கேள்விகள் கேட்கப்பட்டன. ஆனால் நான் இதுவரை எந்த பகுதியிலும் என் மீது தொடரப்பட்டுள்ள வழக்கு குறித்து பேசவில்லை. என் சொந்த தொகுதி மக்களிடம் தான் இது குறித்து முதன் முறையாக பேசுகிறேன். இனி இதை நாடு முழுவதும் தெரிவிப்பேன். நீலகிரியில் இருந்து நீதிப்பயணம் மேற்கொள்வேன். உங்கள் மீது நான் வைத்துள்ள பாசத்தால் தான் முதலில் என் சொந்த ஊருக்கு கூட போகாமல் உங்களை எல்லாம் பார்க்க வந்தேன் எனத் தெரிவித்தார்.




# ஏயர் இந்தியா மேலும் 300 விமானிகளை பணிநீக்கம் செய்தது

மத்திய விமான போக்குவரத்து நிறுவனமான ஏயர் இந்தியாவில் மேலும் 300 விமானிகள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். ஊதிய உயர்வு உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஏயர் இந்தியா விமானிகள் கடந்த 35 நாட்களாக வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். இதனால் உள்நாட்டு, வெளிநாட்டு சேவைகள் பாதிக்கப்பட்டது.

இவர்களிடம் மத்திய அரசு பல கட்ட பேச்சுவார்த்தை நடத்தியும் பலனில்லை. இவர்கள் வேலை நிறுத்தத்தை கைவிட மறுப்பதால் போராட்டம் தொடர்கதையாகி வருகிறது. இந்நிலையில் மேலும் 300 விமானிகளை பணிநீக்கம் செய்து ஏயர் இந்தியா உத்தரவிட்டுள்ளது.

# கென்யாவில் ஹெலிகொப்டர் விபத்து; உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் பலி



கென்யாவின் உள்நாட்டு பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜார்ஜ் சைடோட்டி மற்றும் 5 பேர் தலைநகர் நைரோபியில் இருந்து பொலிஸ் ஹெலிகொப்டரில் அருகில் உள்ள ஒரு இடத்துக்கு சென்றனர். அப்போது நைரோபிக்கு அடுத்துள்ள ஒரு காட்டுப் பகுதியில் திடீரென ஹெலிகொப்டர் விழுந்து நொறுங்கியது. அதில் பயணம் செய்த ஜார்ஜ் உள்பட 6 பேரும் உடல் சிதறி பலியாயினர்.

இதுகுறித்து பொலிஸார் கூறுகையில், விபத்துக்கான காரணம் தெரியவில்லை, ஹெலிகொப்டரில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டு மரத்தில் மோதியிருக்கலாம் என்றனர். கென்ய பிரதமர் ரைலா ஒடிங்கா கூறுகையில், அமைதியான முறையில் தேர்தல் நடத்த ஏற்பாடுகள் செய்து வரும் கால கட்டத்தில் இப்படி துயரமான நிகழ்ச்சி நடந்துள்ளது என்றார்.

ஜார்ஜ், அமெரிக்காவில் பயிற்சி பெற்ற பொருளாதார நிபுணர். கென்ய அரசியலில் முகக்கியத்துவம் பெற்றிருந்த அவர் அரசின் செய்தி தொடர்பாளராக இருந்தவர். அவர் அடுத்த தேர்தலில் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடப் போவதாக அறிவித்திருந்தார். அதற்குள் இப்படியொரு துயரமான முடிவு ஏற்பட்டு விட்டது என்றார்.

உலகச் செய்திகள்




ஜேர்மனியில் நடைபெற்ற சர்வதேச நாய் மற்றும் பூனை கண்காட்சியில் கலந்து கொண்ட பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்த காக்கர் ஸ்பெனியல் ரக நாய்

# துருக்கியில் நில நடுக்கம்

துருக்கியின் தென்மேற்கு பகுதி மற்றும் கிரீசில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் நேற்றுமுன்தினம் ஏற்பட்டது. துருக்கியில் ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.1 என பதிவானதாக அந்நாட்டு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

நிலநடுக்கத்தால் பெருத்த சேதம் இல்லை என்ற போதிலும் நிலநடுக்கம் ஏற்பட்ட போது சிலர் உயரமான கட்டடங்களிலிருந்து குதித்து படுகாயமடைந்துள்ளனர்.மேலும் கிரிஸில் ஏற்பட்ட நிலநடுக்கம் 5.8 என்ற ரிக்டர் அளவில் பதிவாகியுள்ளது.

# இஸ்ரேல் ஆக்கிரமிப்பின் 45ஆவது ஆண்டு நிறைவு; பலஸ்தீனியர்கள் போராட்டம்

கடந்த 1976ஆம் ஆண்டு நடைபெற்ற 6நாள் போரில் மேற்குக் கரை, காசா பகுதி, கிழக்கு ஜெருசலேம் ஆகிய பகுதிகளை இஸ்ரேல் கைப்பற்றியது.

இதன் 45ஆவது ஆண்டு தினத்தை முன்னிட்டு நூற்றுக் கணக்கான யூதர்களும், அரேபியர்களும் பங்கேற்ற எதிர்ப்புப் பேரணி டெல் அவிவ் நகரில் நடைபெற்றதாக இஸ்ரேலிய பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஹாரெட்ஸ் என்ற இடதுசாரி சிந்தனை மிக்க பத்திரிகையின் இணையத்தளம் வெளியிட்டுள்ள செய்தியில், சனிக்கிழமை இரவு நடைபெற்ற இந்தப் பேரணியில் 1000இற்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றதாகத் தெரிவித்துள்ளது.

எனினும் இஸ்ரேலிய இராணுவ வானொலி சில நூறு பேர்களே பேரணியில் பங்கேற்றதாகத் தெரிவித்துள்ளது.

ஆக்கிரமிப்பு அகலாத வரை சமூக நீதி கிடைக்காது என்ற முழக்கத்துடன் அவர்கள் பேரணியில் பங்கேற்றதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

பலஸ்தீனர்களும் இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்வேறு பகுதிகளில் போராட்டம் நடத்தினர்.

மேற்கு கரையில் கட்டப்பட்டுள்ள இஸ்ரேலிய குடியிருப்புகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சுமார் 300 பலஸ்தீனர்கள்

கடந்த புதன் கிழமை மதியம் போராட்டம் நடத்தினர்.

ரமல்லா பகுதிக்கு வடக்கில் உள்ள பீத் நுபா கிராமத்தில் இராணுவத்தினர் மீது கற்களை எறிந்தும், டயர்களைக் கொளுத்தியும் பலஸ்தீனியர்கள் போராட்டம் நடத்தினர். பாதுகாப்புப் படைகள் வீசிய கண்ணீர்ப் புகைக் குண்டுகளாலும், ரப்பர் குண்டுகளாலும் போராட்டக்காரர்கள் சிலர் காயமடைந்துள்ளனர்.

# பொதுமக்கள் மீது ஈராக்கில் தாக்குதல்

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் உள்ள சதுக்கத்தில் நடந்த பீரங்கித் தாக்குதலில் அப்பாவி மக்கள் 6 பேர் பலியானார்கள் மற்றும் 38 பேர் பலத்த காயமடைந்தனர். நேற்று முன்தினம் பாக்தாத்தில் உள்ள ஒரு சதுக்கத்தில் ஒரு பிரிவினர் நடத்திய நினைவு தினம் மற்றும் மத ரீதியான நிகழ்ச்சியில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இந்நிலையில் அங்கு இரு முறை பீரங்கித் தாக்குதல் நடந்துள்ளது. இதில் சிக்கி 6 பேர் பலியானார்கள். 38 பேர் காயமடைந்தனர்.

இந்த தகவலை அப்பகுதி பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## பெருநாட்டின் ஹெலி விபத்தில் 14பேர் பலி!

பெருநாட்டின் தென்பகுதியில் ஹெலிகொப்டரொன்று விபத்திற்குள்ளானதால் ஹெலிகொப்டரில் பயணித்த 14 பேரும் பலியானதாக பெரு பொலிஸார் தெரிவித்துள்ளனர். அமேசன் பிராந்தியமான மட்ரே டி டயோஸினலிருந்து

கடந்த புதன்கிழமை இக்ஹெலிகொப்டர் புறப்பட்டுச் சென்றிருந்தது. இக்ஹெலிகொப்டரில் பயணித்தவர்களில் பெரும்பாலானவர்கள் தென்கொரியாவைச் சேர்ந்தவர்களெனவும் பெரு, சுவீடன், செக், நெதர்லாந்து உட்பட 12 பயணிகள் பயணித்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். பலியானவர்களில் பெரு நாட்டைச் சேர்ந்த 2 பணியாளர்களும் அடங்குகின்றனர். ஹெலிகொப்டர் வெடித்து விபத்திற்குள்ளானதாக சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்திய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கூறினார். மழை மற்றும் பனிக்கு மத்தியிலும் ஹெலிகொப்டர் விபத்தில் பலியானவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# லிபிய மோதலில் 16பேர் பலி!



லிபியாவின் தென்பிராந்தியத்தில் அரச படையினருக்கும், பழங்குடியின பேராட்டகாரர்களுக்கும் இடையிலான மோதலில் 16 பேர் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த சனிக்கிழமை முதல் இடம்பெறும் இந்த மோதல்களில் கொல்லப்பட்டவர்களில் பெண்கள் மற்றும் சிறுவர்களும் அடங்கியுள்ளதாக பி.பி.சி செய்தி வெளியிட்டுள்ளது.

முஹம்மர் கடாபி பதவி கவிழ்க்கப்பட்ட பின்னர் நாட்டின் பாதுகாப்பினை பேணுவதில் லிபிய அரசாங்கம் பாரிய சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றது. இதனிடையே இந்த மாத இறுதியில் நடத்த திட்டமிடப்பட்டிருந்த தேர்தலை அடுத்த மாதம் ஏழாம் திகதிக்கு பிற்போட்டுள்ளதாக அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# இறந்து 88 ஆண்டுகளுக்கு பின் லெனினின் உடல் அடக்கம்



சோவியத் யூனியனை நிர்மாணித்தவரான மாபெரும் கம்யூனிச தலைவர் லெனினின் உடல் அவர் இறந்து 88 ஆண்டுகளுக்குப் பிறகு அடக்கம் செய்யப்படவுள்ளது. மாஸ்கோவின் செஞ் சதுக்கத்தில் அமைந்துள்ள நினைவிடத்தில் லெனின் உடல் பதப்படுத்தப்பட்ட நிலையில் கடந்த 88 ஆண்டுகளாக பாதுகாக்கப்பட்டு வருகிறது.

கடந்த காலங்களில் ஏராளமான மக்கள் இந்த உடலைப் பார்த்துள்ளனர். சோவியத் யூனியன் சிதறுண்டு போன பின்னரும் கூட லெனின் உடல் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் தற்போது லெனின் உடலை அடக்கம் செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது.

1924ஆம் ஆண்டு 53ஆவது வயதில் லெனின் மரணமடைந்தார். அவரது உடலை இத்தனை காலமாக அடக்கம் செய்யாமல் வைத்திருப்பது அபத்தமானது என்று ரஷ்ய கலாசார அமைச்சர் விலாடிமிர் மெடின்ஸ்கி கூறியுள்ளார். இவர் ஜனாதிபதி புடினுக்கு மிகவும் நெருக்கமானவர்.

மிகுந்த மரியாதைக்குரியவரான லெனின் உரிய அரசு மரியாதைகளுடன் அடக்கம் செய்யப்பட வேண்டும் என்று மெடின்ஸ்கி கூறியுள்ளார். தனது உடலை மிகச் சாதாரணமான முறையில் அடக்கம் செய்ய வேண்டும் என்பதே லெனினின் கடைசி ஆசை. அதைக் கூட இதுவரை நிறைவேற்றாமல் இருப்பது தவறானது. அவரது விருப்பப்படி சாதாரண கல்லறையில் அவரது உடல் அடக்கம் செய்யப்படும்.

மிகவும் மரியாதைக்குரிய இடத்தில், மரியாதையான, கௌரவமான முறையில் லெனின் உடல் அடக்கம் செய்யப்படும். தற்போது லெனின் உடல் அடங்கியுள்ள நினைவிடம், சோவியத் வரலாற்று நினைவிடமாக மாற்றப்படும் என்றார் அவர்.

லெனின் உடலை அடக்கம் செய்ய ரஷ்ய அரசு தீர்மானித்திருப்பதையே மெடின்ஸ்கியின் பேச்சு குறிப்பிடுவதாக கருதப்படுகிறது. லெனினின் தாயார் செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் அடக்கம் செய்யப்பட்டார். அவரது கல்லறைக்கு அருகிலேயே லெனின் உடலும் அடக்கம் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மறைந்த சோவியத் தலைவர் ஸ்டாலின் உத்தரவின் பேரில் லெனின் உடல் பதப்படுத்தப்பட்டு பாதுகாப்புடன் மக்கள் பார்ப்பதற்காக வைக்கப்பட்டது. அன்று முதல் இன்று வரை அவரது உடல் அடக்கம் செய்யப்படாமலேயே இருந்து வருகிறது.தற்போதைய ஜனாதிபதி புடின் கூட லெனின் உடலை அடக்கம் செய்வதை தாமதப்படுத்தியே வந்துள்ளார். மூத்த ரஷ்யர்களால் லெனின் ஒரு மாபெரும் தலைவராக இன்று வரை மதிக்கப்படுவதால் லெனின் உடலை அடக்கம் செய்ய புடின் தயங்குவதாகத் தெரிகிறது.

# மியன்மாரில் அவசர நிலைமை பிரகடனம்



மியன்மாரின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள ரக்கீன் மாநிலத்தில் பௌத்தர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல்களில் 17 பேர் கொலலப்பட்டதுடன், பொது சொத்துக்களுக்கும் சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கடந்த மாதம் பௌத்த பெண்ணொருவர் கொலை செய்யப்பட்டதை தொடர்ந்து, முஸ்லிம்களை ஏற்றிய பஸ் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக அந்த நாட்டுத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. குறித்த பகுதியில் இடம்பெற்ற வன்முறைகளை அடுத்து ஜனாதிபதி தெய்ன் செய்ன் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளதாக தெியவருகின்றது.

# நாவாந்துறை நித்தியவெளி சபிக்கப்பட்ட பிரதேசமா?

## வசந்தம் வீசுவது எப்போது?

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை நித்தியவெளிப் பகுதி மக்கள் அடிப்படை வசதிகளின்றி தாம் பெரும் துன்பப்படுவதாக கண்ணீர் மல்க தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் 44 குடும்பங்கள் வாழ்ந்து வருவதுடன் திருடர்கள் மத்தியிலும் விஷ ஜந்துக்கள் மத்தியிலும் மிகவும் அல்லலுற்று வாழ்கின்றார்கள்.

மழை காலங்களில் ஏற்படும் வெள்ளப்பெருக்கினால் இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும் கோவில்களிலும் வாழ்க்கை நடத்தும் இப்பகுதி மக்களுக்கு மின்சார வசதி, வீதி விளக்குகள் இன்றி இருளில் வாழ்ந்து வருகின்றனர்.

இப்பிரதேசத்தின் அபிவிருத்தி முகாமைத்துவக் குழுவினர் இலங்கை மின்சார சபையிடம் தமது பிரதேசத்திற்கு மின்சாரம் வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கை மின்சார சபையினர் 200 மீற்றர் தூர பாதைக்கு மின்கம்பம் நடுவதற்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணம் செலுத்துமாறு தெரிவித்துள்ளனர்.

தமது அன்றாட வாழ்க்கைக்கு தேவையானவற்றை பெறுவதற்கு மிகவும் கஷ்டப்பட்டு வரும் தம்மிடம் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா தருமாறு கேட்பது நியாயமானதாக இருக்குமா என அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

மின்சார வசதி, மலசலகூட வசதி, தண்ணீர் வசதி எதுவும் இல்லாத நிலையில் பெரும் அவலப்படும் இம்மக்கள் இவற்றைப் பெறுவதற்கு பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். குறிப்பாக பெண்கள், சிறுவர்கள் மலசலகூட பாவனைக்கு வீதியைக் கடந்து செல்லவேண்டிய நிலை காணப்படுவதாகவும், இதனால் தாம் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாவதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், பொது நிறுவனங்கள் அப்பகுதிக்கு சென்று மக்களின் தேவைகளை ஓரளவேனும் நிறைவேற்ற முன்வரவேண்டும்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் எனப் பலர் தம்மை பார்ப்பதும் பார்த்து விட்டு படம் எடுத்துச் செல்வதாகவும் அதன் பின்னர் தம்மை யாரும் கவனிப்பது இல்லை என இப்பகுதி மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

பாடசாலை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை மேம்படுத்த முடியாத நிலையும் காணப்படுகின்றது. (எஸ்)

### சாட்சியமளித்த...

திட்டமிடப்பட்டுள்ளதாக இவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

எனினும், நல்லிணக்க ஆணைக குழுவின் முன்னிலையில் சாட்சியம் அளித்தோரை சந்திப்பதற்கு அனுமதி வழங்குமாறு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் பணியகம் அரசாங்கத்திடம் உத்தியோகபூர்வமாக கோரிக்கை விடுத்ததா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை.

# அரியாலை வீதிப் புனரமைப்பு மக்கள் பங்களிப்புடன் இன்று ஆரம்பம்

நெல்சிப் திட்டத்தின் மூலம் சுமார் 18.5 மில்லியன் ரூபா செலவில் அரியாலை மணிப்புரி தென்கிழக்கு வீதியை ஏனைய வீதிகளுடன் இணைக்கும் வேலைத்திட்டம் இன்று பி.ப. 3.00 மணிக்கு மக்கள் பங்களிப்புடன் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இவ்வீதி புனரமைப்பு நடவடிக்கையின் ஆரம்பகட்ட நடவடிக்கையாக நேற்று சனசமூக நிலைய சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் சந்திராதேவி சுபாஸ்சந்திரன், தொழில்நுட்ப உத்தியோகத்தர் திருமதி கிருஸ்ணவேணி, நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பி நல்லூர் பிரதேச அமைப்பாளருமான அ.இரவீந்திரதாஸன், பிரதேச சபை தவிசாளர் வசந்தகுமார் ஆகியோர் பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

மக்கள் பங்களிப்புடனான இப்பணியில் கிராம அபிவிருத்திச் சங்கம், மகளிர் அமைப்புக்கள் என்பன இணைந்து செயற்படவுள்ளன.

அத்துடன் உதயபுரம் கடற்கரை வீதிக்கும் சுமார் 19 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் இவ் அபிவிருத்தி வேலைகள் யாவும் அமைச்சர் டக்ளஸ் தேவாநந்தாவின் பணிப்புரைக்கமைய உள்ளூராட்சி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படவுள்ளது.



# புதிய சாதனையுடன் கிண்ணம் வென்ற நடால்

(பரிஸ்)

பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பட்டத்தை ஸ்பெயின் ரபேல் நடால் கைப்பற்றினார். இதன் மூலம் இப்பட்டத்தை தொடர்ச்சியாக ஏழு முறை வென்ற வீரர் என்ற சாதனையையும் அவர் படைத்துள்ளார்.

பிரான்ஸ் தலைநகர் பரிஸில் பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் போட்டி நடைபெற்று வருகிறது. இத்தொடரின் ஆண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டியில் உலகின் முதல் நிலை வீரரான சேர்பியாவின் நோவக் ஜோகோவிச்சும், இரண்டாம் நிலை வீரரான ஸ்பெயினின் ரபேல் நடாலும் மோதினர். நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப்போட்டியில் அபாரமாக ஆடிய நடால் முதல் இரண்டு செட்களை 6-4, 6-3 என கைப்பற்றி அசத்தினார். அதன் பின்னர் சுதாகரித்துக்கொண்ட ஜோகோவிச் மூன்றாவது செட்டை 6-2 என்ற கணக்கில் தன் வசமாக்கினார். நான்காவது செட் ஆட்டத்தில் ஜோகோவிச் 2-1 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தபோது திடீரென மழை பெய்ததால் ஆட்டம் தடைப்பட்டது. தொடர்ந்து மழை பெய்து வந்ததால் ஆட்டம் நேற்று நடைபெறும் என்று நடுவர்கள் அறிவித்தனர். இதையடுத்து நேற்று தொடர்ந்து ஆட்டம் நடைபெற்றது. நடால் கடைசி செட் ஆட்டத்தில் 7-5 என முன்னிலை பெற்று பிரெஞ் ஓப்பன் பட்டத்தை வென்றார். இதன்மூலம் 7ஆவது முறையாக கிராண்ட் ஸ்லாம் பட்டம் பெற்ற முதல் வீரர் என்ற பெருமையையும் நடால் பெற்றார். 6 முறை பிரெஞ் ஓப்பன் பட்டத்தை வென்ற பிஜோர்ன் போர்க் என்பவரது சாதனையையும் நடால் முறியடித்துள்ளார். அத்துடன் இதுவரை நடால் பங்குபற்றிய 53 பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் போட்டிகளில் 52 ஆட்டங்களில் வென்று சாதனை படைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

### இருளில்...

இலங்கையின் திட்டங்கள் தொடர்பாக தமக்கு ஏதும் தெரியப்படுத்தாமல் இருளில் விட்டுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு மீது அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

ஆனால் இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள வெளிவிவகார அமைச்சின் செயலர் கருணாதிலக அமுனுகம, தாமரா குணநாயகம் விடுமுறையில் இருப்பதாக கூறியுள்ளார்.

ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தர பிரதிநிதியான தமரா குணநாயகத்துக்குப் பதிலாக, அடுத்த மாதம் ரவிநாத் ஆரியசிங்க பொறுப்பேற்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது

### அமெரிக்க....

பிரச்சினைகளை கையாள்வதற்கான பொறிமுறை உட்பட இலங்கை பற்றிய அமெரிக்காவின் நீண்ட கால கொள்கையை அவருடைய கூற்று மீள வலியுறுத்தியது.

கடந்த மாதம் வொஷிங்டனில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்டனை சந்தித்த போது பேசப்பட்ட விடயங்களையும் அவரது கூற்று பிரதிபலிக்கின்றது.

அத்துடன் அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான விரிவான கூட்டு செயற்பட்டுக்கான அவசியத்தையும் தனது அறிக்கையில் அவர் குறிப்பிட்டிருந்தார் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மரணதண்டனை...

செய்ததாக பூதத்தம்பி முருகானந்தன், பூதத்தம்பி மகேந்திரன் ஆகிய 2 சகோதரர்கள் மீது சட்ட மா அதிபரினால் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

2005 ஆம் ஆண்டு ஆனி மாதம் 8 ஆம் திகதி யாழ். மேல் நீதிமன்றத்தில் முன்னாள் நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா முன்னிலையில் யூரர் சபையுடன் இவ்வழக்கு விசாரணை செய்யப்பட்டது.

விசாரணை முடிவில் யூரர் சபையின் தீர்ப்பின்படி 2 எதிரிகளுக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. சட்ட மா அதிபர் சார்பில் அரச சட்டவாதி சுகந்தினி கந்தசாமியும், எதிரிகள் தரப்பில் காலம்சென்ற சட்டத்தரணி எம்.சபாநாதனும் ஆஜராகியிருந்தனர்.

மரணதண்டனையை ஆட்சேபித்து எதிரிகள் இருவரும் மேன்முறையீடு செய்திருந்தனர். மேல் முறையீட்டை ஆராய்ந்த நீதிமன்றம் எதிரிகளால் எழுப்பப்பட்ட ஆட்சேபனையை ஏற்றுக்கொண்டு மரண தண்டனையை தள்ளுபடி செய்ததுடன், புதிய விசாரணைகளுக்கும் உத்தரவிட்டது.

நேற்று இவ்வழக்கு யாழ்.மேல் நீதிமன்றில் நீதிபதி ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது அரச சட்டவாதி தவணை கோரியதையடுத்து விசாரணையை அடுத்த மாதம் 12 ஆம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

சட்ட மா அதிபர் தரப்பில் அரச சட்டவாதி வி.திருக்குமரனும், எதிரிகள் சார்பில் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தாவும் ஆஜரானார்கள். (137)

### கட்டுத்துவக்கு...

உள்ள காட்டுப்பிரதேசத்தில் வேட்டைக்கு வைக்கப்பட்டிருந்த கட்டுத்துவக்கு வெடித்ததன் காரணமாக அங்கு மாடு மேய்த்தலில் ஈடுபட்டிருந்த தர்மலிங்கம் பிரதீபன் (வயது - 21) என்ற இளைஞர் படுகாயமடைந்திருந்தார்.

குறித்த பகுதிக்கு அருகில் வைத்தியசாலை எதுவுமற்ற நிலையில் படையினரது உதவியுடன் அவர் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டிருந்தார். இவரது ஒரு கால் துடைப்பகுதியுடன் அகற்றப்பட்டிருந்த நிலையிலேயே நேற்றுக்காலை சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். (பா)

### உதயன்...

ஆகியோரை ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜேதாச ராஜபக்ஷ பிரதிநிதித்துவப்படுத்துகிறார்.

செய்திகளை திரித்தும் மறைத்தும் வெளியிட்டு வருவதற்காக 'உதயன்' நிறுவனத்தினரிடம் ஆயிரம் கோடி ரூபா இழப்பீடு கோரி அமைச்சர் தேவானந்தா இவ் வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### மருத்துவர்கள்...

கூட்டமொன்றை நடத்தவுள்ளது. இக்கூட்டத்தில் பல பயனுறுதிமிக்க தீர்மானங்கள் எடுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### சம்பள உயர்வு...

இந்த ஆர்ப்பாட்டத்தில் சம்பள முரண்பாட்டை நீக்கு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவே அசமந்தப் போக்கைக் கைவிடு போன்ற சுலோகங்களை கைகளில் ஏந்தியவாறும் பல்கலைக்கழக சுவர்களில் சம்பள உடன்படிக்கையை உடனே நடைமுறைப்படுத்து, 25 வீத கொடுப்பனவை வழங்கு போன்ற சுவரொட்டிகளை ஒட்டியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

உயர்கல்வி அமைச்சும், தொழில் திணைக்களமும் இணைந்து கல்வி சார் ஊழியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்குவதாக தமக்கு உறுதிமொழி வழங்கும் வரை தமது போராட்டம் கைவிடப்பட மாட்டாது என்று யாழ். பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர் சங்க தலைவர் சி.தங்கராஜா ஆர்ப்பாட்டத்தின் போது தெரிவித்தார்.

அதேவேளை, யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்திற்கான தற்காலிக விரிவுரையாளர் நேற்று நியமிக்கப்படவிருந்த தருணத்தில் தொழிற்சங்க குழுவின் தலையீட்டினால் நியமனம் வழங்கும் நிகழ்வும் நிறுத்திவைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (எஸ்,பா)

### தமிழ் மக்களின்...

பாதுகாப்பு மற்றும் சுதந்திரம் என்பவை தொடர்பில் ஆக்கபூர்வமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே இந்தியாவின் விருப்பம் எனவும் அவர் தெரிவித்தார்.

உள்நாட்டில் மாத்திரமல்லாது வெளிநாடுகளுக்கும் இடம்பெயர்ந்து சென்றுள்ள இலங்கைத் தமிழர்கள் அனைவரும் அவர்களின் சொந்த இடங்களிலேயே மீள்குடியமர்த்தப்பட வேண்டும். இதற்காகவும் இந்தியா நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து சுதர்சன நாச்சியப்பன் தொடர்ந்தும் கூறுகையில்,

யுத்தத்தின் போதும் அதற்கு பின்னரும் இலங்கையின் விடயங்கள் குறித்து இந்தியா அவ்தானிப்புடனேயே உள்ளது. குறிப்பாக இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகள், அதற்கான தீர்வுகள் என்பன தொடர்பில் உள்நாட்டு அரசுடன் பல முறை பேச்சுவார்த்தைகளையும் முன்னெடுத்து வருகின்றது.

எனவே இலங்கை வாழ் தமிழ் உறவுகளின் பிரச்சினைகளுக்கான தீர்வில் தெளிவான நிலைப்பாட்டிலேயே இந்தியா உள்ளது. அரசியல் தீர்வு மாத்திரமல்ல, மீள்குடியேற்றம், கலாசார மரபுரிமைகள் என்பவற்றை பேணிப் பாதுகாக்க வேண்டும். வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டும் போன்ற பல தரப்பட்ட விடயங்கள் குறித்து இந்தியா அவதானம் செலுத்தியுள்ளது.

இறுதியாக இலங்கைக்கு விஜயம் செய்தபோது அங்கு தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் நிகழ்கால பிரச்சினைகளை அவதானித்தோம். குறிப்பாக மெனிக்பாம் முகாம் மக்கள் இன்னும் துரதிஷ்டவசமான வாழ்க்கையினையே எதிர்கொள்கின்றனர். இவ்வாறான இன்னும் தீர்க்கப்படாத காணாமல் போனவர்களின் விடயம் என்பவை தொடர்பில் மத்திய அரசுக்கு தெளிவுபடுத்தியுள்ளோம்.

# உயிர் குடிக்கும் வீதி விபத்துக்கள் முதல் காலாண்டில் 8 பேர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இந்த வருடத்தின் முதல் காலாண்டு பகுதியில் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்ற விதி விபத்துக்களில் 8 பேர் உயிரிழந்திருப்பதாகவும் 914 பேர் காயங்களுக்குள்ளாகி சிகிச்சை பெற்றுள்ளதாகவும் அரச வைத்தியசாலைகளில் இருந்து பெறப்பட்ட புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ். போதனா வைத்தியசாலையில் மட்டும் இந்த காலப் பகுதியில் 6 பேர் பலியாகியிருப்பதாகவும் 740 பேர் காயமடைந்து சிகிச்சை பெற்றிருப்பதாகவும் தெரியவருகின்றது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலும் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையிலும் தலா ஒருவர் பலியாகியிருப்பதாகவும் தெரியவருகின்றது.


இவ்விரு வைத்தியசாலையிலும் முறையே 31, 29 பேர் சிகிச்சை பெற்றிருப்பதாகவும் தெரியவருகின்றது.

இவற்றை விட சாவகச்சேரி வைத்தியசாலையில் 31 பேரும், அச்சுவேலி வைத்தியசாலையில் 38 பேரும், கோப்பாய் வைத்தியசாலையில் 23 பேரும், வேலணை வைத்தியசாலையில் 8 பேரும், சங்கானை வைத்தியசாலையில் 6 பேரும், காறைநகர் வைத்தியசாலையில் 3 பேரும், ஊர்காவற்றுறையில் 3 பேரும், வல்வெட்டித்துறையில் இருவரும் சிகிச்சை பெற்றதாக அந்தப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை 2010 ஆம் ஆண்டில் குறித்த வைத்தியசாலைகளில் வீதி விபத்துக்களின்போது 22 பேர் மரணமடைந்தும் 1327 பேர் சிகிச்சை பெற்றும் உள்ளதுடன், 2011 ஆம் ஆண்டில் இந்தத் தொகை மேலும் அதிகரித்து 37 பேர் மரணமடைந்ததுடன், 1785 பேர் சிகிச்சை பெற்றுமிருந்தனர்.

இருந்தும் அந்தத் தொகை 2012 இல் மேலும் அதிகரிக்கும் சாத்தியங்கள் தென்படுவதாக அந்தப் புள்ளி விபரங்களில் மேலும் தெரிவித்துள்ளன. (பா)

# குடிவரவு எல்லைக்கட்டுப்பாடு இன்ரபோல் தரவுதளமுடன் இணைப்பு




இலங்கை எல்லைப் பாதுகாப்பு முறைமையுடன் இன்ரபோல் தரவு சேவையை ஒன்றிணைத்தமையால் இலங்கையின் எல்லைப் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்த செயற்றிட்டத்துக்கு நிதியளித்த கனடா அரசாங்கத்துக்கு அவர் நன்றி தெரிவிப்பதாகவும் நேற்றைய தினம் இத்திட்டத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய அவர் கூறினார்.

இவ்வாறு தரவுத்தள சேவைகள் இணைக்கப்படுவது தென் ஆசியாவில் இதுவே முதல் தடவையாகும். இந்த முறைமையால தொலைந்துபோன அல்லது திருட்டப்பட்ட பயண ஆவணங்களை திரும்ப வழங்கவல்லது. இதில் சரவதேச குற்றவாளிகளின் புகைப் படங்கள், விரலடையாலங்களைப பெற்றுக்கொள்ளவும் முடியும்.

2004 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த முறைமையில் 2011 நவம்பரில் 32 மில்லியன் பதிவுகள் சேர்த்து வைக்கப்பட்டிருந்தன. இன்ரபோல் முறைமையில் உலகெங்கும் உள்ள 187 நாடுகள் காணப்படுகின்றன.

மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் சத்துர டி சில்வாவின் வழிநடத்தலின் கீழ் ஈ.பி.ஐ.சி. லங்கா மற்றும் இன்போமேற்றிக் இன்டர்நெஷனல் லிமிடெட் நிறுவனத்தால் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிகழ்வில் கனேடிய உயர்ஸ்தானிகர் புரூஸ் லெவி மற்றும் குடிவரவு, குடியகல்வு பணிப்பாளர் நாயகம் சூலானந்த பெரேரா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# அதிகாரி கொலை சிப்பாய்க்கு பிணை

(திருநெல்வேலி)

இராணுவத்தைச் சேர்ந்த கனிஷ்ட அதிகாரி ஒருவரைச் சுடடுக்கொன்ற சிப்பாய் ஒருவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். கடந்த ஐந்து மாதகாலமாக இவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த சந்தனங்காவ என்னும் இடத்தைச் சேர்ந்த அமரசிங்க தனுஷ்க சஞ்ஜீவ (வயது-23) எனபவர் கடந்த வருடம் மார்கழி மாதம் 29 ஆம் திகதி பூநகரி சங்குப்பிட்டியில் பிரசன்ன பலவத்த என்னும் கனிஷ்ட நிலை அதிகாரியைச் சுட்டுக்கொன்றதாக சாவகச்சேரிப் பொலிஸாரினால் காவகசசேரி நீதிமன்றில் குற்றப் புகார் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குறித்த சந்தேக நபரின் சார்பில அவரது சகோதரி நிமாஷா பிரியதர்சினி சட்டத்தரணி ஷர்மினி விக்னேஸ்வரன் மூலம் யாழ். மேல் நீதிமன்றில் பிணை மனுத் தாக்கல் செய்திருந்தார்.

இப்பிணை மனு மீதான இரு தரப்பு வாதங்களையும் அடுத்துச் சந்தேகநபரை தலா ஒரு இலட்சம் ரூபாவுக்கு இரண்டு ஆட்பிணையிலும், ரொக்கப் பிணையிலும் செல்வதற்கு யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி ஜெ.விஸ்வநாதன் உத்தரவிட்டார். அரச தரப்பில் அரச சட்டவாதி வி.திருக்குமரனும், எதிரி சார்பில் சட்டத்தரணி ஸ்ரீகாந்தாவும் ஆஜராகினர்.(137)

# இன்னர் சிற்றி ஊடகவியலாளர் பாலித கொஹன்னவிடம் பண மோசடி

இலங்கைக்கு எதிராக செய்திகளை வெளியிட்ட காரணத்தினால் ஊடகவியலாளர் லீக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை என இன்னர்சிற்றி பிரஸ் ஊடகம் தெரிவித்துள்ளது. இலங்கை ஊடகங்களில் இந்தத் தகவல் திரிபுபடுத்தி பிரசுரிக்கப்பட்டுள்ளதாக சுடடிக்காட்டப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் விவகாரம் தொடர்பான செய்தி சேகரிப்பில் ஈடுபடும் ஊடகவியலாளர் மத்தேயூ லீக்கு எதிரான விசாரணைகள் தொடர்பான செய்திகள் இலங்கை ஊடகங்களில் பிழையாக வெளியிடப்பட்டுள்ளன.

உண்மையில் இலங்கைக்கு பாதகமான செய்திகளை வெளியிட்ட காரணத்தினால் லீக்கு எதிராக விசாரணை நடத்தப்படவில்லை என குறித்த ஊடகம் தெரிவித்துள்ளது. எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஐக்கிய நாடுகள் உடன்படிக்கை பிரிவின் பொறுப்பாளராக தற்போதைய இலங்கை வதிவிடப் பிரதிநிதி பாலித கொஹன்ன கடமையாறறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாலித கொஹன்னவிடம் மோசடியான முறையில் வாடகைப் பணத்தைப் பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலேயே இன்னர்சிற்றி பிரஸ ஊடகவியலாளர் மத்தேயூ லீக்கு எதிராக விசாரணை நடத்தப்படுவதாக இன்னர் சிற்றி பிரஸ் தெரிவித்துள்ளது.

# நான்காயிரம் பேருக்கு ஆசிரிய நியமனங்கள்



தொழில்நுட்ப பட்டதாரிகள் ஆயிரம் பேருக்கும் கல்வியியற் கல்லூரியில் டிப்ளோமா கற்கை நெறிகளை முடித்துக்கொண்ட மூவாயிரம் பேருக்கும் இம்மாத இறுதிக்குள் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் 29 ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபகஷ தலைமையில் நியமனங்கள் வழங்கப்படுமெனவும் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இவர்களுக்கான நியமனங்களில் பாடசாலைகளும் குறிப்பிடப்பட்டிருக்கும்.

டிப்ளோமா பயிற்சி நெறிகளை முடித்துக்கொண்ட மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரியின் 123 மாணவர்கள், அட்டாளைச்சேனை கல்வியியற் கல்லூரியின் 127 மாணவர்கள், யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரியின் 145 மாணவர்கள், தர்கா நகர் கல்வியற் கல்லூரியின் 88 மாணவர்கள், ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியின் 107 மாணவர்கள் மேலும் மகாவலி கல்வியியற் கல்லூரி . திங்குவநில்வளவ கல்வியியற் கல்லூரி உட்பட 17 கல்வியியற் கல்லூரிகளைச் சேர்ந்த மூவாயிரம் மாணவர்களுக்கு ஆசிரியர் பதவிக்கான நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும்.

பாடசாலையில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யும் வகையிலேயே ஆசிரியர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படுகின்றன.

நியமனம் பெறும் ஆசிரியர்கள் ஆகக்குறைந்தது ஐந்து வருடங்களாயினும் குறித்த பாடசாலையில் கடமையாற்ற வேண்டும். எவ்வித அரசியல் செல்வாக்கு மற்றும் அதிகாரங்களைக் கொண்ட நியமனம் பெற்றுக்கொண்ட ஆசிரியர்களின் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படக் கூடாது என்பதில் ஜனாதிபதி உறுதியாகவுள்ளாரெனவும் அமைச்சர் பந்துல குணவர்தன மேலும் தெரிவித்தார்.

# சிறுமி மீது வன்புணர்வு இளைஞருக்கு எச்சரிக்கை

(திருநெல்வேலி)

கொடிகாமத்தில் சிறுமியொருத்தியைப் பாலியல் வன்புனர்வுக்குட்படுத்திய இளைஞனுக்குச் சாவகச்சேரி நீதிமன்றம் நேற்று கடுமையான எச்சரிக்கை விடுத்தது.

இவ்வழக்கில் கொடிகாமத்தைச் சேர்ந்த 7 வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக 18 வயது வாலிபர் ஒருவர சாவகச்சேரி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு சாவகச்சேரி நீதிமன்றில் முன்னிலைப் படுத்தபபட்ட போது அவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தார். மூன்று மாதங்களாக இவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் நேற்று இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட சிறுமியின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கே.சுகாஸ் நீதிவான் லெனின் குமாரிடம் விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்தார். சந்தேகநபர் சிறுமி வசிக்கும் வீட்டிற்குப் பக்கமாகவும், பாடசாலைச் சூழலிலும் அடிக்கடி சுற்றிவருவதாகவும், இதனால் சிறுமி மிகவும் பயந்த நிலையில் காணப்படுவதாகவும் நீதிமன்றுக்கு சமர்ப்பணம் செய்தார். சாவகச்சேரி பொலிஸாருமஇது சம்பந்தமான அறிக்கையைச் சமர்ப்பித்தனர்.

விசாரணையை மேற்கொண்ட நீதவான் சந்தேக நபருக்குக் கடுமையான எச்சரிக்கையை விடுத்தார். சிறுமியின் வீட்டுப்பக்கமோ, பாடசாலை சூழலிலோ சந்தேகநபர் இனிமேல் காணப்படுவாரானால் அவரது பிணை உடனடியாக இரத்துச்செய்யப்பட்டு அவர் விளக்கமறியலில் வைக்கப்படுவார் என எச்சரிக்கைக்கு உட்பட்டு வழக்கை எதிரவரும் 28 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (137)

# தேர்தல் நடைபெறும் சாத்தியம் இந்த வருடத்தில் இல்லை

## என்கிறார் ஆணையாளர்

இந்த வருடத்தில் தேர்தல்கள் எதனையும் நடத்தப்படக்கூடிய சாத்தியம் இல்லையென தேர்தலகள் ஆணையாளர் மகிந்த தேசபபிரிய தெரிவித்துள்ளார். தேர்தல் திணைக்கள நாட்காட்டியின் அடிப்படையில். இந்த ஆண்டில் இடைத்தேர்தல்கள் எதனையும் நடத்தக்கூடிய வாய்ப்புக் கிடையாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சில மாகாணசபைகள் கலைககப்பட்டு தேர்தல் நடத்தப்பட உளளதாக வெளியாகும் தகவல்கள் பற்றி தமக்கு எதுவும் தெரியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாகாணசபைத் தேர்தல் நடத்துவது குறித்து இதுவரையில் அரசாங்கம் எதனையும் அறிவிக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார். மூன்று மாகாண சபைகள் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்பட உள்ளதாக செய்தித்தாள் வழியாக அறிந்துகொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்த ஆண்டில மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

ஆட்சிக் காலம் முடிவடையும் முன்னரே சில மாகாணசபைகள் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படலாம் என குறிப்பிட்டுள்ளது.

வட மத்திய, கிழக்கு மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாணசபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக பவ்ரல் அமைப்பின் தலைவர் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

2013 ஆம் ஆண்டில் சகல மாகாணசபைகளுக்குமான தேர்தல்களை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதே தமது கோரிக்கை என அவர் குறிப்பிட்டுள்ளார். மாகாண சபைக் கலைப்பு மற்றும் தேர்தல் தொடர்பில் அரசாங்கம் இதுவரையில் எவ்வித உத்தியோகபூர்வ அறிவிப்புக்களையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும், கிழக்கு மாகாணசபை உள்ளிட்ட மாகாணசபைகளுக்கு தேர்தல் நடத்தப்பட உள்ளதாகவும் அதற்கான வேட்பாளர் தெரிவு, பிரசாரம் போன்ற முன் ஆயத்த நடவடிக்கைகளில் பல அரசியல் கட்சிகள் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 யூன் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.